Registered as a News Paper in Sri Lanka

පක්කම් 24 ரூபா 16/50

දිනමුරසු වාරමලර්

மார்ச். 10 - 16, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NAT

முரசு 605



## பொறுமையின் எல்லையில் புலிகள்

## பெண்களை வதைக்கும் வயோதிபர்கள்


## நிவாரணத்துக்காக போராடும் மக்களின் குற்றச்சாட்டுக்கள்



## குளிர்ச்சியான சினிவிசிட்

## நல்வழி காட்டும் கை விளக்கு

## ஆன்மீகம்



எப்படியும் வாழலாம் என்ற எண்ணத்துடன் எத்தனையோ மனிதர்கள் தப்பான வழியில் தங்கள் வாழ்க்கை வண்டியை இழுத்துச் செல்கின்றனர். இப்படித்தான் வாழவேண்டும் என்ற வரையறை வகுத்து வாழ முடியாதபடி அவர்களது எண்ணமும் செயலும் இழுபடுவதுதான் காரணம்.

சமய சம்பந்தமான அறிவு தக்க நேரத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஊட்டப்பட்டாததும் ஒரு வகையில் கெட்ட வழியில் செல்ல வைத்துவிடுகிறது.

இளமையில் இருந்தே ஆலய வழிபாடு, ஆன்மீக ஈடுபாடு, படிப்பினையூட்டும் சமய சம்பந்தமான தத்துவங்களை அறிந்துகொள்ளாததும், ஈனச் செயல்களுக்கும் இறைவனுக்கும் பயப்படாத போக்குமே இப் பாரிய பயண மாற்றத்துக்குக் காரணமாகும்.

சீரழிக்கும் சினிமா, துர்நடத்தையைத் தூண்டும் போதைவஸ்து, துர்ப்புத்தி சொல்லும் தோழர்கள் இப்படியான பல கெடுக்கும் காரணிகளில் எடுப்பார் கைப்பிள்ளையாக விழுந்தவர்களால் நல்ல மனிதனாக எழுந்து நடமாட முடியாது போய்விடுகிறது. இதனைத் தடுக்க சமய அறிவும் ஆலய தரிசன பழக்க வழக்கங்களும் அவசியம் வேண்டும். அதுவே நல் வழிகாட்டும் கைவிளக்கு!

*-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.*

## செவி கொடுங்கள்

நீங்கள் உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள். நீங்கள் ஏன் சாக வேண்டும். நோவா காலத்தில் வாழ்ந்த மக்கள் மனம் திரும்பிப் பிழைப்பதையே தேவன் விரும்புகிறவராக இருந்தார். ஆனால் அக் காலத்தில் வாழ்ந்த மக்களோ தேவ எச்சரிப்புக்குக் கீழ்ப்படிந்து மனம் திரும்ப மறுத்ததால் அழிந்தார்கள். கடலிலே மீன் பிடிப்பதற்காக அநேகர் சென்றார்கள். அன்று கடலில் பெரிய புயல் வரப்போவதாக அவதானித்த வானிலை அவதானிகள் மக்களுக்கு எச்சரிப்பு விடுத்தார்கள். மக்களும் அதற்குத் தயாரானார்கள். கடலுக்குச் சென்றவர்களெல்லாம் உடனடியாகக் கரையேறிவிட்டார்கள். ஆனால் இரு சகோதரர்கள் மாத்திரம் ஆபத்து வெளிச்சத்துக்கோ மற்றவர்களின் எச்சரிப்புக்கோ செவிசாய்க்கவில்லை. இவ்வேளையில் கடலில் ஒரு படகு இருப்பதை அறிந்த உயிர்காப்பு நிலையத்தினர் படகில் வேகமாகச் சென்று, "திரும்புங்கள், திரும்புங்கள்! ஆபத்து" எனக் கூறியபோது அவர்கள் இருவரும் அசட்டையாக "கொஞ்சம் பொறுங்கள்; நாங்கள் வந்துவிடுவோம். எவ்வாறான புயலிலும் எங்களால் தண்டு வலித்துப் படகை ஓட்ட முடியும்" என்றனர். ஆனால் அன்று அவர்கள் கரையேறவில்லை. மறுநாள் இவர்களுடைய உடல்கள் கடலில் மிதந்தன; சகோதரனே! சகோதரியே! உனது நிலை எப்படிப்பட்டதாக இருக்கின்றது, இன்றே தேவ எச்சரிப்புக்குச் செவிகொடுங்கள். அப்பொழுது பிழைப்பீர்கள்.

*-ஆர்.பாலசந்திரன், அல்மா சீட்டன், கந்தப்பளை.*

## சுவர்க்கத்தில் பிரவேசிப்பவர்கள்

இஸ்லாம் மதம் சுத்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் மார்க்கம். இதனால்தான் இது சுத்தத்திற்கு உயர்ந்த அந்தஸ்தை வழங்கி பின்வருமாறு வகைப்படுத்தி விலக்கியுள்ளது.

ஒரு வகையான அசுத்தங்கள் 'நஜிஸ்' என்றும் வேறு ஒரு வகையான அசுத்தல்கள் 'பெருந் தொடக்கு' என்றும் மூன்றாம் வகையான அசுத்தங்கள் 'சிறு தொடக்கு' என்றும் கூறுகிறது.


இவ்வாறான அசுத்தங்கள் எம்மில் பட்டுவிட்டால் அதனை நாம் சுத்தமான நீரால் கழுவித் துப்பரவு செய்துகொள்ள வேண்டும். அல்லாஹ் அவன் சிருஷ்டி அன்றாடம் சுத்தமாக இருப்பதையே விரும்புகிறான்.

இறை தூதர் அவர்கள் கூறுகிறார்கள் "இஸ்லாம் மதம் தூய்மையானது. நீங்கள் தூய்மையைக் கடைப்பிடியுங்கள். ஏனெனில் தூய்மையானவர்களே நாளை மறுமையில் சுவர்க்கத்தில் பிரவேசிப்பவர்கள்."

*-எம்.சீ.கலீல், கல்முனை - 05.*

---

## கவிதைப் போட்டி இல.602




### பரிசுக்குரிய கவிதை

### பொம்மையோ நீ!

மாற்றுக் கருத்தினர் சாகும்போது
வாய் திறவா கண்காணிப்புக் குழு
பொம்மையோ நீ - அல்லது
தலையாட்டும் தமிழ்க் கூட்டமைப்பு
பொம்மையோ நீ - வாய் திறவாய்!
வாய் திறவாய்!!

-எம்.ராமமூர்த்தி, வெலிமடை.

### வாய்ப்பூட்டு!

இன்று
ஊடகங்களின்
கண்ணைக் கட்டி
வாயைப் பொத்தி
காய் நகர்த்தும்
எங்கள்
அனுமதியின்றி
மழலை மொழி
பேசும்
வாயானாலும்
ஆப்பு வைப்போம்
அதற்கும் என்ற
அடையாளமோ
இது?

*-ஓடையூரான், மீராவோடை.*

### சரியான முடிவு

ஒரு மனிதனின்
நல்ல உறுப்பும்
கெட்ட உறுப்பும்
'நா'
இதனைப்
பாவிப்பதில்
இப்படியொரு
பேணுதல்
சபாஷ்!
சரியான முடிவு.

*-எம்.சி.கலீல், கல்முனை - 05.*

### மனித நேயம்!

பேசுவதையும் பேசும் நேரத்தையும்
தீர்மானிக்கும் முடுக்கியை
வன்னியின் வன்மை இயக்க
உண்பதற்கும் உறங்குவதற்கும்
கழிப்பதற்கும் குளிப்பதற்கும்
ஆணைக்கு அடிபணியும்
மனித ரோபோ நம் பிரதிநிதி.

*-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.*

## கவிதைப் போட்டி இல.605



*எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 16.03.2005.*

கவிதைப் போட்டி இல.605
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### தலைவிதி

தமிழீழத் தாயகத்தில்
நீ பிறந்ததால்
பாலுக்குக்கூடப் புலிகளைக்
கேட்டுத்தான் அழ வேண்டும்
என்பதுதான் உன் தலைவிதியா?

*-ஏ.ராணி பெர்ணான்டோ, மன்னார்.*

### வரையறை!

இசகு பிசகாக
ஏதேனும் பேசிவிட்டால்
மண்டையிலும்
தொண்டையிலும்
வேட்டுக்கள் வீழ்ந்திடுமோ?
என்றதோர் அச்சந்தான்
வாய்க்கும் ஓர் வரையறை
வகுத்துக்கொள்ளத்
தூண்டியதோ சிறுவனுக்கு!

*-க.கமால்தீன், ஏறாவூர் - 03.*

### வாய்ப்பூட்டா இது?

சுனாமியே, சுனாமியே!
உன்னால்
சுக்கு நூறாகி
அனாதையாகிவிட்ட
எமக்கு
வெளியே பேச
முடியவில்லையே!
உதவிப் பொருட்கள்
உரியவர்களிடம்
வரவில்லையே
வாய்ப்புப்பூட்டா இது?
அல்லது....?

*-ஏ.எஸ்.எம்.ரவூப், கொழும்பு - 15.*

### அவசியம் தேவை

இனவாதிகளின்
கபாலங்களுக்குள்
கொதிக்கும் சரக்கைச்
சுயமாய்ச் சுத்திகரித்து
நஞ்சைக் கக்கும்
அவர்கள் நாக்குகளை
உள்ளிழுத்துப்
பூட்டிவைக்க
இப்படியோர் சாதனம்
அவசியம் தேவை
நம் நாட்டுக்கு!

*அ.சந்தியாகோ, கண்டி.*

### வயது வேறுபாடின்றி......

மாற்றுக்
கருத்துப் பேசும்
எங்களுக்குத்தான்
கொலை மிரட்டல்
என்றால்,
மனம் விட்டு
அழத் துடிக்கும்
மழலைக்குமா...?

*-சங்கம ஹிஷாம், திருகோணமலை.*

### ஏது சுதந்திரம்?

பத்திரிகைச் சுதந்திரமும்
தன் மனித சுதந்திரமும்
வன்முறை மீறல்களும்
ஒருமித்து ஆளும்
இந்த
சுதந்திர அடிமைத் தீவில்...
மாற்றுக் கருத்துக்கு
இடமில்லை
என்பதனாலோ.....
இந்தப்
பூந்தளிரின் வாயில்
ஆழிப்பூட்டு?

*-மீராமுகைதீன் ஹாலித், ஏறாவூர் - 03 ஏ.*

### அளவோடு பேச.....

அநியாயங்களைத் தட்டிக்
கேட்க
அச்சப்படும் இலங்கை
பிரஜைகளுள்
நானும் ஒருவன் -
அதனால்தான்
அளவோடு பேசி
ஆபத்தைக் குறைக்க இந்த
வழி.

*-சிஹ்னாஸ் தௌபீக், ஹுஸைனியாபுரம்.*

## உங்கள் பக்கம்

### பெருக்குவட்டான் அல்-மின்ஹாஜ் முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆசிரியர்கள் பற்றாக்குறை.......

புத்தளம் மாவட்டம் மதுரங்குளி கோட்டத்திற்கு உட்பட்ட அல் மின்ஹாஜ் முஸ்லிம் வித்தியாலயத்தில் பல வருட காலமாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. முந்தல் பிரதேசத்தில் மிகவும் வறிய கிராமமான பெருக்குவட்டான் கிராமத்தில் இப் பாடசாலை அமைந்துள்ளது.

எமது பாடசாலையில் 435 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களுக்கு 19 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். எனினும் இப் பாடசாலையில் 11 ஆசிரியர்கள் பெரும் தியாக மனப்பான்மையோடு கல்வி கற்பிக்கின்றனர். கணிதம், ஆங்கிலம், சிங்களம், சமூகக் கல்வி, ஆரம்ப நெறி போன்ற பாடங்களுக்கே ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். குறிப்பாக கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு கடந்த 5 வருடங்களாக ஆசிரியர்கள் இல்லாது மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப் பாடசாலையிலுள்ள பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளபோதும் க.பொ.த. சாதாரண தரம், 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை போன்றவற்றில் தொடர்ந்தும் அதி கூடிய பெறுபேறுகளை எடுத்து வருகின்றது. போதிய ஆசிரியர்கள் இல்லாத நிலையிலும் இவ்வாறான அதிகூடிய சித்திகளைப் பெற்றுக் கொடுப்பது இப் பாடசாலையின் விஷேட அம்சமாகும்.

எனவே பொருளாதார நிலையிலும் பௌதீக நிலையையிலும் பின்தங்கியுள்ள இப் பாடசாலையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதோடு மட்டுமின்றி உடனடியாக ஆசிரியர் குறைபாட்டையும் நிவர்த்தி செய்து தருமாறு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறோம்.

**-நஸீன் நஸ்மின், நஹ்மத்புரம்.**

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -4-514282
தொலை நகல் (Fax):-4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk




## வாசக(ர்) சாலை

### சரித்திரம் படைக்கட்டும்

என் இனிய முரசே!
நீ சுமந்து வரும்
அனைத்து அம்சங்களும்
இனிமையிலும் இனிமை.
உன் மலர்வு என்
மாநகரத்தில் பண்டிகை
போல்.
உன் சாதனைகள்
இன்னும்
சரித்திரம் படைக்க என்
இதய பூர்வமான இனிய
வாழ்த்துக்கள்.

*-எஸ்.எம்.தஸ்பிர், சாய்ந்தமருது - 03.*

### உன்னை வெல்ல எதுவுமில்லை

அன்று தொட்டு இன்றுவரை அழியாமல்
அழகாய் வரும் அற்புதத் தின முரசே!
உன் அளவில்லா அறிவிற்கு என்
மனமார்ந்த நன்றிகள் முதலில்!
நான் அழுதுகொண்டிருக்கையில்
ஆனந்தப் படுத்துகிறாய்! ஆனந்தமாய்
இருக்கையில் அருமையான
ஆக்கங்களைத் தந்து
மேலும் ஆனந்தமடையச் செய்கிறாய்.
ஆழமான அரசியல், அறிவுள்ள பாப்பா
முரசு,
அழ வைக்கின்ற சிறுகதையென
ஆயிரமாய்
உன்னுள்! உனக்குப் போட்டியாக எது
வந்தாலும்
உன்னை ஜெயிக்க முடியாதடி!!!
உனது சேவை வளர என்னைப் போன்ற
இளைஞர்களின் வாழ்த்து எப்போதும்
உனக்கே உரியது!

*-அ.ற.றியாஸ், தம்பலகமம்.*

### சேவை தொடரும்...

அன்பு முரசே!
உன் அட்டைப் படம்
எம்மை அசத்துகிறது. நீ
தரும் அனைத்து விடயங்களும்
அருமையிலும் அருமை.
தொடர்ந்து உன் சேவை மலர
என் வாழ்த்துக்கள்.

*-ஏ.ஜே.எப்.பஸ்னா, மல்வானை.*

### என் அன்பு முரசே!

வாரத்தில் ஒரு முறை
வருகின்ற தினமுரசே!
உன்னுடைய
ஆக்கங்கள் யாவும்
என்னுடைய மனதைக்
கவர்ந்தன.
அதிலும் குறுக்கெழுத்துப்
போட்டி, வாசகர் இதயம்,
கவிதைக் களம் போன்றவை
என் மனதைக்
கவர்ந்தவை. உன்னுடைய
வார இதழ் இன்று
போல் என்றும் மென்மேலும்
உயர வேண்டும்
என்று என் உள்ளத்தால்
வாழ்த்துகின்றேன்.
உன் பிரியமுள்ள நண்பி.

*-இ.உமாமதி, களுவாஞ்சிக்குடி.*

# கிழக்கு மீண்டும் கொலைக்களமாகிறது

## தடுத்து நிறுத்த அரசும் புலிகளும் உதவ வேண்டும்! மட்டக்களப்பு புத்திஜீவிகள் கோரிக்கை

"கிழக்கு மீண்டும் கொலைக்கள மாகிறது. புலி இயக்கத்தை விட்டு கிழக்குத் தளபதி கருணா அம்மான் வெளியேறி ஒரு வருடம் இம்மாத ஆரம்பத்தில் பூர்த்தியான கையோடு ஆரம்பித்த ஏட்டிக்குப் போட்டியான துப்பாக்கி வேட்டுக்களினால் இதுவரை பதினைந்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். ஆயுதப் படையினரும், புலிகளும் கருணா அணியினரும் ஒருவர் மீது மற்றவர் குற்றச்சாட்டுகளைச் சுமத்திவிட்டுத் தப்பிக்கொள்ளப் பார்க்கின்றனர். இக் கொலைகளால் தமிழ்ப் பெண்கள் விதவைகளாகிறார்கள். அப்பாவிச் சிறுவர்கள் அநாதைகளாகிறார்கள். எனவே முத்தரப்பினரும் இப் படுகொலைகளை நிறுத்த முன்வர வேண்டும்" என்று பிரபல பெண்ணிலைவாதியும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியையாகக் கடமையாற்றுபவருமான ஒரு பெண்மணி கேட்டுக்கொண்டார்.

கௌசல்யன் படுகொலையோடு கடந்த மாதமே கிழக்கில் முறுகல் நிலை தோன்றத் தொடங்கிவிட்டது. குவேனி மீதான தாக்குதலோடு இது நீறுபூத்த நெருப்பாக மாறிவிட்டது. கௌசல்யன் கொலை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிகழ்ந்ததால் இராணுவமே பொறுப்பென்று புலிகளும், கருணா அணியே பொறுப்பென்று உரிமை கோரலும் 'இது உள்வீட்டு விவகாரம்' என்று சந்தேகங்களும் கிளப்பப்பட்டிருக்கும் இத் தருணத்தில் உண்மையைக் கண்டறியும் நோக்கில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றினை ஜனாதிபதி நியமித்திருப்பது வரவேற்க கூடியது. கௌசல்யனின் படுகொலை ஐ.நா. வரைக்கும் எதிரொலித்த தென்பதால் மட்டுமல்ல, மனிதப் படுகொலைகளை மன்னிக்க முடியாதென்ற காரணத்தால் இவ் விசாரணைக் குழுவின் செயற்பாட்டுக்குச் சகலரும் ஒத்தாசை வழங்க வேண்டும். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற நீதிபதியொருவரும் மற்றுமொரு ஓய்வுபெற்ற பிரபல நீதிபதியொருவரும் இவ் விசாரணைகளை நடத்தவுள்ளனர். சர்வதேச நீதிமன்றத்திலிருந்து அவதானிப்பாளர்களும் அழைக்கப்படவுள்ளனர். இந்த நிலையில் இதனை 'வெறும் கண்துடைப்பு முயற்சி' என்று கூறி தமிழ்ச்செல்வன் தப்பிக்கழித்தமை வேதனைக்குரியது. புலிகள் விசாரணைக் குழு முன்னிலையில் வந்து தமது குற்றச்சாட்டுகளையும், அதற்கான ஆதாரங்களையும் அம்பலத்துக்குக் கொண்டுவந்து குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த உதவி புரிய வேண்டும் என்றும் தனது பெயரைப் பாதுகாப்புக் காரணங்களுக்காக குறிப்பிடவேண்டாமென்று கேட்டுக்கொண்ட இப் பேராசிரியை கூறினார்.


இதேவேளை, மட்டு. மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. செல்வி தங்கேஸ்வரி கதிராமனின் அந்தரங்க உதவியாளரான இரா.நாகலிங்கம் என்ற ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், "இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் கௌசல்யன் கொல்லப்பட்டதால் இராணுவமே பொறுப்பென நம்புகிறேன். இக் கொலைகள் நிறுத்தப்பட வேண்டும்" என்றார்.

## அராஜகத்துக்குப் பலியான அப்பாவிகள்

வெலிக்கந்தை, கொலக்கனா வெளியில் சுட்டுக் கொல்லப்பட்ட ஆறு பேரும் ஏழைக் கிராமவாசிகளாவர். அக்கரைப்பற்றைச் சேர்ந்த நான்கு முஸ்லிம்களும் நெல் அறுவடை காலத்தில் கூலி வேலை செய்வதற்காக அங்கு வந்து தங்கியிருந்த வர்களென்றும், புளொட் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினரான அர்ஜுன் செல்வ ராஜா என்பவர் சிங்களப் பெண்ணொருவரை மணமுடித்தவ ரென்றும், கொலையுண்ட சிங்களவர் அந்த வீட்டில் தங்கியிருந்தவ ரென்றும் கிராமவாசிகள் தெரிவித்தனர்.

## உலக வங்கிப் பிரதிநிதியின் தலை தப்பும்

வடக்கு, கிழக்கில் புலிகளின் உத்தியோகப்பற்றற்ற அரசொன்று இருக்கிறதென்றோ அல்லது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் உத்தியோக் பூர்வமாக அங்கீகரிக் கப்பட்டுள்ள னவென்றோ தான் கூறவில்லையென்று இலங்கையிலுள்ள உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். மேற்கண்டவாறு கூறினாரென்று 'சண்டே டைம்ஸ்' ஆங்கிலப் பத்திரிகை அவரது பேட்டியைப் பிரசுரித்திருந்ததையடுத்து அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், பிரதியமைச்சர் விஸ்வவர்ணபால மற்றும் ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய முக்கியஸ்தர்கள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பாதிக்கப்பட்ட பகுதிகளின் நிவாரணத்துக்கு நேரடியாக உலக வங்கி 600 கோடி ரூபாவை வழங்குமென்று தான் கூறவில்லையென்றும் அவர் மறுப்புத் தெரிவித்தார். தனது பேட்டியை மேற்படி பத்திரிகை தவறாகப் பிரசுரித்துள்ளதென்றும் அவர்



பீற்றர் ஹரோல்ட்

தெரிவித்துள்ளார். இந்த நிலையில் பீற்றர் ஹரோல்டின் தலை உருளாது என்று அரசாங்கத்துக்கு மிக நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## அமைச்சர் டக்ளஸ் கண்டனம்


வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர் தாயகப் பிரதேசங்களின் நிலத் தொடர்பைத் துண்டிக்க 1950 களிலிருந்து நான்கு தசாப்த காலமாகச் சிங்கள பேரினவாத அரசுகள் மேற்கொண்டுவந்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்திட்டங்கள் தமிழ் இளைஞர்களை ஆயுதமேந்திப் போராட முன்தள்ளிய பல காரணங்களுள் ஒன்றாகும். வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் ஒன்றிணைந்த தாயகமாக விளங்க வேண்டுமென்று வலியுறுத்தி வரும் நாம், இச் சூழ்ச்சியை யார் எந்த நவீன முறையில் மேற்கொண்டாலும் எதிர்போமென்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். கடந்த வாரம் திருமலை மக்கெய்ஸர் மைதானத்துக்கு அருகில் நூற்றுக்கு நூறு வீதம் சிங்களக் குடியேற்றத் திட்டங்களை மேற்கொள்ள எடுக்கப்பட்ட முயற்சி குறித்தும் அதற்குத் தமிழ் மக்கள் காட்டிய எதிர்ப்புக் குறித்தும் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## எச்சரிக்கை

கடற் பேரலைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாடுகளிலோ அல்லது இலங்கையின் வெளியிடங்களிலோ வேலை வாய்ப்பையோ அல்லது வசதிகளையோ பெற்றுத் தருவதாகக் கூறும் கும்பல்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு குடியேறுபவர்களுக்கான சர்வதேச அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. 2002ஆம் ஆண்டு இலங்கையில் முதன்முதலாகச் செயற்பட ஆரம்பித்த இந்தச் சர்வதேச அமைப்பு, தற்போது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, மாத்தறை, களுத்துறை ஆகிய இடங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் பணிபுரிகிறது. பாதிக்கப்பட்ட சுமார் பத்தாயிரம் பேருக்கு குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

## ஊவா பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிமூல நெறிகள்?

ஊவாவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கும் உரிய இடம் வழங்கப்பட வேண்டுமென்று மலையகத் தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தைக் கோரியுள்ளன. சுமார் நூறு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் இப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பத்தில் 140 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுவார்களென்றும் விவசாயப் பயிர்ச் செய்கைக் கற்கை நெறிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழிமூல பயிற்சி நெறிகளும் இங்கு ஆரம்பிக்கப்பட வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.



## காலமானார்

'உயிர்நிழல்' ஆசிரியர் கலைச்செல்வன் 05-03-2005, அதிகாலை இரண்டு மணியளவில் பாரிஸ் நகரில் மாரடைப்பினால் காலமானார்.

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு வறுத்தலைவிளானைச் சேர்ந்த கனகசிங்கம் - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் மூன்றாவது பிள்ளையாக அவதரித்த இவர், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாண வராவர்.

கடந்த 20 வருடகால பாரிஸ் நகரத்து புகலிட வாழ்வினை தேசத்தின் கலை, இலக்கியம், திரைப்பட முயற்சிகளுக்காவும் மற்றும் ஜனநாயக மறுப்புகளுக்கெதிரான செயற்பாடுகளுக்காகவும் மாற்றுக் கருத்துக்களை உருவாக்குவதற்காகவும் அர்ப்பணித்தார். ஐரோப்பிய தமிழ் சூழலில் இலக்கியச் சந்திப்பினூடாகவும், பள்ளம், எக்ஸில் போன்ற சஞ்சிகைகள் வாயிலாகவும் பின்னர் உயிர் நிழல் ஆசிரியராகவும் எக்ஸில் நூல் வெளியீட்டாளராகவும் எல்லோராலும் அறியப்பட்டவராக இருந்தார். பெண்ணியம், தலித்தியம், மனித உரிமை போன்ற கருத்தியல்கள் மீதும் அசையாத பற்றுக்கொண்டு தீவிர விவாதங்களில் ஈடுபட்டு வந்தவர்.

## என்றுமே சர்ச்சையான எம்.பி.

திருமதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவைத் தவிர ஜனாதிபதிப் பதவி வகிக்க வேறெவருக்கும் தகுதி இல்லையென்பதால், செயலாற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டுமென்று கூறியமைக்காக மேர்வின் சில்வா எம்.பி., சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்கள் பலரின் கண்டனங்களுக்கு இலக்காகியுள்ளார். முன்னாள் ஐ.தே.க. எம்.பியான இவர், பின்னர் ஹோட்டலொன்றில் ஏற்பட்ட கலாட்டாவொன்றையடுத்து அண்மையில் பிரதியமைச்சர் பதவியை இழந்தவரென்பதும் குறிப்பிடத் தக்கது. பாராளுமன்றத்துள் பாவிக்கக் கூடாத வார்த்தைகளைப் பிரயோகித்தாரென்றும் இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## மகா சிவராத்திரியில் மக்கள் வேண்டுதல்

திருக்கேதீஸ்வரத்திலும் வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களில் இம்முறை மகாசிவராத்திரி வெகு விமரிசையாக அனுஷ்டிக்கப்பட்டது. இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுத்திருந்தார். யுத்தத்தினாலும் கடற்பேரலை அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிம்மதியும் சுபீட்சமும் கிட்ட வேண்டி கேளிக்கைகளைத் தவிர்த்து, சமய அனுட்டானங்களுடன் மகாசிவராத்திரியை அனுட்டிக்குமாறு இந்துசமய அலுவல்கள் அமைச்சர் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

## இலங்கைத் தமிழர்கள் தென்கிழக்காசியாவில் ஆயுதக் கொள்வனவு

சுனாமிப் பேரலைத் தாக்கத்தினால் 2,100 கடற்புலிகள் உட்பட 2,800 போராளி களை இழந்த புலி இயக்கம், தனது கடற்புலியமைப்பை மீண்டும் கட்டியெழுப்புவதற்காகத் தென்கிழக்காசிய நாடுகளில் நவீனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வருகிறதென்று 'ஜேன்ஸ் இன்ரெலிஜென்ஸ் ரிவியூ' என்ற சஞ்சிகையின் ஆய்வறிக்கை கூறுகிறது. கடந்த மார்ச் மாதம் வெளியான இந்த அறிக்கையைப் பிரபல ஆய்வாளரான அன்ரனி டேவிஸ் என்பவர் எழுதியுள்ளார். முல்லைத்தீவில் சாலை, நாயாறு ஆகிய பகுதிகளிலுள்ள கடற்புலிகளின் தளங்களும் சில கடற்காவல் முகாம்களும் சுனாமிப் பேரலைக்குள் சிக்கி முற்றாக அழிந்து போனதாகக் கடந்த வருட பிற்பகுதியில் செய்திகள் வெளிவந்தமை குறிப்பிடத் தக்கது. இந்த அழிவு விபரங்கள் பற்றி எவ்வித தகவலையும் வெளியிட வேண்டாமென்று புலித் தலைமை தனது இயக்கத்துக்கு உத்தரவிட்டமையும், பதினைந்து கடற்புலிகளே பலியானார் களென்று தமிழ்ச்செல்வன் கூறியமையும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

ஹொங்கொங், சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளிலேயே இக் கொள்வனவு முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாகவும் புலிகளின் பிரபல ஆயுதக் கொள்வனவாளரான 'கேபி' என்றழைக் கப்படும் குமரன் பத்மநாதன் என்பவரின் தலைமையின் கீழ் பல புதிய முகங்கள் இந்த நவீன உபகரணங்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டுள்ளன ரென்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இக் கொள்வனவு இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஆபத்தாக அமையலாமென்று இலங்கையும், இந்தியாவும் புலிகளின் ஆயுதக் கடத்தலைத் தடுப்பதற்காகத் தமது கடற் கண்காணிப்பைப் பலப்படுத்த வேண்டுமென்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கடலிலும் தரையிலும் பயன்படுத்தக்கூடிய நவீன ரக தொலைத்தொடர்பு சாதனங்களும் இரட்டைப் பயன்பாட்டுச் சாதனங்களும், கொள்வனவு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வர்த்தக நிறுவனங்களின் பெயரிலேயே இவை கொள்வனவு செய்யப்படுகின்றன வென்றும், இலங்கையரல்லாதோரின் பெயர்களே பயன்படுத்தப்படுகின்றன வென்றும் கூறப்படுகிறது. மூன்று வருட கால யுத்த நிறுத்தம் கடற்புலிகளின் ஆயுத மற்றும் மனித வளத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பயன்படுத்தப் படுகிறதென்றும் 1980ஆம் ஆண்டிலிருந்தே கடற் புலி அமைப்பு கட்டியெழுப்பப்பட்டு வருவதாகக் குறிப்பிடும் அறிக்கை, தற்போதைய கொள்வனவுகளுக்குத் தாய்லாந்தே பிரதான இடமாகத் திகழ்வதாகவும் அந்தமான் தீவுப்பகுதி, ராமொங், புகெட், பாங் அகா ஆகிய பகுதிகளுக்கூடாகப் புலிகள் ஆயுதங்களைக் கடத்தி வந்தனரென்றும் குறிப்பிடுகிறது.

## 700 போலிக் கடவுச்சீட்டுகளுடன் பாங்கொக்கில் சிக்கினார் சபாநந்தன்

பாங்கொக்கில் எழுநூறு போலி பாஸ்போர்ட்டுகளுடன் இலங்கையரான 41 வயது கனகசபை சபாநந்தன் என்பவர் தாய்லாந்து பொலிஸாரால் கடந்த ஜனவரி மாதம் 18ஆம் திகதி கைது செய்யப் பட்டாரென்று தாய்லாந்து பத்திரிகைகள் தெரிவித்தன. பல்வேறு நாடுகளின் கடவுச் சீட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு பல போலி ரப்பர் ஸ்டாம்புகளும் பிடிபட்டுள்ளனவென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெருமளவு போலிக் கடவுச்சீட்டுகள் தாய்லாந்தில் கைப்பற்றப்பட்டமை இதுவே முதல் தடவையென்றும் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு தாய்லாந்து மத்திய நிலையமாகச் செயற்படுவதை இது காட்டுகிறதென்றும் தாய்லாந்து புலனாய்வு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 1972ஆம் ஆண்டு முதல் தாய்லாந்தில் வசித்துவரும் இவர், இந்திய கடவுச்சீட்டொன்றினை வைத்துள்ளாரென்றும் கைது செய்யப்பட்ட பின்னர் பொலிஸார் நடத்திய புலன்விசாரணைகளின்போது, தனக்குச் சிரேஷ்ட புலி உறுப்பினர்களோடு தொடர்புகள் இருப்பதை ஏற்றுக்கொண்டாரென்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

## முரசம்

### அரசின் மெத்தனப் போக்கு கொலைகள் அதிகரிக்க வாய்ப்பளிக்கும்

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

'மார்ச் எட்டு' மகளிர் தின வாழ்த்துக்களை அனைத்துப் மகளிருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கொலைகள் மலிந்துள்ள மயான பூமியாக மட்டக்களப்பு மாறி வருகிறது. கௌசல்யனின் கொலைக்குப் பிறகு படுகொலைகள் பல தரப்பாலும் கண்டனத்துக்குள்ளானது. அத்தோடு கொலைகள் நிறுத்தப்பட்டுவிடும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. கௌசல்யனின் படுகொலைக்குப் பின்னர் இதுவரை 22க்கும் அதிகமான படுகொலைகள் மட்டக்களப்பில் நடந்துள்ளன. இதில் புலிகள் இருவர். ஏனையவர்கள் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களாகவும் முன்னர் புலிகள் இயக்கத்தில் இருந்தவர்களாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது தவிர வெலிகந்தையில் கொல்லப்பட்ட அறுவர் அப்பாவிப் பொதுமக்கள். நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் இனந் தெரியாதவர்கள் என்ற போர்வையில் புலிகள் படுகொலைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளார்கள் என்பதை கொலைகளின் முறைகளையும், படுகொலையுண்டவர்களையும் கொண்டு தீர்மானிக்க முடிகிறது.

கௌசல்யன் கொல்லப்பட்டபோது, குவேனி காயப்பட்டபோது கண்டித்து கண்டித்து தொண்டை கட்டிப் போனவர்களும், பக்கம் பக்கமாக அறிக்கை விட்டவர்களும் ஏனைய கொலைகளைக் கண்டு கொள்ளாமல் கண்ணை மூடி, வாயை மூடி சித்த பிரமைப் பிடித்தவர்கள் போல் நடித்து அல்லது நடந்துகொண்டது தான் ஆச்சரியமானது. புலிகளின் மரணங்களுக்குக் கொடுக்கும் கௌரவத்தை இன்னொரு மனித இறப்பிற்கு வழங்காத காட்டுமிராண்டித்தனமாக வாழ்க்கையைத்தான் இன்று மனிதம் வாழ்ந்துகொண்டிருக்கிறதோ என்ற சந்தேகமும் எழுகிறது. ஒரு இறப்பு பாகுபாடு தவிர்ந்த துக்கத்துக்குரியது; கண்டனத்துக்குரியது என்ற நிலை இப்போதில்லை.

கொலைகளைக் கண்டிப்பதும், கண்டுகொள்வதும் ஒருபுறம் இருக்கட்டும். இது தொடர்கதையாகியுள்ளதே. அதுவும் அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் என்பதால் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது. ஒவ்வொரு கொலையும் நடந்த பின் விசாரணை செய்வதும், சந்தேகம் தெரிவிப்பதும் கொலைகளைத் தடுப்பதாக இல்லையே. அரசின் சட்டம், பாதுகாப்பு என்பவற்றுக்கு சவால் விடுவதாகவே இப் படுகொலைகள் நடத்தப்படுகின்றன. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கொலைகள் நடப்பதில்லை என்று கூற முடியாது. பல கொலைகள் நடந்தாலும் அவை அங்கேயே மறைக்கப்பட்டுவிடுகின்றன. அதையும் தாண்டிப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிகள் தவிர்ந்த கட்சிக்காரர்கள் எவரும் செல்வதில்லை. சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் கூட குறிப்பிட்ட எல்லைகளுக்கு அப்பால் போக அனுமதிக்கப்படமாட்டார்கள். இப்படி இருக்கையில் புலிகளின் கட்டுப்பாட்டில் இப்படியான மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் மீதோ, தமது எதிரிகள் மீதோ புலிகள் கொலைகளைச் செய்ய வாய்ப்பில்லை. ஆகவேதான் அரச கட்டப்பாட்டுப் பகுதிக்குள் இப்படியான கொலைகள் தாராளமாக அரங்கேகின்றன. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமது அரசியல் எதிரிகளைப் படுகொலை செய்யும் அதேவேளை தமது உள் முரண்பாடுகளையும் தீர்த்துக்கொள்கின்றனர். காரணம் அந்தப் பழியையும் வேறொரு தரப்பு மீது இலகுவாகச் சுமத்திவிட முடியும் என்ற எண்ணம் புலிகளுக்குள் அதிகரித்துள்ளது. வடக்குக் கிழக்கின் சகல பகுதிகளிலும் புலிகள் அரசியல் பணி என்ற போர்வையில் இருந்தாலும் மட்டக்களப்பில் மட்டும் புலிகள் மீது குறிவைக்கப்படுவது ஏன்? மட்டக்களப்பிலுள்ள புலிகளுக்குள் இந்தக் கேள்வி தற்போது பல சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது. கௌசல்யன் தொடக்கம் இதுவரை தொடர்ந்துகொண்டிருக்கும் எந்தக் கொலைக்கும் புலிகளின் தலைமை எவ்வித கருத்தையும் தெரிவிக்காமல் இருப்பது கீழ் மட்ட உறுப்பினர்கள் மத்தியில் சந்தேகங்கள் வலுக்கக் காரணமாகியுள்ளது.

தமது அரசியல் எதிரிகளைக் கொன்றொழிப்பதாக இருந்தாலும், உள் முரண்பாடுகளைத் தீர்ப்பதாக இருந்தாலும் அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிகள் படுகொலைகளைச் செய்வதால் அரசின் இயலாமையை புலிகள் சரியாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதைத் தவிர வேறெதுவுமில்லை. அரசாங்கம் பாதுகாப்பையும் சட்டத்தையும் அமுல்படுத்துவதற்கு அதிகளவு செலவுகளைச் செய்துகொண்டிருப்பது நாட்டு மக்களுக்குப் பிரயோசனமானதாக இல்லை. இலங்கைப் பிரஜை ஒருவர் பாதுகாப்பாக இருப்பதாக உறுதியாக நம்ப முடியாத சூழலே அதிகரித்து வருகிறது. இந்த நிச்சயமற்ற நிலைமை நீடிக்குமானால் அரசின் மீது முற்றாகவே நம்பிக்கை இல்லாமல் போய்விடும். ஆகவே அரசாங்கம் கடுமையான திட்டங்களை வகுப்பதோடு நின்று விடாமல், ஒவ்வொரு இலங்கைப் பிரஜையின் பாதுகாப்புக்கும் உத்தரவாதமளிக்கும் வகையில் நடந்துகொள்ள வேண்டும். இதிலிருந்து அரசு தவறுமாக இருந்தால் கொலையாளிகளுக்கு வாய்ப்பளிப்பதோடு தொடர் கொலைகள் நடைபெறும் வாய்ப்பை அதிகரிக்கச் செய்யும். சமாதானம் என்ற போர்வையில் அன்றாடம் ஒரு கொலையென்பதை அனுமதிக்க முடியாது. எவர் மீது புரியப்பட்டாலும் கொலை கண்டிக்கப்பட வேண்டியதே. இந்தக் கொலைகளின்போது கொபி அனான்கூட மௌனம் சாதிப்பதுதான் வேடிக்கையானது. கொபி அனானின் கண்டனம் ஏன் கண்டிக்கப்பட்டது என்பது இப்போது புரியும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# பொறுமையின் எல்லையில் புலிகள்

### எக்ஸ்ரே ரிப்போர்ட்

"பொறுமையின் எல்லைக்குப் புலிகள் வந்துவிட்டனர். எமது மக்களும் எமது போராளிகளும் படையினரால் சுட்டுக் கொல்லப்படுவதை இனியும் நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எமது தேசியத் தலைவர் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்காகவே எத்தனையோ ஆத்திரமூட்டல்களுக்கும் மத்தியில் பொறுமையைக் கட்டிக் காத்து வருகிறார்" என்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சுப்பையா பரமு தமிழ்ச்செல்வன் கடந்த ஐந்தாம் திகதி தனியார் தமிழ்த் தொலைக்காட்சியொன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி துளஷிகா நாகேந்திரம் கடந்த நான்காம் திகதி யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் கடற்படையினரின் ட்ரக் வாகன விபத்தில் சிக்கி மரணமானதையடுத்தே இப் புதிய எச்சரிக்கையை அவர் விடுத்துள்ளார். பெப்ரவரி மாதம் ஏழாம் திகதி புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், 16 வயதுப் புலிப் போராளி விதுமாறன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி. சந்திரநேரு உட்பட அறுவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் போதும் தமிழ்ச்செல்வன் தமது பொறுமை எல்லை மீறிப் போவதாக எச்சரிக்கை விடுத்திருந்தார். பின்னர் புலிகளின் மட்டு - அம்பாறை மகளிர் அரசியல் பொறுப்பாளர் குவேனியுடன் மேலும் இருவர் சுட்டுக் காயப்படுத்தப்பட்ட போதும் தனது 'பொறுமை சார்ந்த எச்சரிக்கையை, மீளப் புதுப்பித்துக்கொண்டார். கௌசல்யன் கொலையுண்டு கிட்டத்தட்ட ஒரு மாதம் கழித்து, அப்பாவி மாணவி படையினரின் ட்ரக் சில்லுக்குள் சிக்கி உயிரிழந்த நிலையில், மீண்டும் புலிப் போராளிகளோடு தமிழ் மக்களையும் படையினர் கொல்கின்றனரென்று குற்றஞ்சாட்டித் தனது பொறுமையைத் தமிழ்ச்செல்வன் தானே மீண்டும் பரிசோதித்துப் பார்த்திருக்கிறார்.

கௌசல்யன் கொலை செய்யப்பட்டமை, குவேனி மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டமை, மாணவி விபத்தில் சிக்கியமை எல்லாம் கண்டிக்கப்பட வேண்டியவை

**சிங்களப் பகுதிகளில் கூட படையினரின் வாகனங்களில் சிக்கி சிங்களவர் இறப்பதோ அல்லது இசை நிகழ்ச்சிகளிலோ, கேளிக்கைக் கொண்டாட்டங்களிலோ படையினரும் பொதுமக்களும் மோதிக்கொள்வதோ ஒன்றும் நடைபெறாத சங்கதிகளல்ல. யாழ். ஆஸ்பத்திரி வீதி விபத்தில் மாணவி மரணமடைந்ததற்காக அங்கிருந்து ஒன்றரை மைலுக்கப்பாலுள்ள யாழ்.பல் கலைக்கழகத்துக்கு அண்மையில் படையினர் மீது கல்வீச்சு நடத்த வேண்டியதன் மர்மமோ பின்னணியோ என்ன? படையினர் செய்வதெல்லாவற்றையும் நியாயப் படுத்துவது எமது நோக்கமல்ல. திருநெல்வேலியிலுள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் அலுவலகம், கஜேந்திரன் எம்.பி.யின் அலுவலகம் ஆகியவை தாக்கப்பட்டமை கண்டனத்துக்குரியது.**

என்பதில் இரண்டு கருத்துகள் இருக்க முடியாது. மூன்றாவது சம்பவமான யாழ்.வேம்படி மகளிர் பாடசாலை மாணவி துளஷிகாவின் விபத்தில், படையினர் ஏதோ வேண்டுமென்றே தமிழ் மாணவியைக் கொன்றுவிட்டனர் என்பது போல டயர் எரிப்பு, கல்வீச்சு, ஹர்த்தால், கடையடைப்புப் போன்ற வழமையான களேபரங்களோடு படை எதிர்ப்புப் போராட்டம் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. விபத்தில் சம்பந்தப்பட்ட ட்ரக் வண்டியை ஓட்டிச் சென்ற படைவீரர், இந்த நாட்டுச் சட்டதிட்டத்தின்படி கைது செய்யப்பட்டிருக்கிறார். இந்த விபத்துச் சம்பந்தமான மரண விசாரணையும் நடத்தப்பட்டிருக்கிறது. சம்பிரதாயபூர்வமான சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது. ஏதோ படையினர் சிங்கள மக்களின் பகுதிகளில் அல்லது முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் விபத்துக்களிலோ மோதல்களிலோ சம்பந்தப்படுவதில்லையென்ற தோரணையில் மக்களின் முகமூடிகளுக்குப் பின்னால் மறைந்து நின்றுகொண்டு புலிகளே இந்த வன்செயல்களைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். அப்பாவி மக்களையும் படையினரையும் மோதவிட்டு அதில் குளிர் காய்வதற்குப் புலிகள் மேற்கொள்ளும் தந்திரோபாயமே இது.


சிங்களப் பகுதிகளில் கூட படையினரின் வாகனங்களில் சிக்கி சிங்களவர் இறப்பதோ அல்லது இசை நிகழ்ச்சிகளிலோ, கேளிக்கைக் கொண்டாட்டங்களிலோ படையினரும் பொதுமக்களும் மோதிக் கொள்வதோ ஒன்றும் நடைபெறாத சங்கதிகளல்ல. யாழ். ஆஸ்பத்திரி வீதி விபத்தில் மாணவி மரணமடைந்ததற்காக அங்கிருந்து ஒன்றரை மைலுக்கப்பாலுள்ள யாழ்.பல் கலைக்கழகத்துக்கு அண்மையில் படையினர் மீது கல்வீச்சு நடத்த வேண்டியதன் மர்மமோ பின்னணியோ என்ன? படையினர் செய்வதெல்லாவற்றையும் நியாயப்படுத்துவது எமது நோக்கமல்ல. திருநெல்வேலியிலுள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் அலுவலகம், கஜேந்திரன் எம்.பி.யின் அலுவலகம் ஆகியவை தாக்கப்பட்டமை கண்டனத்துக்குரியது. புலிகள் ஏதோவொரு கிராமத்துக்குள் புகுந்து ஒன்றிரண்டு சிப்பாய்களைச் சுட்டுவிட்டுத் தப்பியோடினால், வெறி பிடித்து வரும் சிப்பாய்கள் வீரதீரச் சிங்கங்கள் போல் அப்பாவித் தமிழ் மக்களைச் சுட்டுக் கொன்று தமது இன வைராக்கியத்தைக் காட்டிய பல சம்பவங்கள் முன்னர் இடம்பெற்றிருக்கின்றன. மைலந்தனை இனப் படுகொலைகள், கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் என்று பலவற்றை அடுக்கிக்கொண்டே போகலாம். இதே போன்றுதான் புலிகளும், அன்றாடங்காய்ச்சிகளான அப்பாவிச் சிங்கள விவசாயிகளையும் பள்ளிவாசலில் தொழுதுகொண்டிருந்த அப்பாவி முஸ்லிம்களையும் துடிக்கப் பதைக்கக் கொன்று தீர்த்திருக்கிறார்கள். பயங்கரவாதமும் அரச பயங்கரவாதமும் ஒன்றிலொன்று தங்கி நிற்பவை. ஒன்று மற்றதுக்குத் தீனி போடும் தன்மை கொண்டது.

இதைத்தான் அந்தப் பேட்டியில் பரமு தமிழ்ச்செல்வன் இன்னொரு வார்த்தையில் கூறியிருககிறார். "எமது தமிழ் மக்கள் மீது சிங்களப் படையினர் நடத்திய படுகொலைகள், அடாவடித்தனங்களின் காரணத்தினால்தான் எமது விடுதலை இயக்கம் விருட்சமாக வளர்ச்சி பெற்றது" என்கிறார் தமிழ்ச்செல்வன். சிங்களப் பேரினவாத சக்திகளின் அடாவடித்தனங்களும், அராஜகங்களும், பாரபட்சங்களும், இன வன்முறைகளும்தான் இலங்கையில் விடுதலை உணர்வு கொண்ட ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் பல்வேறு இயக்கங்களின் பின்னால் ஆயுதங்களோடு அணி திரண்டார்களென்ற உண்மையைத் தமிழ்ச்செல்வன் யாருக்கும் சொல்லித் தெரிய வேண்டிய தேவையில்லை. புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ், ரெலோ, கருணா அணி என்று இந்த இயக்கங்கள் அனைத்துமே தமிழீழத்தில் போராட்ட இயக்கங்களாகத்தான் திகழ்ந்தன. இவை எதுவுமே சிங்களப் பேரினவாதத்துக்கோ படைகளுக்கோ துணை போகவில்லை. இவற்றை சிங்களப் படையினரால் அழித்தொழிக்கவும் முடியவில்லை. தமது மேலாதிக்கத்துக்காக, இன்னமும் சொல்லப்போனால் பிரபாகரனின் ஏகபோகத்துக்காக இந்த இயக்கம் சார்ந்த இளைஞர்கள் மிலேச்சத்தனமாகக் கொன்று குவிக்கப்பட்டார்கள். ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தின் மீது புலிகள் கடைசித் தாக்குதலைத் தொடுத்தபோது இதே யாழ்.பல்கலைக்கழகத்துக்குச் சமீபமாகவுள்ள திருநெல்வேலிச் சந்தையில் நான்கு தமிழ் இளைஞர்களை உயிருடன் தீயிட்டுக் கொளுத்தியவர்கள் தமிழ்ச்செல்வனின் விடுதலைப் படையினர் தான். சிங்களப் படைகளால் கொல்லப்பட்ட தமிழ் மக்களை விட புலிகளால் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் தொகை அதிகம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 34 மாத காலப் பகுதிக்குள் 182 பேரைப் புலிகள் கொன்றிருக்கின்றனர். இவர்களில் படைகளைச் சேர்ந்த 29 பேர் போக மீதி 153 பேரையும் கொன்றவர்கள் இன்னமும் சமாதானத்துக்காகப் போராடுவதாகக் கூறிக்கொள்ளும் பிரபா அணிப் புலிகள்தான் என்பதைத் தமிழ்ச்செல்வனால் மறுக்க முடியுமா?

ஒரு கௌசல்யனும் ஒரு குவேனியும் சுடப்பட்டமைக்காகப் பொறுமையின் எல்லைக்கு தமிழ்ச்செல்வனால் வர முடியுமென்றால், சுமார் நூற்றி ஐம்பதுக்கு மேற்பட்ட மாற்றுக் கருத்துக் கொண்ட தமிழர்களைக் கொன்றமைக்காகத் தமிழ் மக்கள் எந்த எல்லைக்குப் போக முடியும்? புலிகளின் துப்பாக்கிகளுக்கு அஞ்சித்தான் தமிழ் மக்கள் மௌனமாக அலறுகிறார்கள். அந்த மௌன அலறல்கள் இலங்கையின் பொல்பொட்டுகளுக்குக் கேட்கமாட்டாது. பல்லாயிரக்கணக்கான மாற்றுத் தமிழ் இயக்க இளைஞர்களை விடுதலையின் பேரால் நீங்கள் கொன்று குவித்தபோது மௌனித்திருந்ததற்கான தண்டனையைத்தான் தமிழ் மக்கள் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களா?


விபத்தில் கொல்லப்பட்ட ஒரு தமிழ் மாணவிக்காக ஹர்த்தாலும் கடையடைப்பும் நடத்தப் புலிகளால் முடியுமென்றால் புலிகளால் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகளுக்காக எத்தனையாயிரம் தடவைகள் ஹர்த்தாலும் கடையடைப்பும் நடத்த வேண்டும். வெலிக்கந்தையில் கொலக்குணாவெளி என்ற கிராமத்தில் முன்னாள் புளொட் உறுப்பினரான அர்ஜுன் செல்வராஜா என்பவருக்குப் புகலிடம் வழங்கிய முஸ்லிம் குடும்பத்தவர் உட்பட ஆறு பேர் கடந்த ஐந்தாம் திகதி சனிக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். செல்வராஜா என்ற புளொட் உறுப்பினருடன் நான்கு முஸ்லிம்களும் ஒரு சிங்களவரும் கொல்லப்பட்டுள்ளனர். இது கருணா அணியினரைத் தேடி வந்த பிரபா அணிப் புலிகளின் பழிவாங்கும் தாக்குதலென்று வாணிக்கப்படுகிறது. அதே தினத்தன்று ஏறாவூரில் புலேந்திரன் என்றழைக்கப்படும் கருணா தரப்பு விசுவாசியொருவர் கொல்லப்பட்டிருக்கிறார். மட்டக்களப்பில் புளொட் உறுப்பினரான கந்தையா கணேசலிங்கம் என்பவர் சுட்டுக் காயப்படுத்தப்பட்டுள்ளார். முன்னாள் புளொட் உறுப்பினர் கமலநாதன் என்பவர் கடந்த ஆறாந் திகதி



இரவு மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவர்களையெல்லாம் சுட்டவர்கள் யார்? புலிகள் இல்லையா?

கருணா, புலி இயக்கத்தை விட்டு வெளியேறி ஒரு வருடம் கழிந்துவிட்ட நிலையில் மீண்டும் கிழக்கு மாகாணம் இரு தரப்புப் புலிப் பிரிவினரின் கந்தக பூமியாக மாறிக்கொண்டிருக்கிறது. ஏட்டிக்குப் போட்டியான படுகொலைகள் இடம்பெறுகின்றன. வன்செயல்களைச் சகல தரப்பினரும் கைவிட்டு ஆகக் குறைந்தது அப்பாவிகளான கிழக்கு மக்களை நிம்மதியாக வாழ விட வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பு. "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்ற நிலைக்குத் தமிழ் மக்கள் வந்துவிட்டார்கள்.

கருணாவின் வெளியேற்றத்தையடுத்துக் கிழக்கைத் தமது பிடிக்குள் கொண்டுவரப் பிரபா அணிப் புலிகள் பகீரத முயற்சியெடுக்கிறார்கள். அதற்காகத்தான் ஒருபுறம் கருணா அணியினரையும் அவர்களின் விசுவாசிகளையும் வேட்டையாடிக்கொண்டே மறுபுறம் முஸ்லிம் மக்களோடு சமாதான சகஜீவனம் நடத்தப் போவதாகச் சரடு விடுகிறார்கள். விரட்டப்பட்ட முஸ்லிம்களை - எமது தமிழ் பேசும் சகோதரர்களை மீளக் குடியமர்த்துவதோடு, அவர்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட வயற் காணிகளை அவர்களிடம் திருப்பிக் கொடுப்பதோடு, அவர்களுக்குச் செய்த அநியாயங்களுக்குப் பிராயச்சித்தங்கள் தேடும் செயல்முறைகளினூடாகவே தமிழ் - முஸ்லிம் சகோதரத்துவத்தைக் கட்டியெழுப்ப முடியும். வெறும் பம்மாத்துகளுக்கு முஸ்லிம் மக்கள் ஏமாந்த சோணகிரிகளல்லர் என்பதையும் பிரபாப் புலிகள் உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழ்ச்செல்வன் வாய்ப்பாட்டுப் பாணியில் எத்தனை எச்சரிக்கைகளை விடுத்தாலும் மூன்று ஈழ யுத்தங்களுக்குக் களமமைத்துக் கொடுத்த கிழக்கிலங்கை, நான்காவது யுத்தத்துக்கு இடமளிக்காது என்பது மட்டும் திண்ணம். ஏனெனில் கருணாவின் வெளியேற்றத்தோடு கிழக்குப் புலிகளைப் பொறுத்தவரை எல்லாம் வெறிச்சோடிப் போய்விட்டது. புலிகள் உறுமுகிறார்கள். அவர்களால் புலிப் பாய்ச்சல்களை இனியும் நடத்த முடியாது. வெறும் பாச்சா காட்டுகிறார்களென்பதே அப்பட்டமான உண்மை. ■



# நிவாரணங்களுக்காகப் போராடும் மக்களின் குற்றச்சாட்டுகள்





அரசியல் சர்ச்சைகள் காலத்துக்குக் காலம் தோன்றி மறைந்துகொண்டுதான் இருக்கின்றன. அவைகளையிட்டுப் பெரிதாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. மக்களைப் பொறுத்தவரை எவராலும் கண்டுகொள்ளப்படாதவர்களாகவே இருந்து வருகிறார்கள். இத் துர்ப்பாக்கியமான நிகழ்வின் தொடர்ச்சியாகவே இப்போது சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் நிலையும் இருக்கிறது என்பதுதான் துரதிர்ஷ்டமானது.

டிசம்பர் 26ஆம் திகதி 2004இல் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவினால் நாட்டின் கரையோரப் பகுதிகள் அழிந்து போனதும், இப் பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு முகங்கொடுத்ததும் உலகமறிந்த விடயங்கள்.

ஆழிப் பேரலைத் தாக்கத்தில் 32959 பேர் வரை உயிரிழந்தனர் எனவும், 5048க்கும் அதிகமானவர்கள் காணாமல் போனார்களெனவும் தெரிவிக்கப்படுகிறது. 23 இலட்சத்துக்கும் அதிகமான வீடுகள் அழிந்துள்ளன. இலங்கையின் வரை படத்தில் மாற்றம் செய்யுமளவுக்குக் கரையோரங்கள் கடலுக்குள் மூழ்கிப்போயுள்ளன. சுனாமி தாக்கிய தென்கிழக்காசிய நாடுகளைப் பொறுத்தவரை இந்தோனேசியாவுக்கு அடுத்ததாகப் பாரிய அழிவுகளை இலங்கையே சந்தித்தது. அது போல சர்வதேச நாடுகளின் உதவியும் பல வழிகளில் இலங்கைக்குத் தாராளமாகவே கிடைத்தன. இன்னும் கிடைக்கவும் உள்ளன. இலங்கை அரசின் ஊடாகவே அதிகளவான உதவிகள் வந்து சேர்ந்தன. பாதிக்கப்பட்ட மக்கள் தாம் எதிர்கொண்ட பேரழிவுகளிலிருந்து மீண்டும் தமது இயல்பு வாழ்வைக் கட்டியெழுப்ப முடியும் என்று நம்பிக்கை கொண்டிருந்தனர். அது இன்று வரை கைகூடவில்லை.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடகிழக்குப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களை இயல்பு வாழ்வுக்கு திருப்புவதற்கான மீள் கட்டுமானப் பணிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான்.

இதேயளவு கட்டுமானப் பணிகள் வடகிழக்குப் பகுதிகளில் இதுவரை ஏன் ஆரம்பிக்கப்படவில்லை? ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்குப் பிரத்தியேகமான காரணங்கள் என்ன? வடகிழக்கு தமிழர் தாயகப் பிரதேசம் என்கிறோமே, அதற்காகவா அல்லது புலிகளும் புலிகளின் ஆதரவாளர்களும் சொல்லிக்கொள்வது போல சிங்கள தேசம் எமது பகுதிகளைப் புறக்கணிக்கிறதா? அல்லது வடகிழக்கில் அரசின் இந்தப் பணிகளை முன்னின்று செய்யத் தகுதியான பணியாட்கள் இல்லையா? இதே நிலை நீடித்தால் பாதிக்கப்பட்ட நாங்கள் நிவாரணங்களை நம்பி சாப்பீட்டுச் சாப்பீட்டுச் சோம்பேறிகளாவதா? எங்களது சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவே முடியாதா? இதற்கு அரசு என்ன உதவி செய்யப்போகிறது என்பதைத் தெரிந்துகொள்ளாமல் இன்னும் எத்தனை நாட்களுக்கு வெப்பமும், நெருக்கடியும் மிகுந்த பிளாஸ்டிக் கூடாரங்களுக்குள் அவிந்துகொண்டிருப்பது? இதுதான் வாழ்க்கை என்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவென்று வந்து குவிந்த உதவிகள் யாருக்குப் பயன்படுத்தப்படப்போகின்றன என்று கேள்விகளைக் கேட்டுப் பாதிக்கப்பட்ட மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். குறிப்பாக கிழக்கு மாகாணத்தைப் பார்க்கும்போது அம்பாறையில் கல்முனை, அக்கரைப்பற்று, கோமாரி மக்களும், மட்டக்களப்பில் கல்லடி, உப்போடை, இருதயபுரம் மேற்கு, கறுவேப்பங்கேணி, வாழைச்சேனை, பேத்தாளை, சத்துருக்கொண்டான், ஆரையம்பதி, ஆகிய பகுதி மக்களும், திருமலையில் விஜிதபுரம், திருக்கடலூர், கேணியடி, மனையாவெளி, கந்தசாமி கோவிலடி, சோலையடி, கின்னியா ஆகிய பகுதி மக்களும், யாழ்ப்பாணத்தில் வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேச மக்களும் தமக்கு நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை என்று அரசின் மீது தமது அதிருப்தியை வெளிப்படுத்திப் போராட்டம் நடத்தியுள்ளார்கள்.

இது குறித்து இப் பகுதிக் கிராம சேவையாளர்களிடம் கேட்டபோது, பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக இதுவரை தமக்கு வழங்கப்பட்ட பணிகள் சரியாகவே செய்யப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்தும் செய்யப்பட்டுக்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு சமையலறை உபகரணங்களின் தேவைகளை நிவர்த்திக்க ஒவ்வொரு குடும்பத்துக்கும் 2500 ரூபா உடனடியாக வழங்கப்பட்டது. இது தவிர 375 ரூபா பெறுமதியான கூப்பன் வழங்கப்படுகிறது. இது ஒருவருக்கு ஒரு கூப்பன் என்ற அடிப்படையில் 175 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களாகவும், 200 ரூபா பணமாகவும் கொடுக்கப்படுகிறது. இதை விடவும் மாதம் ஒரு குடும்பத்துக்கு 5000 ரூபாவும் கொடுக்கப்படுகிறது. இந்த 5000 ரூபா இன்னும் சிலருக்கு வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். அரசின் சார்பில் இப் பணிகளில் வங்கியும், கூட்டுறவுச் சங்கங்களும் சமுர்த்தி அமைப்பும் இணைந்து பணியாற்றுவதாகவும் அறிய முடிகிறது.

இந்த அன்றாட உதவிகளைத் தவிர மக்களின் நிரந்தரத் தேவைகளான வீடமைப்புகள், தொழில் முயற்சிகளை மீள்மைத்தல் என்பன போன்ற பணிகள் குறித்து இந்த அரச அதிகாரிகள் பதிலளிக்கக்கூடிய நிலையில் இல்லை.

இதற்கும் அரசின் பக்கமே கேள்வி திரும்புகின்றது. ஏற்கெனவே இதே பகுதியில் தெரிவித்தது போல வடகிழக்கின் மீள் கட்டமைப்புப் பணிகளை ஆரம்பிப்பதற்கு பொதுக் கட்டமைப்பை நிறுவிப் பணியாற்றுவது தொடர்பில் இன்னும் இணக்கத்துக்கு வராமல் அரசும் புலிகளும் கயிறு இழுப்பதால் மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது இப்போது தெளிவாகியுள்ளது. பொதுக் கட்டமைப்பு, அதற்கான பேச்சு என்று தமது சுய இலாபங்களுக்காகப் புலிகளின் இழுப்புகளுக்கு அரசு இழுபடுமானால் அரசின் மீது மக்களுக்குப் பல வகையான சந்தேகங்களும் வினாக்களும் எழுவது தவிர்க்க முடியாது. இவ்வாறு மக்கள் அரசின் மீது விசனமடைவதானது புலிகள் எதிர்பார்க்கும் காலம் கடத்தலுக்கும் அரசின் மீது சேறு பூசுவதற்கும் வாய்ப்பளிக்கவே செய்யும். இனியும் கூட அரசாங்கம் பொதுக் கட்டமைப்புக் கதையை தூர வீசிவிட்டு, துணிச்சலோடு, தகுதியான நிபுணர்களைக் கொண்டு வேலைத்திட்டங்களை வகுத்து, பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் கட்டியமைக்க வேண்டும். இது நடக்காத பட்சத்தில் இலங்கை அரசின் மீது தற்போது மக்கள் கொண்டிருக்கும் தப்பபிப்பிராயம் தொடர்கதையாகவே இருக்கும். இந்த நிலை நீடிப்பதானது எதிர்ப்பு அரசியல் நடத்துபவர்களுக்கும் வெட்டிப் பேச்சுப் பேசும் பிரகிருதிகளுக்கும் புலிகளுக்கும் மக்களைத் தவறான பாதையில் வழி நடத்த வழி சமைக்கும்.

அலசுவது
- மதியூகி -

இப்படியானதொரு துர்ப்பாக்கியமான எதிர்காலப் போக்கிலிருந்து மக்களையும், நாட்டையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இறைமையுள்ள அரசு என்றளவில் இலங்கை அரசுக்கு உண்டு. இது தார்மீகக் கடமையுமாகும்.

இதைக் குறிப்பீட்டுக் காட்டும் இதே நேரம் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு நியாயம் கேட்டு நடத்தும் போராட்டங்களைத் தூண்டி விடுவதும், அதில் அரசியல் இலாபம் தேடுவதும் கேவலமான அரசியல் போக்காகும். இதைச் செய்பவர்கள் இதனைக் கைவிட்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நாட்டை கட்டியெழுப்ப அரசைத் தூண்டி தாமும் தேவையான பங்களிப்பைச் செய்ய வேண்டும். இதுவே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## அதிரடி அய்யாத்துரை



**யாழ்ப்பாணத்தில** படைத் தரப்பினுடைய வாகனத்தில அடிபட்டு மாணவி ஒருத்தி இறந்த சம்பவம் துக்கம்தானுங்கோ. இது முதல் சம்பவமுமில்லை. இது மாதிரி பல சம்பவங்கள் ஏற்கெனவேயும் நடந்திருக்குங்கோ. எண்டாலும் அது கண்டிக்கப்பட வேண்டியதுதானுங்கோ. பரிதாபம் என்ன தெரியுமோ? உந்தச் சம்பவத்தை எப்பிடிப் பொலிற்றிக்ஸா மாத்திறதெண்டு குதிரைக் கஜேந்திரன் ஹொஸ்பிட்டலில நிண்டு போட்ட திட்டந்தானுங்கோ! இது அவ்வளவு நல்லாயில்லை. டயர் எரிக்க ஒரு கூட்டத்தையும், தீ வைக்க ஒரு கூட்டத்தையும் கல்லெறிய ஒரு கூட்டத்தையும், பொயிண்ட் உடைக்க ஒரு கூட்டத்தையும் தயார் பண்ணினவராம். பாத்தியளோ விபத்தை எப்பிடி விபரீதமாக்கினமெண்டு? படைத் தரப்பு அதுகளை மீள அமைச்சிட்டுது. ஆனாலும் அந்தச் சம்பவத்தில காயப்பட்டவைக்கும் இறந்தவைக்கும் உவரால என்ன செய்ய முடிஞ்சுது? ஒண்டுமில்லையே! சனத்தை உருவேத்தி வன்முறைக்குள்ள தள்ளி விடுகிறதே வழக்கமாப் போச்சு.....

**யாழ்ப்பாணத்தில** படைத் தரப்புக்கு எதிரான போராட்டத்தில படைத் தரப்புத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில ரெண்டு பேருக்கு முழங்காலுக்குக் கீழ காயம்.... அது ஓ.கே. இன்னொரு வயோதிபர் இறந்தவரெல்லோ! அவற்ற 'பொடி' யுனிவர்சிட்டிக்குப் பின்னால கிடந்துதாம். இதை பி.பி.சிக்காரர் படைத் தரப்புப் பேச்சாளரிட்டைக் கேட்கும்போது "டவுனுக்க சூட்டுச் சம்பவம் நடந்தது உண்மைதான். ஆனால் உந்த வயசாளி யுனிவர்சிட்டிக்குப் பின்னால கிடந்திருக்கிறார். அது யோசிக்க வேண்டிய விசயம்" எண்டார். இப்ப தெரியுதோ "அவலை நினைச்சு உரலை இடிச்ச கதையா படைத் தரப்பு மேல பழியைப் போடுற விதமா ரெண்டெழுத்தார்தான் சுட்டிருக்கினம்" எண்டு இறந்து போனவரின்ர உறவுக்காரர் சொல்லுறார். இனியாகிலும் சனம் ஒண்டைப் புரிஞ்சுகொள்ள வேணும். "இன்னொரு தரப்பு மேல பழி போட வேணுமெண்டதுக்காக எங்கட சனத்தையே சுடவும் ரெண்டெழுத்தார் பின்னுக்கு நிக்கமாட்டினம்" எண்டு பிரபலமான கல்லூரியின்ர அதிபர் சொல்லிறார். இப்பிடிச் சொல்லிறவரே பயந்து பிள்ளையளைப் போராட்டத்துக்கு அனுப்பிறவர்தானாம்.

**மீன்பாடும்** ஊரில ஜெயமான மூர்த்தி எம்.பி. இருக்கிறாரெல்லோ! அவருக்குக் கொலை மிரட்டல் வந்திருக்குதாம். அடப் பாவமே! என்னடாவெண்டு விசாரிச்சால், அவர் ஊழல்களை புட்டுப்புட்டு வைக்கிறாராம் எண்டதாலதான் மிரட்டலாம். ம்...யார் யாருக்கு என்னத்துக்காக மிரட்டல் விடுகிறதெண்டு ஒரு விவஸ்தை இல்லாமப் போச்சு. பெரும் பிளான் பண்ணித்தான் உந்தக் குத்து வெட்டுகளே அரங்கேறுது. அதில இவர் நல்ல பிள்ளையாகக் காட்டிக்கொள்ளுறது மட்டுமில்லாம பாதுகாப்பையும் பலப்படுத்தப் பாக்கிறார். ஒரு விசயம் தெரியுமோ? இவரை எம்.பிப் பதவியால தூக்கிப்போட்டு ஒரு சகோதர இனத்தவருக்கு குடுபடப் போறதாகவும் ஒரு கதை அடிபடுகுது. இவருக்கு முன்னம் அறளை வேந்தனைத் தூக்குவினம் எண்டுதான் கதை கசியத் தொடங்கிச்சுது. இப்ப லேட்டஸ்டா ஜெயமான மூர்த்தியின்ர பேர் பலமா அடிபடுகுது. இப்ப தெரியுதோ ஆள் எதுக்கு கவர் எடுக்கிறாரெண்டு?

**திருவாண** மலையில சிவப்புச் சட்டைக்காரர் திட்டமிட்டுக் குடியேத்தப் பாக்கினம். அதுகளைத் தடுத்து நிறுத்த வேணுமெண்டு தமிழ்ச் சனம் ஒரே பிடியா நிண்டதால அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கு. இதில சம்பந்தமானவர் ஒண்டையும் செய்யயில்லையுங்கோ. சனமே முன்வந்து தடுத்தது எண்டதுதான் உண்மையான விஷயம். சாதகமா முடிஞ்சதால தான்தான் தலையிட்டனான் எண்டு சம்பந்தமானவர் அறிக்கை விட்டார். வீணைக் கட்சிக்காரர் உடனடியா அதிகார அம்மணியிட்ட உதைப் பற்றிப் பேசி சிவப்புச் சட்டைக்காரரின்ர உந்த நடவடிக்கையை தடுக்கிறதில பெரும் பங்கு வகிச்சவையாம். அந்தச் செய்திகளைத் தமிழ் ஊடகங்களில எழுதக் கூடாதெண்டு வன்னியில இருந்து கடுமையான உத்தரவாம். ஏன் எண்டு கேட்டால் ஊடகக்காரர் ஒருவர் அக்கம் பக்கத்தை திரும்பிப் பாத்துப் போட்டுச் சொன்னது சிரிப்பாக் கிடக்கு. உதில வீணைக் கட்சிக்காரர் எதிர்த்தவையெண்டும் அதிகார அம்மணியிட்டை பேசினவையெண்டும் செய்தி வந்தால் அரசியல் லாபம் கிடைச்சிடும் எண்டு வன்னியில இருந்து ஆலோசனை கூறிச்சினமாம். எப்பிடிப் போகுது பொலிற்றிக்ஸ்"கள்.

**சுனாமியால** பெருந்தொகையான பணத்தை புலம் பெயர்ந்தவர்களிட்டை ரெண்டெழுத்தார் கலக்ஷன் செய்தவையெல்லோ! அதுகளில கொஞ்சம் வந்து சேந்திட்டுது. இன்னும் கொஞ்சம் வர வேண்டிக் கிடக்கு. சில நாடுகளில கலக்ஷன் செய்தவை ரெண்டெழுத்தாருக்குப் பெரிய ஆப்பும் வச்சிருக்கினம். அந்த விஷயங்களையும் சரி பண்ண வேண்டியிருக்குதாம். ஏன் உதுகளைச் சொல்லிறன் எண்டு இன்னும் விளங்கயில்லையெண்டால் சுத்த வேஸ்ட்டுங்கோ. இந்த வாரம் சு.பா. வெளிநாட்டுக்குச் சுற்றுலாவொண்டு செய்யப் போறாரெல்லோ!! அதுக்குத்தான் அவர் போறாருங்கோ. முந்தியும் உப்பிடிப் போகேக்க 'பேச்சு சம்பந்தமா ஆலோசனைக் கேக்கப் போறன்' எண்டவர். இப்பதான் ஒண்டுமில்லையே! அப்ப ஏன் போறார்? கலக்ஷன் குளறுபடிகளை கரக்ட் பண்ணத்தானாம். கலக்ஷன் பண்ணினவைக்குத் தெரியுந்தானே சுனாமியின்ர பேரிலை சுருட்டிற வேலையைத்தான் தாங்கள் செய்தவையெண்டு. அதில தாங்களும் லேசா ருசி பாத்தால் என்ன தப்பு எண்ட நினைப்புத்தானாம். காசு கொடுத்த மகா ஜனங்களே! எப்பிடி இருக்கு உங்களுக்கு நாமம். கோவிந்தா....! கோவிந்தா....!

**செல்ஃபோனில** இனி ரகசியம் பேசிறவை கொஞ்சம் அவதானமா இருங்கோ. பிரபலமான செல்ஃபோன் லைன் தர்ற கம்பனி ஒண்டில ரெண்டெழுத்தார் மூண்டில ஒரு பங்கை வாங்கி இருக்கினமாம். எந்தக் கம்பனி எண்டு யோசிக்காதயுங்கோ. டயல் பண்ணி லொக் பண்ணிறவதானாம் அவை. இனி வருமானத்தில ரெண்டெழுத்தாருக்கும் ஒரு பகுதி போகுமாம். இதோடை நிண்டால் சரி. சனங்கள் கதைக்கிறதை ஒட்டுக் கேக்கவும் எக்கிரிமெண்ட் போடுவினமோ எண்ட குழப்பத்தில சனம் திரியுதுங்கோ.

பெரிய ராஜா! நீங்களும் இப்பிடி விலை போயிட்டியளே! உங்கள் மேல சனம் வச்சிருந்த நம்பிக்கையைத்தான் கேள்விக்குள்ள தள்ளிவிட்டுட்டுது. இண்டைக்கு மூண்டில ஒரு பங்கு. நாளைக்கு மொத்தப் பங்கெண்டு மாறினாலும் மாறும். கவனமா இருங்கோ.....!

# வெகெனரும் (1880 - 1930)
# புவியசைவுக் கொள்கையும்

சென்ற வாரத் தொடர்ச்சி

தாவர இனங்களும் விலங்கினங்களும் ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்திற்குச் சென்று அங்கே வாழ்ந்திருந்தமை. மேலும், தான் வாழ்ந்த காலத்திற் கூட கிரீன்லாந்து மேற்கு நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது என்ற விஞ்ஞானம்' என அவர்கள் பரிகாசஞ்செய்து புறக்கணித்தனர்; வெறும் வளிமண்டலவியலாளராகிய அவர் மண்ணியல் துறையில் தலையிடும் தகுதியுரிமை அற்றவர் என அவர் மீது நிந்தனைகளைக் குவித்தனர். புவியைப் போன்ற பற்றிய அறிவு அதி முக்கியத்துவமானது. அத்துடன் இத் துறையைப் பற்றிய வரலாற்று வழிவந்த அறிவினை விட மிகப் பெறுமதி வாய்ந்தது.

உதாரணமாக, புவியோட்டிலுள்ள

**ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் (சி.ஆர்.எம்.) வெளியிட்டுள்ள "மாற்றுக் கருத்தின் மதிப்பு" என்னும் வெளியீட்டிலிருந்து இக் கட்டுரை எடுக்கப்பட்டது. இவ் வெளியீட்டுத் தொடர் கருத்துக்களைச் சுதந்திரமாகப் பரிமாறிக்கொள்வதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. கவர்ச்சிகரமான இச் சிறிய புத்தகங்கள், அரசியல் விஞ்ஞானிகள், தத்துவ ஞானிகள், வேறு சிந்தனையாளர்கள் முதலியோரின் ஆக்கங்கள் உட்பட வழக்குத் தீர்ப்புக்கள், விஞ்ஞான ரீதியான ஆய்வு அறிக்கைகள், இலக்கியம், நாடகம் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் கொண்டுள்ளன. (கலி)லியோ, பேட்ரண்ட் ரசல், ஓங் சான் சூ கீ, நொவம் சொம்ஸ்கி, வே ஜிங் ஷென், ஈ.எம்.வோஸ்ரர், கென் (சா)ரோ வைவா, ஜவஹர்லால் நேரு, றோசா லக்சம்பேர்க் போன்றவர்களால் எழுதப்பட்ட அல்லது இவர்களைப் பற்றிய சிறிய ஆக்கங்கள் வாசகருக்குப் பெறுமதி வாய்ந்த தகவல்களைக் கொடுக்கின்றன. 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் கொலரா பரம்பலைத் தடுத்து, ரஷ்யாவில் "குளிர்கால கோதுமை" பற்றிய பரிசோதனை, 2ஆவது உலக மகா யுத்த காலத்தில் ஜப்பானைப் பூர்வீகமாகக் கொண்ட ஐக்கிய அமெரிக்கப் பிரஜைகள் ஒட்டுமொத்தமாக இடம் பெயர்வித்தது பற்றிய மாற்றுத் தீர்ப்பு, ஷேக்ஸ்பியரின் "கிங் லியர்" என்னும் நாடகத்தில் தீமைக்கு எதிராகப் பேசும் ஒரு ஏழ்மையான பணியாள் ஆகியன இப் புத்தகங்களிலிருக்கும் பிரமிப்பூட்டும் விடயங்களுள் சிலவாகும். "மாற்றுக் கருத்தின் மதிப்பு" என்னும் 1 தொடக்கம் 5 வரையான வெளியீடுகளை சி.ஆர்.எம். இயக்கத்திலிருந்து தமிழ், ஆங்கில, சிங்களம் ஆகிய மொழிகளில் பெற்றுக்கொள்ளலாம். சிறிய அளவில் இவ் வெளியீடுகள் நூல் நிலையங்களுக்கும் வாசிகசாலைகளுக்கும் இலவசமாக வழங்கப்படும்.**

உண்மையைப் புவியின் மேற்பரப்பு பற்றிய அவதானிப்புகள் வெளிப்படுத்தின என்பதைக் கிரீன்லாந்தில் தான் மேற்கொண்ட ஆய்வுகளில் இருந்து வெகெனர் அறிந்துகொண்டார்.

எனினும் அவருடைய சமீப காலத்தவராகிய கல்வியறிவு மிக்க மண்ணியலாளரும் பௌதிகவியலாளரும் அவருடைய கொள்கையைச் சரி, பிழை பார்க்கத்தானும் முயலவில்லை. அவரின் பணியைப் 'போலி

சிக்கலான ஓர் உறுப்பமைப்பை விளக்குவதற்கு அவருடைய மிக எளிமையான கொள்கைகள் தகுதியற்றவை என அவர்கள் பகிரங்கமாகப் பறைசாற்றினார்கள். மண்ணியலாளர் சிலர் அவருடைய கொள்கைக்களைத் தொடர்ந்து பரிசீலனை செய்தபோதிலும் அவை ஒதுக்கித் தள்ளப்பட்டன. இவ்விடயம் விரைவில் கைவிடப்பட்டது. பல ஆண்டுகள் அதைப் பற்றிய பேச்சே எழவில்லை.

நமது உலகின் தோற்றம் பாறைகளின் அசைவு மூலம் புவியோடு உருவானமை சம்பந்தமான கொள்கைகள், கண்ட நகர்வுடன் தொடர்புடையன. இத்தகைய கொள்கைகள் பற்றிய அறிவு பூமிநடுக்கங்கள், எரிமலைகளின் தொழிற்பாடுகள் ஆகியனவற்றின் மூலங்கள் பற்றிக் கற்பதற்கு முக்கியமான ஒரு மார்க்கமாகும்.

இன்று வெகெனரின் 'கண்ட நகர்வுக் கொள்கை' ஏற்கப்பட்டுள்ளது. கண்ட நகர்வுக்குரிய பிற காரணங்கள் ஆய்வுகள் மூலம் வெளிப்பட்டுள்ளமையால் அந் நிகழ்வுக்கு அவர் அளித்த விளக்கம் மட்டுமே புறக்கணிக்கப்பட்டுள்ளது: வெகெனரின் வாழ்நாளில் அவருடைய புரட்சிகரமான கொள்கை, எதிர்ப்புடனும் அவம்பிக்கையுடனும் மக்களால் நிராகரிக்கப்பட்டது. கிரீன்லாந்தின் பனிக்கட்டிக் கவிப்பினைத் துருவிப் பரிசீலனை செய்வதற்காக அங்கே ஆய்வுப் பயணங்களை மேற்கொண்ட துணிச்சலுக்காகக் கௌரவிக்கப்பட்டபோதும், உலகின் தோற்றம் பற்றிய மிக முக்கிய கொள்கைகளில் ஒன்றின் பிதாமகர் என்ற பெருமைக்காக அவருக்கு முன்பு ஒருபோதும் கௌரவம் வழங்கப்படவில்லை. எனினும், இன்று அல்ஃபிரட் வெகெனர் அவர்கள், உலகெங்கணும் வாழ்கின்ற விஞ்ஞானிகளின் அங்கீகாரத்தைப் பெற்ற, தமது புரட்சிகரமான கொள்கைக்காகக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

முற்றும்


**பிரஷாந்த் ஃபோட்டோ**
**OUTDOOR STILL PHOTOGRAPH**
திருமணம் பிறந்தநாள் நடனம்
பாரிஸ், பிரான்ஸ்
தொலைபேசி : 01-44680653
மொபைல் : 06-64820239
புகைப்படவியலாளர்
A.S. சந்திரன்







**நல்லதே நினைப்போம்! நல்லதே செய்வோம்**
**46 வருடம் நிரூபிக்கும் மலையாள மாந்திரீகம்**

1. எனது 46 வருட அனுபவத்தைக் கொண்டு அனுதினமும் வரும் வாடிக்கையாளர்கள் என்னை நேரில் கலந்து ஆலோசனை பெற இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
2. வெளிநாட்டவர்களுக்கும் என்னிடம் தொலைபேசியில் கலந்து பேச வாய்ப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்து தொலைபேசிகளுக்கும் C.L.I. வசதியுள்ளது.
3. ஜாதக, ஜாதகிகள் எதிர்கால வாழ்வு, ஆய்வு கண்ணோட்டம் பற்றி நேரில் வியக்கத்தக்க முறையில் என்னால் அருள் ஞானத்தால் கூறமுடியும். நடந்தது, நடக்கப் போவது, நடக்க இருப்பது, திருமணம் எப்போது எத்தனையாம் திகதி, நினைப்பது எப்போது நடக்கும் என்பதற்கெல்லாம் நேரில் வந்தால் என் அருள் ஞான சித்தத்தால் தெட்டத் தெளிவான பதில் கிடைக்கும்.
4. உங்கள் தேவைகளுக்கு நேரில் மட்டும் எந்த நாட்களும் முன் அறிவித்தல் இன்றி வருகை தரலாம்.
5. ஆணித்தரமாக கைரேகை பார்த்து பலன் தரும் சேவையும் உண்டு

உலக மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர் டாக்டர். தெய்வீக ஞான குரு P.K. சாமி ஐயாவின் பிரதான அனுசரணையுடன் ஞாயிறுதோறும் சக்தி தொலைகாட்சியில் இரவு 7.00 மணிக்கு வேலன் தொடரை தொடர்ந்து பாருங்கள்

எனது P.K. Saamy Associate (Pvt) Ltd.
ஒருங்கமைப்புடன் செயல்படும் நிறுவனத்தில் ஒரு அங்கமே எனது மலையான மாந்திரீக உச்சாடன பீட பிரிவு.

பேராசிரியர். டாக்டர். P.K. சாமி (J.D.G.A.N) J.P.
**ஸ்ரீ துர்கா தேவி மாந்திரீக உச்சாடன பீடம்**
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.
தொலைபேசி இலக்கங்கள் :
(CLI) Nos. 2342463, 2342464, 2344832, 4613124, 4613133. Fax : 2344831


# சதி வலைக்குள் தமிழ் - முஸ்லிம் உறவு!
## எதிர்காலத்தில் காத்திருக்கும் சுனாமியை மிஞ்சும் பேரழிவு

*(சென்ற வாரத் தொடர்ச்சி.....)*

புலிகளுக்குத் தெரியாமல் அவர்களது கட்டுப்பாட்டுப் பகுதியில் எந்தவொரு சம்பவமும் இடம்பெற வாய்ப்பில்லை என்பது உலகறிந்த உண்மை. ஆனால் தமிழ்ப் பகுதிகளில் தங்களால் நடத்தப்படும் வன்முறைகளையும், படுகொலைகளையும் இனந்தெரியாத நபர்களே செய்கிறார்களெனப் புலிகள் கூறிக்கொண்டிருப்பது வெட்கக் கேடானது. இந்த இனந்தெரியாத நபர்கள் யார் என்பதைத் தமிழ்ப் பொதுமக்கள் நன்கு அறிவார்கள். ஆனால், அச்சத்தின் காரணமாக அவர்களைப் பெயர் குறிப்பிட்டு இனம் காட்டிக்கொடுக்க முடியாத நிலையிலுள்ளார்கள்.

கொழும்பிலிருந்தும் மற்றும் நாட்டின் தென் பகுதியிலிருந்தும் முஸ்லிம்களின் சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட வாகனங்களைப் புலிகள் தமது ஏஜெண்டுகளின் மூலம் கடத்திச் சென்று வன்னிப் பகுதியில் சேர்த்திருக்கிறார்கள். இது புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் இடம்பெற்றது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் 2002 ஜூன் 27ஆம் திகதி வாழைச்சேனை நகரம் எரிந்தது. அதன் பின்னர் பல சமாதானக் கூட்டங்கள் இடம்பெற்றன. இக் கூட்டங்களில், தமிழ்ப் பகுதிகளிலும் முஸ்லிம் பகுதிகளிலும் வன்முறைகள் இடம் பெறாது பார்த்துக்கொள்வது எனப் பலமுறை தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்துகொண்ட புலிகள் பின்னர் என்ன செய்தார்கள்? வாகனங்களில் ஒலிபெருக்கியைக் கட்டிக்கொண்டு "முஸ்லிம்களிடம் (சோனிகளிடம்) தமிழ் மக்கள் பொருள் பண்டங்கள் வாங்குவதையோ விற்பதையோ வைத்துக்கொள்ள வேண்டாம். கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய வேண்டாம்". முக்கியமாக சோனிகளோடு நேருக்கு நேர் பார்த்துக் கதைக்கவே வேண்டாம்" என்று எச்சரிக்கை செய்தார்கள். இதையெல்லாம் சாதாரண அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களா செய்தார்கள்?

புலிகளின் இவ்வாறான தீவிர எச்சரிக்கைகளையும் மீறி முஸ்லிம் பகுதிகளுக்கு மீன், பால், தேன், விறகு, மரக்கறி என்பவற்றை விற்கவோ, வாங்கவோ வந்த அப்பாவித் தமிழர்கள் பலர் புலிகளாலும் புலி ஆதரவாளர்களாலும் தாக்கப்பட்டுக் கேவலப் படுத்தப்பட்டார்கள். மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் இவ்வாறான சம்பவங்கள் பரவலாக இடம் பெற்றன. முஸ்லிம் பகுதிக்கு மீன் விற்க வந்த வேலுப்பிள்ளை என்ற மீனவர் பலமாகத் தாக்கப்பட்டு மீன்கள் எல்லாம் அவர் மீது கொட்டப்பட்டு மீன் முள்ளுகள் குற்றிய நிலையில் அவர் துடிதுடித்துக் கொண்டு வாழைச்சேனைச் சந்தியில் கிடந்தார். புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்த வன்முறைக்குத் தமிழ்ச்செல்வன் என்ன சொல்லப் போகின்றார்? தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்தப் புலிகள் மேற்கொண்ட முயற்சியா இது?

தங்களது எச்சரிக்கையையும் மீறித் தமிழ் மக்கள் முஸ்லிம்களின் பகுதிகளுக்குள் செல்கிறார்கள் என்பதனால் புலிகள் எப்பாடுபட்டாவது முஸ்லிம்களையும் தமிழர்களையும் பிரிக்க வேண்டுமென்பதற்காக பலாத்காரமாக வாழைச்சேனையில் தனியான சந்தைகளை அமைத்தார்கள். இரு சமூகத்திற்கும் பொதுவாய் இருந்த பஸ் நிலையத்தை அப்புறப்படுத்தி தனித் தமிழ்ப் பகுதிக்குக் கொண்டு சென்றார்கள். இதுவும் வாழைச் சேனையில் நடந்தது.

தம்பலகாமத்தில் தமிழர்களுக்கென்று தனியான சந்தைகளை ஆரம்பித்தார்கள். ஆனாலும் தமிழ் மக்கள் இந்தக் கட்டுப்பாடுகளையும் அடக்குமுறைகளையும் மீறி முஸ்லிம் பகுதிச் சந்தைகளுக்கே பொருட்களை விற்கவும் வாங்கவும் வந்தது வேறு கதை. "முஸ்லிம் பகுதிகளில் பொருட்கள் மலிவாக இருப்பதால்தான் தமிழர்கள் அங்கே பொருட்களை வாங்கச் செல்கின்றார்கள். இதனை எப்படியாவது தடுத்தாக வேண்டும்" என்று இப்போது எம்.பி.யாக இருக்கும் அரியநேந்திரன் மட்டக்களப்பில் பகிரங்கமாகக் கூறியிருந்தார். இதனையெல்லாம் புலிகள் மூடி மறைக்கலாமா?

நிர்வாகப் பகிர்வின் கீழ் கிரானில் தமிழர்களுக்கு ஒரு பிரதேச செயலகமும், வாழைச் சேனையில் முஸ்லிம்களுக்கென ஒரு பிரதேச செயலகமும் திறக்கப் பட்டன. கிரான் பிரதேச செயலகம் திறக்கப்பட்டதை வரவேற்ற புலிகள், வாழைச்சேனையில் முஸ்லிம் பிரதேச செயலகம் திறப்பதற்கெதிராகப் போர்க் கொடி உயர்த்தினார்கள். வாகனேரிப் பகுதியில் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை ஆறு மணித்தியாலத்திற்குள் உழவு இயந்திரங்கள், உடைமைகள் அனைத்தையும் கைவிட்டுவிட்டு வெளியேறுமாறு புலிகள் உத்தரவிட்டார்கள். இதனால் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை பாழாய்ப் போனது.

தமிழீழம் முஸ்லிம்களுக்கும் சொந்தமானது என்றால் அதிலே முஸ்லிம்களின் நிர்வாக அலுவல்களை இலகுவாக்க ஒரு பிரதேச செயலகம் அமைவது தமிழீழத்திற்குத் தடையாக இருக்காதே!

இவை போன்ற பல நூற்றுக் கணக்கான சம்பவங்கள் போர் நிறுத்தப் புரிந்துணர்வு காலத்தில் நடந்தவை. உண்மையில் சொல்லப் போனால் சமாதான உடன்படிக்கைக் காலத்தில் புலிகள் முஸ்லிம்களோடு யுத்தமொன்றையே மேற்கொண்டிருந்தார்கள். "முஸ்லிம் காங்கிரஸோடு புலிகள் செய்து கொண்ட உடன்படிக்கை, அது அப்போதே செயலிழந்து போட்டுது" என்று தமிழ்ச்செல்வன் கூறியதன் அர்த்தம் இதுதான்.

தமிழ்ச்செல்வன் கொக்கட்டிச் சோலைக் காட்டில் வந்து முஸ்லிம் ஆன்மீகத் தலைவர்களை அழைப்பித்து அங்கு கூறியவை நயவஞ் சகத்தனமான கருத்துக்கள் என்பதை, புலிகள் முஸ்லிம்களோடு நடந்துகொண்ட கடந்த கால வரலாறுகள் பலவற்றை வைத்தே ஆணித்தரமாகக் கூற முடியும்.

புலிகள் இயக்கம் நடவடிக்கையில் ஈடுபட்ட காலம் தொடக்கம் பல நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் (ஒரு சில முஸ்லிம் பெண்களும்) எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தில் இணைந்து தமிழர் உரிமைக்காகப் போராடினார்கள். பலர் போர்க்களங்களுக்குச் சென்று மடிந்தார்கள். மடிந்தவர்களின் பெயர்களை புலிகளின் மாவீரர் துயிலும் கல்லறையில் இன்றும் காணலாம்.

அதன் பின்னர் கிழக்கிலுள்ள முஸ்லிம்களைப் படுகொலை செய்வதென்றும், வடக்கிலுள்ள முஸ்லிம்களை சொத்துக்களைச் சூறையாடிக் கொண்டு விரட்டியடிப்பதென்றும் புலிகள் திட்டம் வகுத்தபோது அமைப்பிலிருந்த அத்தனை முஸ்லிம் இளைஞர்களையும் நிராயுதபாணிகளாக்கி, கைகளைப் பின்புறமாகக் கட்டி, வரிசையில் நிற்க வைத்துச் சுட்டுத் தள்ளினார்கள்.

இவை மட்டுமா? தமிழர் உரிமைப் போராட்டத்திற்குத் தமது மானசீகமான ஆதரவை வழங்கி வரும் முஸ்லிம்கள் இன்று வரை ஏதோ ஒரு வகையில் தமது பொருளாதாரத்தையும் புலிகளுக்கு வாரியிறைத்து வந்திருக்கின்றார்கள்.

இவற்றையெல்லாம் நன்றி மறந்த புலிகள் மூன்றாந் தரப்பாக "முஸ்லிம்கள் பேச்சுவார்த்தையில் பங்குபற்ற இடமளிக்க முடியாது என்கின்றனர். போதாக்குறைக்கு தமிழர் போராட்டத்தின் தியாகத்தில் கிடைக்கும் பலாபலன்களில் முஸ்லிம்களுக்குப் பங்கு கிடையாது" என ஆவேசத்தனமாக எழுதி, தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைத்து வந்த பத்திரிகையாளன் நடேசனுக்கு நாட்டுப் பற்றாளர் விருது வழங்கிப் புலிகள் அவரது இனத் துவேஷ எழுத்துப் பணிக்குக் கௌரவம் அளித்துள்ளனர்.

தமிழ்ச்செல்வன் கிழக்குக்கு விஜயம் செய்தபோது கிழக்கில் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம் ஊர்களையும் பள்ளிவாசல்களையும் கடந்தேதான் சென்றார். மூதூர், கிண்ணியா, வாழைச்சேனை, தோப்பூர், பள்ளித்திடல், பங்குடாவெளி, அழுஞ்சிப் பொத்தானை, வாழைச்சேனை, ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி போன்ற ஊர்களில் புலிகளால் படுகொலை செய்யப்பட்டவர்களின் உடல்கள் நூற்றுக்கணக்கில் அடக்கம் செய்யப்பட்டுள்ள தியாகிகள் பூங்காக்களையும் கடந்தேதான் சென்றார். புலிகளின் கொடூரச் செயல்களுக்குச் சாட்சியாக அந்தப் பூங்காக்கள் மிளிர்கின்றன.

இந்த வேளையில் இன்னொரு முக்கிய விடயத்தையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். தமிழ்ச் செல்வனோடு கிழக்குக்கு விஜயம் செய்த குழுவினரில் கிழக்கில் முஸ்லிம்களின் படுகொலைகளுக்கு உத்தரவிட்டுத் தலைமைதாங்கி நடத்திய கரிகாலனும் இடம்பெற்றிருந்தார். கரிகாலன் இப்போது தமிழீழப் பொருண்மியப் பொறுப்பாளராக இருக்கின்றார்.

கிழக்கில் நடந்த முஸ்லிம்கள் மீதான படுகொலைகளுக்கு தலைவரின் பணிப்புரைகளை மதிக்காமல் பிரதேசத் தலைவர்கள் எடுத்த தன்னிச்சையான முடிவுகளும் அதனால் விளைந்த தவறுகளுமே காரணம் எனக் கூறும் தமிழ்ச் செல்வன், ஏன் இன்று அதே தவறுகளை விட்டு தலைவரின் பணிப் புரையை மதிக்காத கரிகாலனைக் கையோடு அழைத்து வந்திருக்கிறார்

**(மிகுதி அடுத்த வாரம் தொடரும்)**


**லண்டன், பாரிஸ்**
**இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்**

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்
**டாக்டர் ஆர். தியாகராஜன் DHMS, AMRSH (LON)**

01.03.2005 முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார். மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes), எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை, பேறின்மை (Strillity), ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும். ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டு மனம் மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையான பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.


முன்கூட்டிய பதிவுக்கு - லண்டன் தொலைபேசி:
**02087678004 - 07984803488 - 07833341693**
**E-mail : homoeocare@rediffmail.com**
இந்தியா - 0091-9843051099 இலங்கை - 0094-777602513
மார்ச் மாத இலங்கை விஜயம் 21.03.2005 முதல் 26.03.2005 வரை

## இன்னொருவர் பார்வையில்

புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட மேலும் ஐந்து பேர் கொலை செய்யப்பட்டது தொடர்பாகவும் புலிகளின் மகளிர் அணிப் பொறுப்பாளர் குவேனி மற்றும் இருவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாகவும் ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை குறித்து 'த ஐலண்ட்' என்ற ஆங்கிலப் பத்திரிகை மார்ச் மாதம் நான்காம் திகதி வெளியிட்ட ஆசிரிய தலையங்கம் இங்கே தமிழில் தரப்படுகிறது. "சகல கொலைகள் பற்றியும் விசாரணை நடத்துங்கள், ஒன்றிரண்டு பற்றி மட்டுமல்ல" என்ற தலைப்பில் இந்த ஆசிரிய தலையங்கம்" வெளியிடப்பட்டது. கௌசல்யன் கொலைக்குத் தாமே பொறுப்பென்று கருணா அணியினர் உரிமை கோரியுள்ளனரென்று இத் தலையங்கம் குறிப்பிட்டாலும், உண்மையில் யார் பொறுப்பென்று இன்னமும் சந்தேகங்கள் கிளப்பப்படுவது இங்கு குறிப்பிடத் தக்கதாகும். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் கௌசல்யன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதால் அது இராணுவத்தினரின் செயலென்பதே புலிகளின் வாதம். இன்னும் சில புலிகள் துணைப்படையினரின் துணையுடன் இராணுவம் தாக்குதல் நடத்தியதாகக் கூறுகின்றனர். புலிகளின் உட்பூசலே இக் கொலைக்குக் காரணமென்றும் கூறப்படுகிறது. எது எப்படியிருந்தாலும் கௌசல்யன், குவேனி ஆகியோர் மீதான தாக்குதலை மையப்படுத்தியே ஜனாதிபதி விசாணைக்குழு அமைக்கப்பட்டிருப்பதை மையப் பிரச்சினையாக முன்வைத்தே குறிப்பிட்ட ஆசிரிய தலையங்கம் எழுதப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி ஆணைக்குழு சகல கொலைகள் பற்றியும் விசாரிக்க வேண்டும்

வன்னிப் பிரிவினர் மீது நடத்தப்பட்டுவரும் தாக்குதல்கள் குறித்து விசாரணை நடத்த, ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றினை நியமித்ததன் மூலம், இவற்றுக்குப் பின்னணியில் ஆயுதப் படையினர்



கௌசல்யன்

உள்ளனரென்ற புலிகளின் குற்றச்சாட்டு உட்படப் பலவற்றைத் தெளிவுபடுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யலாம். ஆனால் கருணா தரப்பினர் இத் தாக்குதல்களுக்கு உரிமை கோரியிருப்பதால், இந்த ஆணைக்குழு உண்மையை வெளிப்படுத்துமா? புலிகள் இயக்கத்துக்குள் பிளவு ஏற்படுவதற்கு முன்னர் கிழக்கில் சுதந்திரமாகச் செயற்பட்ட வன்னிப் புலிகள், தமது இயக்க உறுப்பினர்களின் மனோதிடத்தைப் பலவீனப்படுத்தக்கூடிய வகையில் தாக்குதல் நடத்துமளவுக்கு கருணா அணியினர் சக்தியுள்ளவர்கள் என்பதை ஏற்றுக்கொள்வதென்பது முடியாத காரியமாகும்.

விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் சாட்சி சொல்வதற்கு வன்னித் தரப்பினரோ கிழக்குப் புலிகளோ வரப்போவதில்லை என்பதால் இது பெரிதாக அதன் நோக்கத்தை நிறைவேற்றப் போவதில்லையென்பதை நாம் ஏற்கெனவே சுட்டிக் காட்டியிருந்தோம்.

வன்னி உறுப்பினர்களுக்கு எதிரான வன்செயல்கள் குறித்து ஆராய அரசாங்கம் இப்பொழுது விசாரணைக்கான முயற்சிகளை முடுக்கிவிட்டுள்ளது. புலிகளின் வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்தும் இவ்வாறானதொரு அக்கறையை அரசாங்கம் காட்ட வேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட பின்னர் இதுவரை புலிகளால் 40 புலனாய்வுச் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஒரு பொலிஸ் அதிகாரி (இன்ஸ்பெக்டர் சுனில் தாபரே) உட்பட சுமார் 200 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இக் கொலைகள் பற்றியும் விசாரிக்கப்பட வேண்டும். புலிகள் விரும்பினால் அவர்கள் தமது தரப்பு நியாயங்களைச் சொல்வதற்கும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

அண்மையில் கிளாலியில் புலிகள், சிப்பாய் ஒருவரைச் சுட்டுக் கொன்றதோடு இன்னொரு சிப்பாயைக் காயப்படுத்தியபோது அரசாங்கம் விசாரணைக்கு ஏன் உத்தரவிடவில்லை என்பது ஆச்சரியமானது. இறைமையுள்ள ஒரு நாட்டின் சட்டபூர்வ ஆயுதப் படை அங்கத்தவர்களை விட, கௌசல்யனும் குவேனியும் கூடிய சமத்துவத் தன்மையுடைவர்களா? இக் குற்றச் செயல்கள் பற்றியும் விசாரிப்பதற்காக இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அதிகாரம் விஸ்தரிக்கப்படுமென்று அல்லது புதிய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைப் போன்றே, சிறுவர்களைக் கடத்திச் செல்லுதல், பணம் பறித்தல், ஆட்கடத்தல்கள் போன்றவையும் அவசரமாக விசாரிக்கப்பட வேண்டிய சில விடயங்களாகும். இலங்கையரான கே.யோகேஸ்வரன் என்பவர் (வட பகுதித் தீவிரவாத இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான காலஞ்சென்ற உமா மகேஸ்வரனின் சகோதரர்), பிரான்ஸிலிருந்து தமது உற்றார், உறவினர்களைப் பார்ப்பதற்காக இங்கு வந்தபோது அவரது கடவுச்சீட்டைப் பறித்துக்கொண்டு தமக்குப் பாதுகாப்பு நிதி வழங்குமாறு புலிகள் எவ்வாறு மிரட்டினார்களென்பது குறித்து நாம் கடந்த புதன்கிழமை செய்தி வெளியிட்டிருந்தோம்.

பிரான்ஸில் 24 வருடங்கள் வாழ்ந்தவர் அவர். நாளொன்றுக்கு ஒரு யூரோ வீதம், 24 வருடங்கள் பிரான்ஸில் வாழ்ந்த காலப் பகுதிக்குமாகப் பணம் செலுத்த வேண்டுமென்று அவர் கேட்கப்பட்டுள்ளார். அவர் பிரான்ஸுக்குச் சென்ற பின்னரும் கூட அதே விகிதத்திலேயே பணம் பறிக்கும் புலிகளுக்குக் கப்பம் செலுத்த வேண்டுமென்று அவருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இன்று யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலிலிருக்கும் நிலையில், இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள், புலிகளுக்குப் பாதுகாப்பு வரி வழங்காமல் நாடு திரும்ப முடியாத நிலையிருக்கிறது. புலிகள் தமது கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதிகளிலுள்ள மக்களிடமிருந்து அல்லது ஏ-9 பாதையில் பயணம் செய்யும் மக்களிடமிருந்து பணம் பறிமுதல் செய்கின்றனர்.


தொந்தரவுகள், பணம் பறித்தல், ஆட்கடத்தல்கள் போன்றவற்றைத் தடுப்பதற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் விசேட பிரிவொன்று (ஷரத்து 2.1) உண்டு.

"சர்வதேசச் சட்டத்துக்கிணங்க சம்பந்தப்பட்ட தரப்புகள் சித்திரவதை, பயமுறுத்தல்கள், ஆட்கடத்தல்கள், பணம் அபகரித்தல், தொந்தரவு செய்தல் உட்பட குடிமக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருக்க வேண்டும்."

பாதிக்கப்பட்டவர்கள் யாரிடம் சென்று நிவாரணம் கோர முடியும்? இந்த விவகாரங்களைக் கையாள முடியாத நிலையிலேயே அரசாங்கம் உள்ளது. யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் பீதியுற்றிருப்பதோடு புலிகளுக்குச் சார்பாகவும் உள்ளனர். இவர்கள் புலிகளுக்காகத் தூது செல்லும் - செய்திகளைச் சுமந்து செல்லும் பையன்களென்ற நிலைக்குத் தம்மைத் தரம் தாழ்த்தியுள்ளனர். அத்துடன் இலங்கை விமானப் படையினரின் ஹெலிகொப்டர் சவாரிகளை அனுபவிக்கும் புலிகளின் இலிகிதர்கள், சிற்றூழியர்கள் உட்படப் புலி உறுப்பினர்களோடு சேர்ந்து செல்லும் உல்லாசப்பயண வழிகாட்டிகளாகவே விளங்குகின்றனர்.



முறைப்பாடொன்று பற்றி விசாரிப்பதற்காகப் புலிகளின் வவுனியா அலுவலகத்துக்குச் சென்ற யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் சிலர், வன்னிப் புலிகளால் மோசமாக நடத்தப்பட்டுள்ளனர். அந்த அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த புளொட் உறுப்பினரொருவர் கடத்தப்பட்டமை குறித்தும், புலிகளின் அலுவலகத்தில் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் மோசமாக நடத்தப்பட்டமை குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டும். முன்னொரு தடவைகூட புலிகளின் படகொன்றுக்குள் வழமையான



குவேனி

பரிசோதனையை நடத்துவதற்காகச் சென்ற கண்காணிப்பாளர்கள் குழுவொன்று பலாத்காரமாக வெளியேற்றப்பட்டது. இவர்களில் சிலர் உரசல் காயங்களோடு திரும்பி வந்தனர்.

வன்செயலைக் கைவிட்டு, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடக்குமாறு புலிகளைக் கோர வேண்டிய நேரம் வந்துவிட்டது. ஆனால் யார் அதனைச் செய்வதென்பதே கேள்வியாகும். புலிகளுக்கு முன்னால் 'மியாவ்'வென்று சத்தமிடும் பூனையைப் போல் விளங்கும் அரசாங்கம் அவ்வாறு செய்ய முடியாதென்பது வெளிப்படையானது. வேறு யாராவது அதனைச் செய்வார்களா? சர்வதேச சமூகமென்ற பலமிக்க இளைஞன் இருக்கிறான். இந்தச் சந்தர்ப்பத்தில் அவனால் எழுந்து செயற்பட முடியுமா?


# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

காஞ்சி மாமுனிவர் முக்தியடைந்துவிட்ட இந் நேரத்தில் அந்தக் கவிதை என் நினைவுக்கு வந்து என் கண்கள் பனிக்கின்றன.

இதோ அந்தக் கவிதை :

*பார்த்த மாத்திரத்தில்*
*பாவத்தை யலம்புகின்ற*
*தீர்த்தப் பெருக்கை;*



*திருவாசகத் துட்கருத்தை;*
*கூர்த்த மதியால் ஞானக்*
*குறிப்புணர்த்துந் தெய்வ*
*மூர்த்தத்தை; முழுமுதலை*
*முன்கண்டு தெண்டனிட்டேன்!*

*கீழ்த்திசைக் கதிரோன் சற்றே*
*கிணற்றோரங் கிளர்ந்தெழுந்து*
*வாழ்த்திசை பாடுதற்கோ*
*வந்தனன் என்றயர்ந்தேன்;*
*சீழ்பிடித் திருக்கும் உள்ளச்*
*செம்புண்ணைச் சீலமென்னும்*
*வாள்பிடித் தறுத்தாற்றும்*
*வைத்தியனோ என்றதிர்ந்தேன்!*

*அத்வைதத் தத்துவத்தின்*
*ஆழத்தை யளந்துரைக்கும்*
*வித்வத்தை; வேதமென்னும்*
*வித்தெழுந்த விருட்சத்தை;*
*தத்வார்த்தத் தேன்பிலிற்றுந்*
*தாமரையை; தருமத்தின்*
*நித்யஸ் வருபத்தை*
*நேர் கண்டு நமஸ்கரித்தேன்!*

*பொன்னொத்த மேனியனைப்*
*புண்ணியனை; புவியனைத்துந்*
*தன்னொத்த நிலையில் வைத்துத்*
*தயைகாட்டுஞ் சங்கரனை;*
*மின்னொத்த விழியால்வினை*
*முற்றும்பொசுக்குந் தீப்பிழம்பை;*
*என்னொத்த பாவிக்கும் அருள்*
*இறைவனை ஏத்திநின்றேன்!*

*வலிமைக்கும் வலிமையான*
*வல்லவனை எம்முன்னால்*
*எளிமைக்கும் எளிமையாக*
*எழுந்தருளக் கண்டவுடன்,*
*'கலிமொய்க்கும் உலகத்தைக்*
*காப்பாற்றும் பெருந்தகையே!*
*நலிவில்லா நன்னெஞ்சை*
*நல்கிடுவீ' ரெனத் துதித்தேன்!*

*குடிசைவாழ் கோமகனை;*
*கோலோச்சுங் குணக்குன்றை;*
*படிமிசை வந்துதித்த*
*பரம்பொருளை; அருட்புனலின்*
*வடிகாலை; ஒளியுமிழும்*
*விடிவிளக்கை; அருமறையின்*
*அடிவேரை; ஆசானை*
*அர்ச்சிப்பா யென்மனமே!*

### மயக்கமா? கலக்கமா?

'நல்லவன் வாழ்வான்' படத்திற்குப் பிறகு நானும் இந்தப் பட உலகில் பணியாற்ற இயலும் எனும் நம்பிக்கை என் நெஞ்சுள் வேர் விட்டிருந்தது.

வேர் விட்ட நம்பிக்கைக்கு நீர் விட்டது போல் இன்னொரு வாய்ப்பும் என் வாசலைத் தேடி வந்தது.

பேரறிஞர் பெருந்தகை அண்ணாதான் அந்த வாய்ப்பை நல்கிய வள்ளல். அண்ணா கதை, வசனம் எழுதி, ப. நீலகண்டன் அவர்கள் இயக்கிய 'எதையும் தாங்கும் இதயம்' என்னும் படத்திற்குப் பாடல் எழுத அழைக்கப்பட்டேன். இந்தப் படத்தில் பட்டுக்கோட்டையும் பாட்டு எழுதியிருக்கிறார். திரு. டி.ஆர். பாப்பா அவர்கள்தான் இசை.

நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி, இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். ஆகியோர் நடித்த படம் இது.

*'உன்*
*அன்னை முகம் என்றெண்ணி - நீ*
*என்னை முகம் பார்க்கின்றாய்! -என்*
*பிள்ளை முகம் என்றெண்ணி- நான்*
*உன்னை முகம் பார்க்கின்றேன்'*

ஒரே பல்லவிதான் எழுதினேன். அண்ணாவுக்குப் பிடித்துப் போயிற்று. பாடல் ஒலிப்பதிவாயிற்று.

இதற்குப் பிறகு, அவ்வளவாக எனக்கு வாய்ப்புகள் வரவில்லை. இராமனாதபுரம் ஜில்லாவில் மழை பெய்வது போல் அவ்வப்போது சின்னச் சின்ன சந்தர்ப்பங்கள் கிடைத்து என் ஜீவனோபாயம் நடந்து கொண்டிருந்தது.


வாய்க்கும் கைக்கும் வருமானம் எட்டி வரவில்லை. வாழ்க்கை கசந்து போயிற்று. கானல் நீரிலே மீன் பிடித்துக் கொண்டிருப்பதாக என் உள்ளுணர்வு எனக்கு உணர்த்தியது.

(தொடரும்.......)




---

**உளவு பார்த்தலால் என்னென்ன நன்மைகள், தீமைகள் ஏற்படுகின்றன என்பதைக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....**




**அரசனுக்கு நெருக்கமான உறவினர்களாகச் சிலர் இருப்பார்கள். அதனாலேயே அரசனுக்கு விசுவாசமானவர்களாக அவர்கள் இருப்பார்கள் என்று எண்ணி அவர்களை உளவு பார்க்காமல் விட்டுவிடக் கூடாது.**

**ஆகவே ஒற்றன் என்கிற உளவாளி எதிரிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது மட்டுமல்ல, மன்னனுக்கு நெருக்கமானவர்களையும் கண்காணிக்கத் தவறிவிடக் கூடாது. வள்ளுவர் இவ்வாறு சொல்லுவதற்குக் காரணம் இருக்கிறது. ஆட்சி பீடத்தில் இருப்பவனின் இரகசியங்களைத் தெரிந்துகொள்ள அவனுக்கு நெருக்கமானவர்களைத்தான் எதிரிகள் அணுகுவார்கள். எதிரிகள் விரிக்கின்ற ஆசை வலையில் விழுந்து நாட்டு இரகசியங்களை எதிரிக்கு அவர்கள் தெரிவித்துவிடக் கூடும். ஆகவே, வெளிப்படையாகத் தெரிகின்ற எதிரிகளைக் கண்காணித்தால் மட்டும் போதாது, நெருக்கமானவர்களையும் கண்காணிக்க வேண்டும்.**

**அடுத்து, ஒற்றனுக்கு இருக்க வேண்டிய மூன்று குணங்களைப் பற்றி வள்ளுவர் குறிப்பிட்டுச் சொல்லுகிறார். நல்ல தோற்றம் இருக்க வேண்டும். தோற்றம் சிறப்பாக அமைந்தால்தான் சந்தேகப்பட்டாமல் அவனை எல்லோரும் எல்லா இடத்திலும் அனுமதிப்பார்கள்.**

**அடுத்து, பகைவரைப் பார்த்து அஞ்சாத குணம் கொண்டவனாக அவன் இருக்க வேண்டும். ஏனெனில், உளவு பார்க்கின்றவனுக்கு எத்தனையோ நெருக்கடிகள் தோன்றக் கூடும். அந்தச் சமயங்களில் அவன் தன்னுடைய துணிச்சலை இழந்துவிடுவானாயின் நினைத்த காரியத்தை முடிக்க முடியாது. அவனுடைய அச்சமே அவனைக் காட்டிக்கொடுத்துவிடும்.**

**மூன்றாவதாக, எந்தச் சூழ்நிலையிலும் அவன் உண்மையை வெளியிட்டு விடக் கூடாது. சந்தேகப்படும் எதிரிகள் அவனைப் பல கொடுமைகளுக்கும் உள்ளாக்குவார்கள். அவற்றை எல்லாம் தாங்கிக்கொண்டு உண்மையினை வெளியிடாத மன உறுதி அவனுக்கு இருக்க வேண்டும்.**

**இந்த மூன்று குணங்களும் ஒருங்கே அமையப்பெற்றவனே உளவாளியாகச் செயற்படும் தகுதி படைத்தவன் என்பது வள்ளுவரின் கருத்து.**

**உளவாளிகள் மாறுவேடமணிந்து செல்வதில் வல்லவர்களாக இருக்க வேண்டும். துறவி போலவும், விரதம் மேற்கொண்ட அடியவர் போலவும் மாறுவேடம் பூண்டு தடைகள் எல்லாம் தாண்டிச் சென்று, உண்மைகளை அறிந்து, பகைவன் செய்கின்ற கொடுமைகளால் சோர்வடைந்து தன்னைக் காட்டிக்கொள்ளாதவனே சரியான ஒற்றன்.**

**இதில் குறிப்பிடத் தக்க அம்சம் என்னவென்றால் மாறுவேடத் தோற்றமணிவது எவருக்கும் சுலபம். ஆனால் வேடத்திற்கேற்றபடி பிறர் சந்தேகப்படாமல் நடந்து கொள்ளுவதற்கு மிகுந்த சாமர்த்தியம் வேண்டும். இந்தச் சாமர்த்தியம் உள்ளவனே உளவு வேலைக்குத் தகுதி படைத்தவனாகிறான்.**

**வள்ளுவர் இன்னொன்றையும் சொல்லுகிறார். ஒரு ஒற்றன் செய்திகளைச் சேகரிப்பது மட்டும் முக்கியமில்லை. அந்தச் செய்திகள் அரைகுறைச் செய்திகளாக இருந்துவிடக் கூடாது.**

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)


---

'ஐம்பதிலும் ஆசை வரும்' என்பது கவியரசர் கண்ணதாசன் எழுதிய பாடல் வரிகளாகும். இன்றும்கூட பல்வேறு நிலைகளில் இந்த ஐம்பதைக் கடந்த அல்லது அண்மித்த ஆண்களால் பெண்கள் மீது தொடுக்கப் படக்கூடிய அத்துமீறல்கள் ஏராளம் எனலாம். பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போதும், அலுவலகங்களிலும் என அன்றாடம் இது தொடர்பான செய்திகள் வெளிவந்த வண்ணமே இருக்கின்றன. இதே நேரம் சொந்த உறவு களையே துவம்சம் செய்கின்ற வயோதிபர்கள் குறித்தும் நாம் அன்றாடம் அறிந்து வருகின்றோம்.

இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதற்கான காரணிகளை, பேராதனை போதனா மருத்துவமனையின் சிரேஷ்ட மனோதத்துவ வைத்தியர் கபில ரணசிங்க அவர்கள் அண்மையில் விபரித்திருந்தார். அதிலிருந்து சில முக்கிய விடயங்களை இங்கு காண்போம்.



# பெண்களை வதைக்கும் வயோதிபர்கள்



"ஒரு முறை தனது பாட்டியும் தாத்தாவும் தொடர்ந்தும் சண்டை பிடித்து வருவதாகக் கூறி ஓர் இளம் பெண், அவர்களையும் அழைத்துக்கொண்டு என்னிடம் வந்தார்.

"இவ்வளவு காலம் ஒழுங்காக இருந்த இந்த மனிதன் இப்போது முழுமையாகவே மாறிவிட்டார்." என்றார் அந்த மூதாட்டி அவரது வயது 72 ஆகும்.

"இவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது எனக்கொரு நோயும் கிடையாது." என்பது வயோதிபரின் வாதமாகும். அவரது வயது 78 ஆகும்

இவர்களைத் தனித்தனியாக அழைத்துப் பேசும்போது, "அண்மையில் இருந்து நான் எப்போதும் இவருடன் இருக்க வேண்டும். எனது பேத்திமாரும் திருமணம் முடிக்கவுள்ளனர். இந்த சமயத்தில்தான் முன்னெப்போதும் இல்லாதவாறு இவருக்கு காமம் தலைக்கேறியுள்ளது. எனக்கு இது பெரும் தலையிடியாகவுள்ளதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் அதிகமாக வேதனை ஏற்படுகின்றது. இதனால் இவருக்கு மாமிச உணவுகளை நாங்கள் கொடுப்பதே இல்லை" என அந்த மூதாட்டி கூறினார்.

அதாவது முன்பைவிட அவருக்கு இப்போது பாலியல் ரீதியிலான ஆசைகள் அதிகரித்திருப்பதையே இவர் உணர்த்தினார். அத்துடன் முன்னர் நன்கு ஒழுக்கமாக இருந்த அவர் இப்போது தனது பேரன், பேத்திகளின் முன்பாக ஆடைகளைப் பற்றிக் கூட எதுவிதமான கவனமும் இல்லாமல் நடமாடுவதாகவும் கூறினார்.

வீட்டார் பார்த்துக்கொண்டு இருக்கும்போதே அவர் சிறுநீர் கழிப்பதாகவும் குறிப்பாக அவருக்கு இவ்வாறான சந்தர்ப்பங்களின்போது வெட்கம் என்பதே ஏற்படுவதில்லை என்றும் கூறப்பட்டது. எனவே இந்த வெட்கம் இல்லாத செயற்பாடே அவருக்குக் காமம் தலைக்கேறியுள்ளதாக உணரப்படுகின்றது.

இதே நேரம் அந்த நபருக்கு அண்மைக் காலமாக மறதி ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஒரு முறை தனது வீட்டில் இருந்து வெளியே சென்ற இவர் திரும்பி தனது வீட்டுக்கு வர வழி தெரியாமல் அலைந்து திரிந்துள்ளார். முன்பு ஒழுங்காக ஆடைகளை அணிந்த இவர், இப்போது அதில் அக்கறை செலுத்துவது குறைவு.

ஆக, இந்த வயோதிபரோ, அவரது குடும்பத்தவரோ அறிந்திராதபோதும் இந் நபர் ஒரு விதமான நோய்க்கு உட்பட்டுள்ளார். இவரது குருதியையும் மூளையையும் பரிசோதித்ததன் பிரகாரம் இவருக்கு டிமென்ஷியா (Dimentia) எனும் நோய் ஏற்பட்டுள்ளமை தெரிய வந்தது. அதாவது - வயோதிபப் பருவத்தை அடையும்போது அதனுடன் ஏற்படக் கூடிய புத்தி தெளிவில்லாத நிலையாகும்.

வயோதிபப் பருவத்தை அடையும்போது மூளையில் உள்ள செல்கள் மரணித்துவிடுகின்றன. இதில் ஞாபகம் மற்றும் அறிவு என்பவற்றைக் கட்டுப்படுத்தும் செல்களே ஆரம்பத்தில் மரணித்துவிடுகின்றன. அனைத்து வயோதிபர்களுக்கும் இந்நிலை ஏற்படாது என்ற போதிலும் இது பரம்பரையின் மூலம் ஏற்படக் கூடியதாகும்.

குறிப்பாக 65 வயதைத் தாண்டும்போது இந்நோய் ஏற்படுவதுடன்; 65 வயதைத் தாண்டியவர்களில் 5 வீதமானவர்களும் 70 வயதைத் தாண்டியவர்களில் 10வீதமானவர்களும் 75 வயதைத் தாண்டியவர்களில் 15வீதமானவர்களும் இந்நோய்க்கு உட்படுகின்றனர்.

இந் நோயின்போது அண்மைக்கால ஞாபகங்கள் அனைத்தும் மறந்துவிடுகின்றன. ஆனால் ஆரம்பகால ஞாபகங்கள் மறக்கப்படுவதில்லை.

சமூகப் பண்பாடுகளுக்கு மரியாதை செலுத்தவது குறைந்து விடும். வெட்கம் குறைந்துவிடும். தோற்றப்பாடு மாற்றம் பெறும். புதுமையான எண்ணங்கள் தோன்றும். இதனால் பாலியல் ரீதியிலான அதீத ஆசைகள் அடிக்கடி தோன்றும். இதற்கு முன்னர் அதனைக் கட்டுப்படுத்தி வந்த செல்கள் மரணித்து விட்டமையே இதற்குக் காரணமாகும்.

இந் நோய் ஏற்படுகின்ற பெண்களுக்கு வெட்கம் குறைந்து போனாலும் பாலியல் வேட்கைகள் அதிகரிப் பதைக் காண இயலாது. இதற்கு இவர்களது பெண் ஹோர்மோன்களே காரணமாகின்றன.

வயோதிப நிலையை அடையும்போது மறதி ஏற்படுவது பொதுவான ஒரு குணமாகும் என எண்ணுகின்ற எமது சமூகம், அவ்வாறான நபர்களுக்கு வெட்கம் ஏற்படாதபோது அதனைக் கெட்ட நடத்தை என்றே காண்கிறது. எனினும் இவ்வாறான நோயாளிகள் வெண்டுமென்று நினைத்து இவற்றைச் செய்வது கிடையாது.

இந் நோய் ஏற்பட்டதன் பின்பு அதனைச் சுகப்படுத்த இயலாது. ஆனால் இவ்வாறான உணர்ச்சிகளை எழவிடா மல் கட்டுப்படுத்தக்கூடிய மருந்து வகைகள் உள்ளன. இவ்வாறான மருந்து வகைகள் அதிக விலையைக் கொண்டவையாக இருப்பதும் ஒரு பிரச்சினையாகும்.

எனவே இவ்வாறான உணர்ச்சிகள் ஏற்படாதவாறு உடம்பைக் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதால் இந்த நோயில் இருந்து தங்களைக் காத்துக்கொள்ள இயலும்.

உடலைக் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்வது எவ்வாறு?

அதாவது, உரிய முறையில் உடம்பின் நிறையை கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

உடற்பயிற்சிகளை மேற்கொள்ளல் உரிய உணவு வகைகளை உட்கொள்ளல்.

மானசீகமான முறையில் ஒழுங்கான சுகாதாரத் தன்மையைப் பேணுதல்.

இந்த வகையில் மூளைக்கு வேலை கொடுத்து செயற்படுவதன் மூலம் இந் நோய் ஏற்படாமல் கட்டுப்படுத்திக்கொள்ள இயலும்.

நோய் ஏற்பட்டதன் பின்னர், அவர்களது நடத்தைகளை மாற்றும் முகமாக சிகிச்சையளிக்கப் படுவதன் மூலம், அவரால் பிறருக்கு ஏற்படக்கூடிய தொல்லைகளைத் தவிர்க்கலாம். இந் நோயாளிகளுக்கு எதையுமே புரிய வைக்க முடியாது. ஆகவே இவர்களைத் திட்டக் கூடாது.

இவர்களை, குழந்தைகளைப் போல் பராமரிக்க வேண்டும்."

- இவ்வாறு மனோதத்துவ வைத்தியர் கபில ரணசிங்க குறிப்பிட்டிருந்தார்.


-பாரூக்

# சங்கர மடத்துக் கிங்கரர்கள்

10

பெண் பக்தையொருவர் சொன்ன சதுர்வேதியின் பிரம்படிச் சிகிச்சையைக் கேட்டுப் நடுங்கிப் போனார்களாம் போலிஸார்.

"முதலில் பக்தியோடுதான் சதுர்வேதியிடம் போனேன். போகப் போக அவரது சுயரூபம் தெரிந்து தப்பிக்கப் பார்த்தேன். ஆனால், மிரட்டி மிரட்டி என்னை அவரிடம் வரவழைத்தார். பெரும்பாலான நேரங்களில் கையில் பிரம்பு வைத்திருப்பார்.



கொலையுண்ட சுரேஷ்

எந்த பக்தையாவது தனக்குப் பணியவில்லை என்றால், மற்ற பக்தைகளின் எதிரில் அவரை நிர்வாணப்படுத்தி பிரம்பால் விளாசுவார். அப்போது அவரது சீடர்கள், 'சுவாமிஜி மேலே பெருமாள் அருள் வந்திருக்கு. சேவிச்சுக்கோங்க. கோடி புண்ணியம்' என்று கத்துவார்கள். கையெடுத்து கும்பிடாவிட்டால் மற்றப் பெண்களுக்கும் பிரம்படி விளாசல் கிடைக்கும்" என்று கூறியிருக்கிறார் அந்தப் பெண் பக்தை.

"ஜாலி மூடில் இருக்கும்போது ஒரு டப்பாவுக்குள் அரிசியைக் காட்டுவார் சுவாமிஜி. அதை அப்படியும் இப்படியுமாகக் காற்றில் அசைத்துவிட்டு, திரும்பவும் எங்களிடம் காட்டுவார். டப்பாவுக்குள் பாயசம் இருக்கும். அவரிடம் எப்போது பிரம்படி கிடைக்கும், எப்போது பாயசம் கிடைக்கும் என்பதைச் சொல்லவே முடியாது" என்று கூறினாராம் இந்தப் பக்தை.

வேறொரு பக்தையோ, உடல் நலமில்லை என்றுதான் அவரிடம் நான் போனேன். முதலில் தீர்த்தம், அது இதென்று கொடுத்தவர், ஒரு கட்டத்தில் என்னை நிர்வாணமாக நிற்கச் சொன்னார். நானும் மதிகெட்டுப் போய் அவர் சொன்னபடி செய்தேன். எனது நிர்வாண உடம்பின் மீது ஆங்காங்கே மிளகாய்ப் பொடியைத் தூவிய சதுர்வேதி, அப்போது நான் சங்கடத்தோடு நெளிவதைத் தனது சீடர்களிடம் காட்டி வாய்விட்டுச் சிரித்தார்" என்றாராம்.

'பெண்கள் விஷயம் மட்டுமல்ல...ஆண்கள் பலரையும் தனது கட்டுக்குள் வைத்திருந்தார் சதுர்வேதி' என்றும் சொல்லும் பொலிஸார், அது பற்றிய விவரங்களைச் சொன்னபோது தலை சுற்றியது.

"வசதியான வீட்டுப் பையன்களைத் தன் பிடிக்குள் கொண்டுவர நினைத்தால், உடனே சதுர்வேதி ஒரு கதையைச் சொல்லுவார். 'ஒவ்வொரு ஞானிக்கும் ஒவ்வொரு விதமாக ஞானதோயம் வரும். என்னுடன் இன்னொரு ஆண் முதலில் உறவு கொண்ட போதுதான் எனக்கு ஞானோதயம் பிறந்தது' என்பாராம். தன்னிடமிருக்கும் தெய்வீக சக்தியை, தன்னுடைய ஆண் சிஷ்யருக்கு கடத்துவதாகச் சொல்லி, அவரோடு தகாத உறவு கொள்வாராம். அது மட்டுமல்ல....தனது இந்திரியத்தை ஒரு பாத்திரத்தில் வடித்து, அதை நீரில் கரைத்து தனது ஆண் சிஷ்யர்களுக்குக் கொடுத்து, 'இந்தா, புண்ணிய தீர்த்தம் என்று சொல்லி குடிக்கச் சொல்வாராம்' என்று ஒரு பொலிஸ் அதிகாரி சொன்னார்.

ஆழ்வார்ப்பேட்டை தொழிலதிபர் கொடுத்த புகார்தான் சதுர்வேதியின் கைதுக்கு வழி வகுத்தது. தொழிலதிபரின் மனைவி மற்றும் மகளைக் கடத்தி தன் வசம் வைத்துக்கொண்டு, அவர்களை விடுவிக்க ஐம்பது இலட்ச ரூபாய் பணம் கேட்டார் என்பதுதான் சதுர்வேதி மீதான முதல் குற்றச்சாட்டு. அந்தத் தொழிலதிபரின் மகள் கொடுத்த வாக்குமூலம்தான் இந்த சிருங்கார சாமியார் மீது குண்டர் சட்டத்தைப் பாய்ச்சியிருக்கிறது. மகள் பொலிஸாருக்கு கீழ்க்கண்டவாறு கூறியிருந்தாள்.

தொழிலதிபருடன் கருத்து வேறுபாடு வந்ததைத் தொடர்ந்து, அவருடைய மனைவியையும் மகளையும் ஆன்மீக யாத்திரை போகலாம் என்று சொல்லி தன்னோடு அழைத்துச் சென்றிருக்கிறார் சதுர்வேதி. செப்டெம்பர் 17ஆம் திகதி தொடங்கி, நவம்பர் ஆறாம் திகதி கைதாகிற வரையில் ரிஷிகேசம், நேபாளம், டெல்லி என்று வெவ்வேறு ஊர்களில் இவர்களைத் தன் பிடிக்குள் வைத்திருந்தாராம்.

முதலில் மிகுந்த கரிசனத்தோடு நடந்துகொண்ட சதுர்வேதி, நாட்கள் நகர நகர, தனது சுயபுத்தியை இந்த தாய் - மகளிடம் காட்டத் துவங்கியிருக்கிறார்.

"பல நாள் இரவுகளில் என் அம்மாவிடமிருந்து என்னைப் பிரித்து தனி அறையில் அடைத்துவிடுவார் சதுர்வேதி. நிர்வாணமாக எனது அறைக்குள் நுழைந்து, மிக அருவருப்பான செய்கைகள் செய்வார். தனது இச்சைக்கு இணங்கிப் போகச் சொல்லி வற்புறுத்தியபடியே, நிர்வாணமாக என் மேல் படருவார். நான் திமிறிக்கொண்டு தப்பிக்க முயன்றால், 'நான்தான் கோகுல கிருஷ்ணன். நீதான் கோபிகை. எனக்கு நீ பண்ணுகிற சேவை, அந்த பெருமாளுக்கே பண்ணுகிற சேவை' என்பார்.

"அப்போதும் நான் அவரது பிடியிலிருந்து தப்பிக்க முயல்வேன்." என் விருப்பத்தை நிறைவேற்ற மறுத்தால், நாளைக் காலை தூங்கி எழுந்திருக்கும்போது உன் முகத்தில் கற்றையாக மீசை முளைத்திருக்கும். உன் அப்பா கோர விபத்தில் சிக்கிச் செத்துப்போனார் என்று செய்தி வரும். உன் வீடு தீப்பிடித்து சாம்பலானதாக தகவல் வரும். உலகத்தைக் காப்பாற்ற வந்த கலியுகப் பெருமாள் நான்.

'என் கோபம் உன்னையும் உன் குடும்பத்தையும் சும்மாவிடாது' என்று மிரட்டுவார்.

என் முகத்தை அழுந்தப் பிடித்துக்கொண்டு, கண்களை ஊடுருவிப் பார்ப்பார். அந்தச் சமயங்களில் என் புத்தி பேதலித்துப் போகிற மாதிரி இருக்கும். அவரை எதிர்த்து எதுவும் செய்ய முடியாத அளவுக்கு ஆழ்நிலை மயக்கத்துக்குப் போய்விடுவேன். மறுபடியும் நினைவு வரும்போது, அசையவே முடியாத அளவுக்கு உடம்பில் வலி பின்னி எடுக்கும். ஒவ்வொரு நாளும் அந்த மனித மிருகத்திடம் சிக்கி நரக வாயிலுக்கே சென்று வந்துகொண்டிருந்தேன்" என்று தனது வாக்குமூலத்தில் சொல்லிக் கதறியிருக்கிறாராம் அந்த இளம்பெண்.

சாமிகளைப் போன்று காவி உடைகளுக்குள் பதுங்கியிருக்கும் இத்தகைய காமக் கோட்டான்கள் பற்றிய திடுக்கிடும் தகவல்கள் மனிதநேயம் மிக்கவர்களை நிலை தடுமாற வைக்குமென்பது உண்மைதான். சதுர்வேதி மீது குண்டர் சட்டத்தை ஏவியிருக்கும் பொலிஸார், திருக்கோட்டியூர் மாதவன் அல்லது ஆடிட்டர் இராதாகிருஷ்ணன் ஆகியோர் மீதான தாக்குதல் வழக்குகளில் சம்பந்தப்பட்டிருக்கும் சங்கராச்சாரியார் ஜெயேந்திரரைக் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் உள்ளே தள்ளலாமென்று பொலிஸ் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது.

இதேவேளை கடந்த வருடம் மர்மமான முறையில் இறந்துபோன சுரேஷ் என்ற சிறுவனின் விவகாரமும் சங்கர மடத்தை இப்போது பெரும் சிக்கலில் மாட்ட வைத்திருக்கிறது. இளைய மடாதிபதி விஜயேந்திரரின் சொந்த ஊரான தண்டலத்தில் உள்ள வேத பாடசாலையில் பயின்று வந்தவன் சுரேஷ். சென்னை திருவொற்றியூரைச் சேர்ந்த மேற்கு மடத் தெருவில் வசித்துவரும் சேகர் - ராஜலட்சுமி தம்பதிகளின் புதல்வன் சுரேஷ். இவனையும் இவனது அண்ணனான கணேஷையும் சென்னைக்கு அருகிலுள்ள தண்டலம் என்ற ஊரிலிருக்கும் வேத பாடசாலையில் வேதம் பயில்வதற்காக 1997ஆம் ஆண்டில் சேர்ப்பித்தனர்.

மூத்த மகன் கணேஷ், குறிப்பிட்ட காலத்துக்கு முன்பே தனது படிப்பை முடித்து, 2002ஆம் ஆண்டில் சென்னைக்குத் திரும்பி விட்டார். கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் சுரேஷ் படிப்பு முடித்து ஊர் திரும்ப வேண்டிய நேரம். அவனை அழைத்துவர ஆவலோடு அம்மா ராஜலட்சுமி தண்டலம் போய்ச் சேர்ந்தபோது, 'தண்டலத்துக்கு அருகில் இருக்கும் காக்கவாக்கம் என்ற கிராமத்தில் இருக்கும் குளத்தில் தவறி விழுந்து சுரேஷ் இறந்துவிட்டான்' என்ற அதிர்ச்சிச் செய்திதான் கிடைத்தது.

எல்லாம் நடந்து முடிந்து ஓராண்டு ஓடிவிட்டது. இந்த நிலையில், காஞ்சி மடத்தின் மீது பல்வேறு புகார்கள் பாய்ந்தபடி இருக்க, தங்கள் மகன் சுரேஷின் மரணம் குறித்தும் புகாரோடு கிளம்பிவிட்டனர் அவனுடைய பெற்றோர்.

திருவொற்றியூரில் இருக்கும் அந்தக் குடும்பத்தினர். சுரேஷை இழந்த துயரத்திலிருந்து மீளாதவர்களாகவே இருந்தனர் சுரேஷின் அம்மா ராஜலட்சுமி கலங்கிய குரலில் பேச ஆரம்பித்தார்.


"நாங்க ஏழ்மையான குடும்பம். ரெண்டு பசங்களும் படிப்புல சுட்டிங்க. தொடர்ந்து படிக்க வைக்க எங்களுக்கு வசதி பத்தலை. அப்பதான், எங்களுக்குத் தெரிஞ்ச ஒருத்தர், 'பசங்கள வேதம் படிக்க வைக்கலாம். காஞ்சி சங்கர மடத்து சார்புல தண்டலத்துல இலவச வேத பாடசாலை நடத்தறாங்கனு' சொன்னாரு. காஞ்சி மடத்து மேல அளவுகடந்த மரியாதையும் பக்தியும் உள்ள நாங்க, கடந்த 97ஆம் வருஷம் ரெண்டு பசங்களையும் அங்க கொண்டு போய்ச் சேர்த்தோம். அங்கேயே தங்கியிருந்துதான் வேதம் படிக்கணுங்கறதால, பசங்களைப் பார்க்கறதுக்கு தண்டலத்துக்கு நானும் எனது கணவரும் அடிக்கடி போவோம். சில நாட்கள் பசங்க வீட்டுக்கு வந்துட்டுப் போவாங்க. ஆசாரமாத்தான் எங்க பசங்க அங்க தங்கியிருந்து படிச்சாங்க" என்றவர், பொங்கிய அழுகையை அடக்கிக்கொண்டு தொடர்ந்தார்.

"கணேஷ் சீக்கிரமாகவே தன்னோட படிப்பை முடிச்சுட்டதால தம்பியை விட்டுட்டு அவன் மட்டும் ஊர் திரும்பினான். வந்தவன், தண்டலம் வேத பாடசாலையில் தப்புத் தண்டாக்கள் நடக்கறதா சொன்னப்ப, நான்



கொலை செய்யப்பட்டார் என்று சந்தேகிக்கப்படும் சுரேஷின் பெற்றோர்

அதிர்ந்து போனேன். ஆனா, அதைப்பத்தி யார்கிட்டயும் சொல்லிக்கல. இடையில ஒரு நாள் சுரேஷ் வீட்டுக்கு வந்தான். வாடின முகத்தோடு இறுக்கமா இருந்தவனைக் கூட்டி வெச்சு, ஆறுதலாப் பேசினேன். என் பேச்சைக் கேட்டதும், அழ ஆரம்பிச்சுட்டான். அவனைச் சமாதானப்படுத்தி பேச வெச்சேன். அப்பதான், ஏற்கெனவே கணேஷ் என்கிட்ட சொன்னமாதிரியான சில விஷயங்களை சுரேஷும் சொன்னான். பாடசாலைக்கு பல சமயங்களில் பொம்பளைங்க வந்து போறதை, நேர்ல பார்த்திருக்கான். ராத்திரி



வேத பாடசாலை மாணவர்களுடன் சுரேஷ்

நேரத்துல தண்டலம் வேத பாடசாலையில ரொம்பவே தப்புத் தண்டா நடந்திருக்கு. அதை சுரேஷ் சில தடவை பார்த்திருக்கான். அதுக்காகப் பாடசாலையில் இருந்த சில பெரிய மனிதர்கள் கூப்பிட்டு மிரட்டுனாங்கன்னும் சொன்னான்.


'இன்னும் சில மாதங்கள்ல வேதத்தைப் படிச்சுட்டு நீ அங்க இருந்து வந்துடப் போற...ஏண்டா கண்ணு இதுக்காக வருத்தப்படறே'னு ஆறுதல் சொல்லி, அவனைச் சமாதானப்படுத்தினேன். 'தண்டலத்துக்குப் போன பின்னாடி, ராத்திரில எது நடந்தாலும் நீ கண்டுக்காதே'னும் புத்தி சொல்லி, அனுப்பி வெச்சேன். ரெண்டு மனசோடதான் போனான். ஆனா, திரும்பி வரலியே...." என்று சொன்னவர், தொடர்ந்து பேச முடியாதபடிக்கு வெடித்து அழ ஆரம்பித்துவிட்டார்.

அருகில் இருந்த கணேஷ், தனது அம்மாவைச் சமாதானப்படுத்திவிட்டுப் பேச ஆரம்பித்தார்.

"போன வருஷம் செப்டெம்பர் 14ஆம் திகதியோட என் தம்பிக்குப் படிப்பு முடிஞ்சுது. அதுக்காக என் தம்பியைக் கூப்பிட்டுவர தண்டலத்துக்குப் போனாங்க எங்கம்மா. அங்க போனா என் தம்பி இல்லை. வேத பாடசாலை நிர்வாகிகள்கிட்ட கேட்டப்போ, 'பக்கத்துல இருக்குற காக்கவாக்கம்ங்ற ஊர்ல மடத்துக்குச் சொந்தமான நிலமெல்லாம் இருக்கு. அங்க வாழை இலை அறுத்துட்டு வர்றதுக்கு நாங்கதான் அவனை அனுப்பி இருக்கிறோம்'னு சொல்லியிருக்காங்க. நேரம் போயிட்டே இருந்திருக்கு. என் தம்பி வரலை. அப்போ யாரோ ஒரு ஆள் ஓடி வந்து, 'காக்கவாக்கம் குளத்துல ஒரு பையனோட பொணம் மெதக்குது. உங்க பையனானு வந்து பாருங்க'னு அம்மாவைக் கூட்டிட்டுப் போயிருக்காங்க. போய்ப் பார்த்தா, அது என் தம்பிதான் என்ற கணேஷ் மேற்கொண்டு பேச முடியாமல் திணறினார். தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு மூலையில் அமர்ந்திருந்த ராஜலட்சுமி மீண்டும் பேச ஆரம்பித்தார்.

"என்ன ஏதுனு பாடசாலையில இருந்தவங்ககிட்ட கேட்டோம். எதுக்குமே சரியான பதில் சொல்லலை. குளத்துல எம் பையன் தவறி விழுந்து இறந்திருந்தா, நிச்சயம் தண்ணியைக் குடிச்சிருப்பான்.

(தொடரும்.....)



ந்தியினாற் பெருமையெல்லாம் கொடுக்கச் சொல்லி,
பசிபிணிக ளில்லாமற் காக்கச் சொல்லி,
உத்தமநன் னெறிகளிலே சேர்க்கச் சொல்லி,
உலகளந்த நாயகிதாள் உரைப்பாய் நெஞ்சே!

– சுப்பிரமணிய பாரதியார்

# பாப்பா முரசு

# நெசவாளியின் கதை

**பாப்பா முரசு சிறுகதை**

ஓர் ஊரில் மந்தாரகன் என்றொரு நெசவுத் தொழிலாளி இருந்தான். ஒருநாள் னது தறியின் தாங்குக் கட்டையொன்று முறிந்து னது. அதனால் அவன் அந்தக் கட்டையை மாற்றி று வலிமையான ஒரு கட்டையைப் பொருத்த ண்டும் என்று எண்ணி தன் கோடரியை த்துக்கொண்டு காட்டுக்குச் சென்றான்.

அவன் காடு முழுவதும் அலைந்து திரிந்து கடைசி ஒரு வலிமையான மரத்தைத் தேர்ந்தெடுத்து, த வெட்டுவதற்காகத் தன் கோடரியை ஓங்கினான். போது 'நிறுத்து' என்று பயங்கரமாக ஒரு சத்தம் ட்டது.


மந்தாரகன் அச்சத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தான். த அந்த மரத்திலிருந்துதான் அந்தக் குரல் வந்தது று தெரிந்துகொண்டான். அந்த மரத்தில் வசிக்கும் தேவதை அவன் முன் தோன்றி, "நண்பா! இந்த ம் எனது வீடாகும். அதனால் தயவுசெய்து இதனை ட்டாதே" என்று கேட்டுக்கொண்டது.

"ஆனால் நான் என்ன செய்வது? உடைந்து ன தறிக்கு ஒரு கட்டை தேவைப்படுகிறது அந்தத் யை வைத்துத்தான் நானும் எனது குடும்பத்தினரும் ழக்கின்றோம். இல்லையேல் பட்டினி கிடக்க ண்டியதுதான். அதனால் தயவுசெய்து நீ வேறு த்திற்குப் போய்விடு. இந்த மரம்தான் பலமானது, னால் இதைத்தான் நான் வெட்டப் போகிறேன்" று மந்தாரகன் கூறினான்.

"நீ கூறிய காரணத்தைக் கேட்டு நான் மிக்க ழ்ச்சியடைகிறேன். நீ இந்த மரத்தை விட்டு விட்டால் னக்கு வேண்டிய வரத்தைத் தருகிறேன், கேள்" என்று தேவதை சொன்னது.

"ஓ! அப்படியென்றால் நான் வீட்டுக்குப் போய் என் மனைவியிடமும் நண்பர்களிடமும் உன்னிடம் என்ன கேட்க வேண்டுமென்று கலந்தாலோசித்து, உன்னிடம் வந்து சொல்கிறேன்!" என்று பதிலுரைத் தான். அதற்கு அந்தத் தேவதை சம்மதித்தத்து

வீட்டுக்குத் திரும்பி வரும் வழியில் மந்தாரகன் ஒரு நாவிதனைச் சந்தித்தான். அவன் மந்தாரகனின் நண்பன் ஆவான்.



"நண்பா! ஒரு தேவதை எனக்கு என்ன வரம் வேண்டுமென்றாலும் தருகிறேன் என்கிறது. நான் என்ன வரம் கேட்க வேண்டும்?" என்று மந்தாரகன் அவனிடம் கேட்டான்.

"ஆகா! அப்படியா சேதி! நீ ஒரு அரசு வேண்டுமென்று கேள். அதற்கு நீ மன்னனாகிவிட்டால் நான் மந்திரியாகிவிடுவேன். பிறகு நாம் இருவரும் வளமுடனும் மகிழ்ச்சியுடனும் வாழலாம்!" என்று நாவிதன் சொன்னான்.

"இது நல்ல யோசனைதான்! இருந்தாலும் நான் என் மனைவியிடம், அவள் என்ன விரும்புகிறாள் என்று கேட்கிறேன்!" என்று கூறினான் மந்தாரகன்.

"வேண்டாம், அப்படி மட்டும் செய்யாதே! பெண்கள் ஆண்களைப் போல் அவ்வளவு புத்தி சாலிகள் இல்லை, அதனால் அவர்களிடம் முக்கியமான விசயத்தைச் சொல்லக் கூடாது என்பது ஆன்றோர் வாக்கு!" என்று நாவிதன் சொன்னான்.

"ஆனால் என் மனைவி ரொம்ப நல்லவள். நான் அவளிடம் கேட்காமல் எதையும் செய்வதில்லை. அதனால் நான் அவளிடம் கண்டிப்பாகக் கேட்க வேண்டும்" என்று நெசவாளி பதில் கூறினான்.

பிறகு மந்தாரகன் தனது வீட்டுக்கு விரைந்து சென்று அங்கு தன் மனைவியைக் கண்டு அவளிடம் தேவதை மரத்தில் தோன்றி தனக்கு வரம் கொடுக்கவிருக்கும் விஷயத்தைப் பற்றி கூறினான்.

"நான் என்ன வரம் கேட்பது? என் நண்பன் நாவிதன், நான் ஒரு அரசாட்சியைக் கேட்க வேண்டு மென்றும், அது கிடைத்தால் நாம் பெரிய பணக்காரர் களாகிவிடுவோம் என்றும் கூறுகிறான்!" என்றான்.

"அன்பரே! நாவிதர்களுக்குப் புத்தி கிடையாது! அதனால் அவன் சொல்வதைக் கேட்காதீர்கள். அரசாட்சி போர், இடமாற்றம், பாதுகாப்பு, நட்பு பூணுதல், நயவஞ்சகம் புரிதல் என்பன போன்ற பல வகையான துன்பங்களைக் கொடுக்கும்!" என்று அவன் மனைவி பதிலுரைத்தாள்.

"ஆம்! நீ சொல்வது சரிதான்! அரசாட்சி என்றாலே பல பிரச்சினைகள்தான். அப்படியானால் நான் என்ன கேட்க வேண்டும் என்பதைச் சொல்!" என்று மந்தாரகன் மீண்டும் தன் மனைவியிடம் கேட்டான்.

"உங்கள் இரண்டு கைகளினால் நீங்கள் தினமும் ஒரு துணியை நெய்து விற்று, அதில் வரும் வருமானத்தை வைத்து இப்போது நாம் நமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்கிறோம். அதனால் நீங்கள் அந்தத் தேவதையிடம் உங்களுக்கு மேலும் ஒரு தலையும் இரண்டு கைகளும் வேண்டும் என்று கேளுங்கள். அவற்றின் மூலம் நீங்கள் முன்புறம் ஒரு துணியையும் பின்புறம் ஒரு துணியையும் நெய்ய முடியும். தினமும் இரண்டு துணிகளை நெய்தால், ஒன்றை விற்று நமது தேவைகளைத் தீர்த்துக் கொள்ளலாம். மற்றொன்றை விற்று தான தர்மங்கள் செய்து, அதில் கிடைக்கும் புண்ணியத்தால் சொர்க்கத் திற்குச் செல்லலாம்!" என்று அவன் மனைவி கூறினாள்.

"ஆகா! என்ன அருமையான யோசனை சொன்னாய். என் அன்பு மனைவியே! இப்போதே நான் காட்டுக்குப் போய் அந்தத் தேவதையிடம் எனக்குக் கூடுதலாக ஒரு தலையும் இரண்டு கைகளையும் கேட்கிறேன்!" என்று மகிழ்ச்சியுடன் கூறினான் மந்தாரகன்.

பிறகு அவன் நேராகக் காட்டுக்குச் சென்று அந்தத் தேவதையைக் கண்டு "எனக்குக் கூடுதலாக ஒரு தலையையும் இரண்டு கைகளையும் நீ வரமாகக் கொடுத்தால் நான் இந்த மரத்தை வெட்டாமல் விட்டுவிடுகிறேன்!" என்று சொன்னான். மந்தாரகன் கேட்ட மறுவிநாடியே அவனுக்கு அந்த வரம் அருளப் பட்டது.

மந்தாரகன் தன் வீட்டுக்கு மகிழ்ச்சியுடன் திரும்பினான். ஆனால் அவனை வழியில் சந்தித்த மனிதர்கள் அவனை இரண்டு தலைகளும் நான்கு கைகளும் உடைய அரக்கன் என்று எண்ணிவிட்டார் கள். அதனால் அவர்கள் அவனைக் கம்புகளாலும், கற்களாலும் அடித்துக் கொன்றுவிட்டார்கள்.

அதனால்தான் நல்ல அறிவுரையைக் கேட்காத வனோ அல்லது பொது அறிவு இல்லாதவனோ துன்பம் எய்துகிறான்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **16.03.2005.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 587**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 585

**பரிசுக்குரியவர்:**
**ஆர். நேசமலர், டொட்லன் டிவிசன், சார்ணியா குரூப், கந்தேகேதர.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| பி. ஜனார்த்தனன், காலிங்க மாவத்தை, பொல்ஹென்கொட, கொழும்பு - 05. | ஆன். லக்ஷா, தரம் 6, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம். |
| ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. | கா. நவீன், பாலர் பாடசாலை, மத்துகம. |
| மு.இ.பா. சுக்றா, புஸ்றா மன்ஸால் பாடசாலை வீதி, ஆரையம்பதி, மட்டக்களப்பு. | த. விதூஷன், 59, கோணேசபுரம், உவர்மலை, திருகோணமலை. |
| எம்.ஐ. முஹமட் அஸ்லம், 116, ஓடாவியார் வீதி, ஏறாவூர் -2C | ஜெ. திவ்யா, புதிய தெரு, உப்புக் குளம், மன்னார். |
| யோகராசா சிவாஜினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. | மு. வக்ஷணா, ஆசிரியர் கலாசாலை அருகாமை, கோண்டாவில் இருபாலை வீதி, கோப்பாய். |

# ஆத்திசூடி

## மண் பறித்து உண்ணேல்

நீ பிறருடைய நிலத்தை வஞ்சகமாக அபகரித்து அந்த நிலத்தில் இருந்து வரும் வருவாயில் நீ வாழாதே.

-ஔவையார்

*நிரஞ்சலா, கண்டி.*

# தவளை



கல்விக் கூடம் சென் றிடுவோம்!
கலைகள் யாவும் கற் றிடுவோம்!
பல்வித் தைகளும் பயின்றிடவே
படிப்புத் தானே 'முதல்' ஆகும்.

கல்லா தவரை மரம் என்றும்
கண்கள் இரண்டும் புண் என்றும்
ஔவை வள்ளுவர் சொன் னதுமேன்
எண்ணிப் பார்க்க வேண் டாமோ?


கல்லும் ஒருநாள் தேய்ந் திடலாம்
கடலும் வற்றிப் போய் விடலாம்
'கல்வி' என்றும் மறைவ தில்லை
கற்றவர்க் கென்றும் குறையு மில்லை

கல்வி ஒன்றே மனி தருக்கு
கடவுள் தந்த பெருஞ் செல்வம்
சொல்லிச் சென்றார் பெரி யவர்கள்
சும்மா அவர்கள் சொல்ல வில்லை

சின்னப் பிள்ளையர் நாமெல் லாம்
கண்ணைப் போன்றே கல்வி தனை
எண்ணிப் படித்து உயர்ந் திடுவோம்!
உத்தம வழியில் வாழ்ந் திடுவோம்.

# அதிசய உலகம்

## சுதந்திரமான நித்திரை



எதிரிகள் இல்லையென்றால் ஏன் கவலைப்பட வேண்டும்! கவலை இல்லாத மனிதன் இல்லை. ஆனால் எதற்குமே கவலைப்படாத மிருகம்தான் காட்டுராஜா. அதற்கு எதிரிகளும் இல்லை; கவலைப்படத் தேவையுமில்லை. விரும்பியபோது உணவுக்கு வேட்டை. மற்ற நேரங்களில் 'ஹாயாக' ஓய்வு. குகையில் பிறந்தாலும் இப்படிப் பிறக்க வேண்டும் - சிங்கத்தைப் போல. ஆண்சிங்கம் ஒன்று நாளொன்றுக்கு 12 மணி நேரம் நித்திரை செய்கிறதாம். பகல் பொழுதில் குறட்டை, இரவு நேரத்தில் வேட்டை போலும்.

# உங்கள் பொது அறிவு எப்படி?

## தேசிய தினங்கள்

| | |
|---|---|
| 1. சீனா | ஒக்ரோபர் 01 |
| 2. பின்லாந்து | டிசம்பர் 06 |
| 3. சோவியத் ரஷ்யா | நவம்பர் 07 |
| 4. அமெரிக்கா | ஜூலை 07 |
| 5. சுவிற்ஸர்லாந்து | ஆகஸ்ட் 04 |
| 6. போலந்து | ஜூலை 22 |
| 7. இத்தாலி | ஜூன் 02 |
| 8. ஜப்பான் | ஏப்ரல் 29 |
| 9. பிரித்தானியா | ஜூன் மாதம் இரண்டாம் வாரம். |
| 10. இலங்கை | பெப்ரவரி 04 |


# தகவல் பெட்டி

## இறுதி அஞ்சலி




இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்னர் ஈராக்கில் விபத்துக்குள்ளான 'சீ ஸ்டேலியன்' ரக ஹெலிகொப்டரில் பயணம் செய்துகொண்டிருந்தபோது உயிரிழந்த 31 அமெரிக்கப் படையினருக்காக ஏனைய படையினர் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்திய விதமே இது.

## வாக்காளப் பெருமக்கள்



தாய்லாந்து மக்களின் வாழ்வில் யானைக்கு முக்கிய பங்கு உண்டு. அண்மையில் அந்நாட்டில் நடைபெற்ற தேர்தலில், வாக்காளர்களை வாக்களிக்கத் தூண்டும் விதமாக யானைகளைக் கொண்டு வாக்களிப்பது போல் விளம்பரப்படுத்தி, வாக்காளர்களை வாக்குச் சாவடிகளுக்கு இழுக்கும் முயற்சி ஒன்று பாங்கொக்கில் நடைபெற்றது.

## ஏமாந்த குருவி



ஸ்பெயினில் அதி சக்தி வாய்ந்த மின்சாரத் தூண்களில் குருவிகள் கூடு கட்டுவதால் குருவிகளுக்கு மாத்திரமின்றி அந்நாட்டு மின்சார சபையினருக்கும் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்று முன்வைத்த மாற்று யோசனையின்படி ஒவ்வொரு மின் கம்பத்தின் பக்கத்திலும் குருவிகள் கூடு கட்டத் தூண்டும் போலி மின் கம்பங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட போலி மின்கம்பம் ஒன்றில் கூடுகட்டி வாழும் குருவியாரே இவர்.

அண்மையில் ஏற்பட்ட பருவ கால வேறுபாடு காரணமாக உலகின் பல பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. அந்த வகையில் கடும் பனிப் பொழிவினால் எமது அண்டை நாடான இந்தியாவில் காஷ்மீர் மாநிலம் பெரிதும் பாதிப்படைந்தது அனைவருக்கும் தெரிந்ததே! ஆயினும் இந்த பனிப் பொழிவு தற்போது ஓய்ந்தாலும் பனிப் பொழிவினால் மூடப்பட்ட சாலைகளில் போக்குவரத்து சாலைகளில் இன்னும் போக்குவரத்து சீராகவில்லை என்பதற்கு இது ஒரு சிறந்த சான்றாகும். இது காஷ்மீரின் குவாசிகன்ட் கிராமத்தின் சாலை ஆகும்.

அமெரிக்காவின் நியூஜேர்ஸி மேட்டர் போரோ விமான நிலையத்தில் ஓடு பாதையில் இழுத்து வரப்பட்ட விமானமொன்று மேலெழுந்து பறக்க முடியாமல் ஓடு பாதையின் இறுதியில் அமைந்துள்ள பாதையில் இழுபட்டுச் சென்று களஞ்சியசாலை ஒன்றில் மோதி இருப்பதையே படத்தில் காண்கிறீர்கள். அதிர்ஷ்டவசமாக இவ்விபத்தில் ஒரு உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை. ஆனால் 20 பேருக்குக் காயமேற்பட்டுள்ளது.

## பாதை மாறிய பயணம்





குருதேவா
ஜெய்ஆகாஷ் - பிரணதி





நடிகை கோபிகா தமிழ், மலையாளம், தெலுங்கு என இருக்கிற மொழிகளில் எல்லாம் பிஸி. அதிலும் மலையாளத்தில் இவர் நடித்த 'வேஷம்' சமீபத்தில் ஹிட். அந்தச் சந்தோசத்தில் இன்னும் ஒரு சுற்றுப் பெருத்திருந்தார். அழகு கூடிப் போய் இருந்தது. 'கனாக் கண்டேன்' படப்பிடிப்பில் அவரைப் பார்த்துவிட்டு இந்தக் கேள்வியைக் கேட்டோம் :

"உங்கள் தங்கை உங்களுக்குப் போட்டியாக நடிக்க வருகிறாராமே?"

"எல்லோரும் அப்படித்தான் சொல்கிறார்கள். அவளைத் தேடி நிறைய வாய்ப்புக்கள் வந்தது உண்மை. அவள் என்னிடம் நடிக்க ஆசைப்படுவதாகச் சொல்லவில்லை. வெறும் வெட்கம் மட்டும்தான் பட்டாள்" என்றார் கோபிகா.

வெட்கப்பட்டால் ஒருவேளை வில்லங்கமாக இருந்திடப்போகிறது. போட்டியாக வந்துவிடப் போகிறார்.

"துக்ளக்" பத்திரிகையில் சத்யா எழுதி வரும் அரசியல் ஆக்ஷன் + நையாண்டி தொடர் 'பதவி படுத்தும் பாடு. சமீபத்தில் முடிந்திருக்கும் இந்தத் தொடரையே அதே தலைப்பில் சத்யா திரைக்கதை, வசனம் எழுத ஜி.எம். மூவீஸ் என்ற பட நிறுவனத்தைத் தொடங்கி முழுப் படத்தையும் ஒரே கட்டமாகத் தயாரித்து வருகிறார் ஜி.மூர்த்தி.

வழக்கமாக ஆக்ஷன் கதையைக் காதலோடு கலந்து கொடுப்பார்கள் இப் படத்தில் ஆக்ஷன் கதையை நகைச்சுவையோடு படம் முடியும் வரை இடைவெளியின்றி சிரிக்கும் விதமாகப் படத்தை இயக்கி வருகிறார் ராமலிங்கம்.சி.

இப் படத்தில் மலையப்பன் என்ற வீரம் மிகுந்த கதாபாத்திரத்தில் ரஞ்சித் நடித்து வருகிறார். அவருக்கு இந்தப் படம் ஒரு திருப்புமுனையாக அமைய உள்ளது.

'கிரிவலம்', 'வீரண்ணா' படத்தில் நடித்து வரும் அனாமிகா, இப் படத்தில் பொன்னி என்ற கதாபாத்திரமாகவே வாழ்ந்திருக்கிறார்.

டைரக்டர் எல்லாம் நடிகராகிக்கொண்டிருக்க நடிகர் டைரக்டராகிக்கொண்டிருக்கிறார். நடிகர் சாய் குமார் தெலுங்கு தயாரிப்பாளர் ஒருவரைப் பிடித்து படம் பண்ண ஓ.கே. வாங்கிவிட்டார் ஹீரோ யார் தெரியுமா? விக்ரம்.

'அந்நியனு'க்குப் பிறகு கலைப்புலி தாணு படம், இந்தப் படம் ஆல்ரெடி விக்ரம் கால்ஷீட் ஃபுல்.

# சந்தியா ராகம்!

"ஃபோர் த பீப் புள்" கேரளாவில் செம ஜோடி கோபிகா. 'காதல்' படத்தில் இது தமிழ்நாட்டில் ஹிட். அதில் பரத்துக்கு பரத் ஜோடி சந்தியா. இப்போது 'பெப்ரவரி 14' படத்தில் ரேணுகா மேனனுடன் டூயட் பாடுகிறார் பரத். இருப்பினும் கோபிகா - சந்தியா இருவரையும் முடிந்தால் தனக்கு ஜோடியாகப் போடச் சொல்கிறாராம் பரத்.



சிந்து தொலானி - நம்ரதா தொலானி

# கோபிகா கோபம்!

'ஆட்டோகிராஃப்' கோபிகா ஆத்திரமான ஆத்திரத்தில் இருக்கிறார். கோபிகாவின் அனுமதி இல்லாமலேயே அவரின் மனேஜர் பல படங்களுக்கு அட்வான்ஸை வாங்கிக்கொண்டு தான் கட்டிவரும் புது வீட்டில் போட்டுவிட்டாராம்.

இதனால் ஏகப்பட்ட கால்ஷீட் குளறுபடியில் சிக்கித் தவிக்கிறார் கோபிகா. அதோடு தன் மனேஜர் லொள்ளுக்கு என்னைப் பழிவாங்கிவிடாதீர்கள் எனத் தயாரிப்பாளர்களிடமும் முறையிட்டிருக்கிறார் கோபிகா.

# போலிச் சாமி!

'அமிர்தம்' கதை முழுக்க முழுக்க ஒரு கோவிலிலும் அதைச் சார்ந்த பகுதிகளிலும் நடக்கிறது.

இதற்காக மைசூர் மேலக்கோட்டை நரசிம்மர் கோவிலின் மண்டபத்தில் ஒரு பகுதியில் பெருமாள் கோவிலை மிக தத்ரூபமாக செட் போட்டிருக்கிறார் ஆர்ட் டைரக்டர் ஜி.கே.

சுற்றுலா வருகிறவர்கள் இதை ஒரிஜினல் கோயில் என நினைத்துக் கொண்டு அங்கே இருக்கிற உண்டியல்களில் காசைப் போட்டுச் செல்கின்றனர். இந்த உண்டியல் காசை தினந்தோறும் எடுத்துக் கொண்டுபோய் ஒரிஜினல் கோயிலில் போடுவது அசிஸ்டெண்ட் டைரக்டரின் வேலையாக இருக் கிறது.



மீரா ஜஸ்மின்

# கஜினி போராட்டம்!

அஜித் - டைரக்டர் ஏ.ஆர்.முருகதாஸ் இருவரும் இணைந்து தொடங்கப்பட்ட படம் 'மிரட்டல்'. கதைப்படி மொட்டையடிக்க வேண்டியிருந்ததால் அஜித் நடிக்கவில்லை. மாதவனிடம் போனார் முருகதாஸ். அதுவும் செட்டாகவில்லை. அப்புறம் விக்ரம் - முருகதாஸ் இணைவதாக இருந்தது. பிறகு ஸ்ரீகாந்த் பண்ணுவதாக இருந்து இப்போது 'கஜினி' என்ற பெயரில் மிரட்டல் கதை சூர்யா-முருகதாஸ் கூட்டணியில் தொடங்கியிருக்கிறது.

சூர்யாவுக்கு ஜோடி அஸின். 'சென்னையில் ஒரு மழைக்காலம்' படத்திற்கு அஸின் வேண்டாம் என்று சூர்யா சொன்னது குறிப்பிடத் தக்கது. பல தடைகளைக் கடந்து கஜினி முகமது போல் தாண்டி ஜெயித்திருக்கிறது 'கஜினி' படம்.

நாட்டுப் பற்றுள்ள ஒரு இளைஞன, சமூக விரோதிகளைக் களையெடுக்கும் கதையை புத்திசாலித் தனமான காட்சிகளால் சொல்லிருக்கிறாங்கள் என்பது ஹைலைட்.

# கிழிந்த உதடு!

'அமிர்தம்' படப்பிடிப்பில் கலந்துகொள்ள வந்திருந்த நவ்யா நாயருக்கு, திடீரென்று உதட்டில் பயங்கர வலி.

உனே படப்பிடிப்பை கேன்சல் செய்துவிட்டு, அப்பல்லோ ஆஸ்பத்திரிக்குப் போனார்கள். ஏற்கெனவே ஒரு விபத்தில் நவ்யாவின் அழகான உதடு, கிழிந்துவிட...அதற்காகத் தையல் போட்டிருக்கின்றனர். தையலுக்குப் போட்ட தையல், கிழிந்துவிட்டது.

அதனால்தான் ஆஸ்பத்திரிக்குப் போனார்கள். நவ்யாவின் உதட்டுக்கு சிகிச்சையளித்தவர், ரஜினியின் உதட்டை சீர்படுத்திய டாக்டர் முருகேசன்தான்!

நவ்யாவின் உதட்டுக்கு ரொம்பவே அக்கறையெடுத்து டாக்டர் முருகேசன் சிகிச்சையளிக்கக் காரணம், நவ்யாவின் உதடுகளால் முத்தம் பெறப் போகிறவர் டாக்டரின் மகனாச்சே!

ஆமாம்! படத்தின் ஹீரோ கணேஷ்...டாக்டர் முருகேசனின் மகன்தான்!


# 'வேதம் புதிது' கண்ணனின் சர்ச்சைக்குரிய 'அமிர்தம்'

'வேதம் புதிது' படம் மூலம் பரபரப்பை உண்டாக்கிய கதாசிரியர் கண்ணன், இப்போது 'அமிர்தம்' என்கிற படத்தை கதையெழுதி இயக்கித் தயாரித்தும் வருகிறார். புதுமுகம் கணேஷ், நவ்யா நாயர், கிரீஷ் கர்னார்டு, அனுராதா கிருஷ்ணமூர்த்தி, ராஜீவ், ரேகா, யுகேந்திரன், மதுரா எனப் பலரும் நடித்திருக்கிறார்கள்.

எழுத்துப் பட்டறை நிறுவனம் சார்பில் தயாராகும இந்தப் படத்தின் பூஜையன்றே தமிழ் வேத மந்திரங்கள் ஓதி, படதைத் தொடங்கினார் கண்ணன்.

முற்போக்குச் சிந்தனை கொண்ட பிராமணக் குடும்பங்களுக்கிடையேயான கதை இது! ஆத்திகத்துக்கும் நாத்திகத்துக்குமான உரசல்கள் இதில் உண்டு!

அந்நியன்
விக்ரம்



# சினி விசிட்



## காதல் படுத்தும் பாடு!

மலையாளத்தில் 56 படங்களுக்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதியிருக்கிறார் இயக்குநர் லோகித்தாஸ்.

ஆறேழு படங்களை இயக்கியிருக்கிறார். மீரா ஜாஸ்மின் தேசிய விருது பெறக் காரணமான 'கஸ்தூரிமான்' படமும் இவரின் கைவண்ணம்தான்! அதோடு மீரா ஜாஸ்மினையும் தனது கஸ்டடியிலேயே வைத்திருக்கிறார்.

சமீபத்தில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மீராவின் சகோதரர்கள் பொலிஸ் வரை போக...காதலருக்கு ஆதரவாக குடும்பத்திற்கெதிராக மீரா, முதலமைச்சர் வரை போனார். இந்தப் பரபரப்பு ஓயும் முன் ஜெயராம் நடிக்க, சத்யன் அந்திக்காடு இயக்கவிருந்த ஒரு படத்திற்குக் கதை எழுதித் தர, காசு வாங்கிக்கொண்டு தராமல் இழுத்தடித்தாராம் லோகித்தாஸ். இதனால் விவகாரமாகி லோகித்தாஸுக்கு மலையாளத் திரைப்பட சம்மேளனம் தடை போட்டுவிட்டது.

இப்படிப் பெரிய சிக்கல் வந்ததால் தனது காதலரைக் கோடம்பாக்கத்திற்குத் தள்ளிக்கொண்டு வந்திருக்கிறார் மீரா! இளையராஜா இசையில் அழகிய தீயே பிரசன்னா, மீரா நடிக்க 'கஸ்தூரி மான்' படத்தைத் தமிழில் இயக்குகிறார் லோகித்தாஸ்!

தயாரிப்பது யார்?

காதலருக்காக இதைக் கூட செய்யமாட்டாரா மீரா ஜாஸ்மின்!



காட் பாதர்
அஜித் - அஸின்


## முத்த 'மழை'!

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் தயாரிக்கும் 'மழை' படம், தெலுங்கில் வந்து சூப்பர் ஹிட்டான 'வர்ஷம் படத்தின் ரீமேக்.

'வர்ஷம்' படத்தில் கவர்ச்சிக் காட்சிகளில் வஞ்சனை வைக்காமல் அள்ளி வழங்கியிருந்தார் த்ரிஷா! அதே கதையில் இங்கே நடிக்கச் சொன்னபோது சொந்த மண்ணில் இவ்வளவு கவர்ச்சியாக நடிக்க முடியாது என மறுத்துவிட்டார். இப்போது 'எனக்கு 20 உனக்கு 18' ஷ்ரேயா நடித்து வருகிறார். ஹீரோ ஜெயம் ரவி.

படத்தின் முக்கால்வாசிக் காட்சிகளும் மழையிலேதான் வருகிறது. சமீபத்தில் பிரசாந்த் ஸ்ரூடியோவில் ஜெயம் ரவி - ஷ்ரேயா சம்பந்தப்பட்ட முத்தக் காட்சிகளை எடுத்தார்கள்.

மூன்று நான்கு முறை டேக் போயிருக்கிறது. அஞ்சாவது முறைதான் ஓ.கே.யானதாம். ஷ்ரேயாவின் ஆரஞ்சு உதடுகளை இப்படி அஞ்சாறு டேக்கில் கவ்வுற பாக்கியம் ஜெயம் ரவிக்குக் கிடைத்ததை ஒளிந்து நின்று பார்த்த நமக்குப் பெருமூச்சு வந்தது.



மழை
ஜெயம் ரவி - ஷ்ரேயா

## பெயர் மாறிய சுவீட்டி!

'சுக்ரன்' படத்தில் நடித்துவரும் நதீஷா, ஏற்கெனவே 'சாமுராய்' படத்தில் அனிதா என்ற பெயரில் நடித்தவர். அதே போல் 'லவ்ஸ்' படத்தில் குலை நடுங்குகிற அளவுக்குக் கவர்ச்சி காட்டிய பெங்களூர் பெண் சுவீட்டி, 'அமிர்தம்' படத்தில் மதுரா எனப் பெயர் மாற்றிக்கொண்டு குடும்பப் பெண்ணாகத் தரிசனம் தருகிறார்.

## பாலு மகேந்திராவின் - சிற்பம்

தனுஷ் - ப்ரியாமணியை வைத்து 'அது ஒரு கனாக் காலம்' படத்தை எடுத்துவரும் பாலு மகேந்திரா, அதை ஒரு சிற்பம் மாதிரி அழகாகச் செதுக்கிக் கொண்டிருக்கிறாராம்.

இதுவரை 35 எம்.எம்.மில் மட்டுமே படம் பிடித்து வந்த இந்தக் கேமரா கவிஞர் முதல் முறையாக சினிமாஸ்கோப்பில் எடுத்துக்கொண்டிருக்கிறார்.

16 முதல் 21 வயது வரையிலான கவலையில்லாத இரு உள்ளங்களின் காதலைத்தான் பாலு 'அது ஒரு கனாக் கால'மாக்கிக்கொண்டிருக்கிறார்.

படத்தில் ப்ரியாமணியை நாட்டுக் கோழி லெவலுக்கு உரித்து எடுத்துவிட்டாராம். தமிழில் எப்படியாவது காலூன்ற வேண்டும் என்ற வெறியில் இருக்கும் ப்ரியாவும் சொன்னதைக் கேட்டுக்கொண்டது மட்டுமின்றி தானாகவே முன்வந்தும் ஏக தாராளம் காட்டிக்கொண்டிருக்கிறார்.

தனுஷைத்தான் சொல்லவே வேண்டாமே. வேலைக்காக ஏங்கும் இளைஞனாக நடிக்கும் அவர், பிளஸ் ரூ மாணவியின் காதலில் சிக்கிக்கொள்வதாய் கதை. உள்ளோட்டமாய் காமம் இழையோடும் இந்த ரோலை தனுஷ் எப்படிச் செய்வார் என்று உங்களுக்குத்தான் நல்லாத் தெரியுமே.

## சூர்யாவை எரிச்சலாக்கும் நிலா!

எஸ்.ஜே.சூர்யாவின் புதிய நாயகி பி.எப். நிலாவுக்கு தமிழ் வசனங்களைப் புரிய வைப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிடுகிறதாம். ஒவ்வொரு வார்த்தையையும் தனித்தனியாகப் பேசவைத்து கட் பண்ணிக் கட் பண்ணிக் காட்சிகளை எடுத்துவருகிறார்.

மும்பைப் பெண்கள்தான் வேணும் என அடம் பண்ணிக் கூட்டிவந்திட்டு இப்போது அங்கே குத்துது, இங்கே குடையுதுன்னா நாமென்ன பண்ண முடியும்?

## பிஸியாத்தான் இருக்கார் மல்லிகா!

'ஆட்டோகிரா'பில் அறிமுகமாகி 'திருப்பாச்சி' மூலம் பிரபலமடைந்துள்ள கேரளத்துக் கப்பைக்கிழங்கு மல்லிகாவும் பிஸியாகத்தான் இருக்கிறார்.

'திருப்பாச்சி'யில் ஹீரோயினாக வந்து போன த்ரிஷாவை விட மல்லிகாவின் ரோல்தான் மிகவும் பேசப்படுகிறது. இந்தப் படத்தில் சிறப்பாக நடித்ததன் விளைவாக இப்போது கை நிறையப் படங்களுடனும், வாய் நிறையப் பல்லுடனும் காணப்படுகிறார் மல்லிகா. இப்போது அவரது கையில் 3 தமிழ்ப் படங்களும் ஒரு குறும்படமும் உள்ளதாம். 'ஒன்னும் ஒன்னும் நாலு', 'காதல் நகர்' ஆகிய படங்களிலும் இன்னொரு பெயரிடப்படாத படத்திலும் மல்லிகா நடித்துக்கொண்டிருக்கிறார்.

"கவர்ச்சி காட்டுவது எனக்கு அறவே பிடிக்காது, எவ்வளவு பணம் கொடுத்தாலும் அப்படிப்பட்ட ரோல்களில் நடிக்கவேமாட்டேன்" என்று ரொம்பவே வெட்கத்துடன் கூறும் மல்லிகா, நல்ல ரோல்களில் நடித்து இன்னொரு ஷோபா என்று பெயர் வாங்க வேண்டும் என்பதுதான் என் இலட்சியம்" என்கிறார்.



## அடுத்த விருதும் எனக்கே! எனக்கா?

### -விக்ரம் சொல்கிறார்!

12 வருடங்கள் நான் போராடியதற்குப் பலன் கிடைத்துவிட்டது. இதோ 'பிதாமகனு'க்காக சிறந்த நடிகருக்கான தேசிய விருதைப் பெற்றிருக்கிறேன். ரொம்பப் பெருமையாக இருக்கிறது.

இப்போது நான் பண்ணிவரும், 'அந்நியன்' படம் ஒரு பவர்புல் கேரக்டர். எல்லாவித குணாதிசயங்களையும் அந்தக் கேரக்டர் வெளிப்படுத்துவது போல் இருக்கிறது. யூனிட்டைச் சேர்ந்தவர்கள் இந்தப் படத்திற்கும் எனக்குத் தேசிய விருது கிடைக்கலாம் எனச் சொல்கிறார்கள்.

படம் வெளிவந்த பிறகு பார்க்கலாம்... அவர்களின் வாக்குப் பலிக்குமா என்று!

## பெயர் மாற்றும் வியாதி

நடிகைகளின் பெயர் மாற்றம் லிஸ்டில் லேட்டஸ்டாகச் சேர்ந்திருப்பவர் வினோதினி! வினோதினின்னாலே வினோதம்தான்!

அதையும் வேண்டாம்னுட்டு தனது பெயரை 'க்யாதி' என்று பெயர் மாற்றியிருக்கிறார்.

நேரில் பார்த்தபோது, "அதென்ன மேடம் வியாதி-ஸாரி க்யாதி" என்று கேட்டதற்கு, "எங்க வீட்டு ஜோசியரைத்தான் கேட்கணும். இது சினிமாவுக்காக மாற்றிக்கொண்ட பெயரல்ல. இந்தப் பெயர் மாற்றம் எனது வாழ்க்கைக்கு நல்லதுன்னு சொன்னார். அதனால்தான் இந்தப் பெயர்" என்று ஓரே போடாகப் போட்டார்.

இதேபோல் சின்னி ஜெயந்த்தும் தன்னுடைய பெயரை சின்னி ஜெயந்தர் என்று மாற்றிக்கொண்டிருக்கிறார்.


இதேபோல் 'துள்ளுவதோ இளமை' ஷெரினும் தனது பெயரை மாற்றியிருக்கிறார். தனைத் தேடி வந்த வாய்ப்புகளைக் கண்டுகொள்ளாமல், காதலைக் கண்டுகொண்டார். விளைவு... சினிமா கைவிட...சினிமா கைவிட்டதால் காதலனும் கம்பியை நீட்ட தற்போது கைவசமிருந்த 'காதல் திருடா' படத்தை முடித்துக் கொடுத்துவிட்டு மும்பைக்கு மூட்டை கட்டினார் ஷெரீன்.

மும்பை மேற்கு அந்தேரி பகுதியில் குடியேறிவிட்ட ஷெரீன், தனது பெயரையும் ஷாரா அலி என மாற்றிக்கொண்டு பாலிவுட்டில் வலை வீசி வருகிறார்.

## பொண்ணுக்கு ரொம்ப பெரிய மனசு!

'சுக்ரதிசை' படத்திற்காக சவீதா எம்.நாயக் என்கிற நடிகையைக் கூட்டி வந்திருக்கிறார்கள். ஒரு பாடல் காட்சியில் வெள்ளைச் சட்டையையும் கறுப்பு நிற உள்ளாடையையும் போட்டுவரச் சொன்னார்களாம். மழையில் நனைந்துவிட்டால் உள்ளே இருக்கும் கறுப்புக் கலர் எடுப்பாத் தெரியும் என்பதால் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள்.

சவீதாவும் வெள்ளைச் சட்டை போட்டுக்கொண்டு வந்து "நான் ரெடி நீங்க ரெடியா" எனக் கேட்க...."ரெடி ஆக்ஷன்.....ஸ்டார்ட்..கேமரா என குரல் கொடுத்ததும் செயற்கை மழை பொழியப் பொழிய அதில் சவீதா நனைய நனைய...வெள்ளைச் சட்டைக்குள்ளே கறுப்பு உள்ளாடை தெரியவில்லை. கேமரா வழியே பார்த்தால பயங்கர இன்ப அதிர்ச்சி. கவர்ச்சியை வாரி வழங்கும் திட்டத்துடன் உள்ளாடையே போடாமல் வந்தாராம் அம்மணி.



சுக்கிரதிசை
சவீதா நாயக்




## நினைவுகளில்.....

அர்த்தப்படாமலிருந்த - என்
அனுபவங்களை
அர்த்தப்பட வைத்த
அந்த நிமிடம் முதல்...

கண்களுக்குள் கத்திச் சண்டை
உனைக் காணா ஒவ்வொரு பொழுதும்.

இதயத்துள் இறங்கியது
ஈயக் குழம்பு
ஆறவைக்க - உன்
அரைப் பார்வை போதும்!

சிந்திக்கும் போதெல்லாம்
சிறைக் கம்பிகளுக்குள் - நான்
உன்னுடன்.

அநேக நாட்களில்
ஆயிரம் பட்டாம்பூச்சிகள்
பகல் நேரக் கனவுகளில்
பைத்தியக்காரனாக நான்.

கிள்ளிவிட்ட முகப்பரு
கிழிஞ்சலகளாய் - எனை
கிண்டலடிக்கின்றன.

விருப்பமில்லாமலே பல இரவுகள்
விக்கித்துப் போகும்
விரக்தியுடன் நான்
விடை தேடுகிறேன்.

கேள்விகளால் என்னுள்ளம்
கிறங்கும் - என் இதயம்
சிந்தும் இரத்தத்துள் ஒவ்வொன்றிலும்
சிரித்தபடி அவள்...!

-இராமன் ஏ.சதீஷ், மஸ்கெலியா.

## தெருவோரக் கவிதைகள்

தென்றலின் தாலாட்டில்
மெய்மறந்து கண்ணுறங்கும்
தெருவோரக் கவிதைகளே!
இருப்பிடங்கள் இல்லாது...
ஆகாயக் குடையின் கீழே,
நட்சத்திரங்கள் காவல் காக்க
நடைபாதை மாளிகையில்.....
தூர்வாடை மணல் விரிப்பில்
சுகமான தூக்கங்கள்!!


வெள்ளி நிலா பூத்தூவ...
விடியல் வரை குளிர் காற்றின்
இதமான கதகதப்பில்....
உடுத்தாடை அரைகுறையாய்
உரப்பைகள் கம்பளியாய்
ஒட்டிய உடலை, சுருட்டிக்கொண்டு
ஒதுங்கிக் கிடக்கும்
கிளிஞ்சல்கள்!!!

நிலாச் சோறுண்ட திருப்தியுடன்
நிம்மதியாய் கண்ணயரும்
எங்கள் தேசத்தின்
அருங்காட்சியகங்கள்...!!

மடியில் கனமும் இல்லை....!
பயமும் அதனாலில்லை!
தென்றலின் தாலாட்டில்
மெய்மறந்து கண்ணயரும்
தெருவோரக் கவிதைகள்!!

-யாழமீர் மர்சூன்,

## கனாக்கள்



சிறகடித்துப் பறக்கிறேன்
விண்ணில் - சில விண்மீன்கள்
பறிக்கிறேன் கையில்.....!

அமைதியைக் குலைக்கும்
பொழுதில் - காண்கிறேன்
நிலவை இருளில்....!


தொட நினைத்துச் சென்றேன்
அருகில் - நிலவும் ஓடி
மறைந்தது தொலைவில்.....!

வானமகள் பொழியும்
மழையில் - அமுதம் குடித்து
மகிழ்கிறேன் இதழில்....!

பூக்களைப் பெயர் சொல்லி
அழைத்தேன் அன்பில் - பூமாலையாய்
சூடியது என் தோளில்....!

சிப்பியை விட்டு எகிறியது
முத்தொன்று மண்ணில் - தேடி
வந்து சரணடைந்தது இப்போது என்
கையில்....!!!

-எம்.நதார், ஜின்னாநகர்.



## சுய நலம்

சந்திக்கடை பண்டங்கள்
மிகவும் அரும்பாகி
கை அழுகத் திட்டி
சிறு துரும்பும் வில்லாது
றாக்கை கலைத்து சரிசெய்து
வெறுப்பை வழமைபோல்
மனைவி மீது பிரயோகித்து
மனம் சலிப்புற்று



கடல் ஊரைச் சுருட்டி
பிணங்கள் சமைத்து
வாழ்தலையும் சிதிலங்களாக்கி
தப்பித்த உயிர்க்குஞ்சுகள்
படுவான்கரை கூடுகளில்
உயிரை அள்ளி தஞ்சமடைந்து

சந்திக்கடை வாசலில்
இருள் வடியும்வரை
தூசு கிளப்பி
அமளி துமளியோடு
நீண்ட வரிசை கிடந்து
தெருநாய் காகம் உட்பட



காகம் மிகவும் சீக்கிரப்பட்டு
குஞ்சுகள் ஒவ்வொன்றாய் கரைந்து
கூடுகள் வெட்டையாகி
சந்திக்கடை முன்புபோலாகி
றாக்கை கலைத்து தூசுதட்டி
மனம் சலிப்பாகி

சந்திக்கடை சொருகுபலகை கழற்றும்
ஒவ்வொரு காலையும்
கடல் மீளவும் எழுந்து
ஊரைச் சுருட்டி பிசைந்து
பிணங்கள் செய்யென வேண்டி
பேச.....ய்......

-றதுமான், ஏ.ஜமீல், மருதமுனை.

## குறைந்தபட்சக் கோரிக்கைகள்

வீரத் தமிழர்கள்!
என்றெல்லாம் எங்களைப்
போற்றச் சொல்லவில்லை.

குறைந்த பட்சம்....
எங்களையும் - முடிந்தவரை
மனிதர்கள்தான்
என்று சொல்ல
முயலுங்கள் என்கிறோம்.

அரசியலில்
முதற் குடிமகனாக
ஆள வேண்டும்
என்றெல்லாம்
கோரவில்லை.



குறைந்த பட்சம்....
முதலில் - நாங்கள்
அகதிகள் என்றல்லாமல்
வாழவிடுங்கள் என்கிறோம்.

புதிதாய்.....
வீட்டுக் கூரைகள்
கொடுத்து உதவுங்கள்
என்று எதுவும்
உங்களிடம் கேட்கவில்லை.

குறைந்த பட்சம்.....
எங்கள் அத்திவாரங்களைத்
தோண்டி எறிவதையே...
நிறுத்துங்கள் என்கிறோம்.

நீங்கள் மட்டும்
கட்சியும் ஆட்சியும்
மாறிக்கொண்டிருந்தால்
போதாது.

குறைந்த பட்சம்.....
எங்கள் தேவைகளையும்
அடையாளம் கண்டு....
தீருங்கள் என்கிறோம்.

-சம்பூர் எம்.வதனரூபன்.

## வரவேற்கின்றோம் உன்னை!

வருக....
வருக....!
இரண்டாயிரத்து
ஐந்தே
இன்பமுடன் வருக.....
இனிதாய்
வரவேற்கின்றோம்
உன்னை!

கஷ்டங்கள் எதையும்
காட்டாய் என்று
கரத்தில்
அடித்துக் கூறிவிட்டு
வருக.....
கனிவோடு
வரவேற்கின்றோம்
உன்னை!

உயிர்கள் எதையும்
உருக்குலையச்
செய்யேன் என்று
உறுதி மொழி
கூறிவிட்டு வருக.....
உவகையுடன்
வரவேற்கின்றோம்
உன்னை!

சந்தோசங்கள்
மட்டுமே
தந்திடுவேன் என்று
சத்தியம் செய்துவிட்டு
வருக....
சங்கடமின்றி
வரவேற்கின்றோம்
உன்னை!

போர் என்ற
சொல்லுக்கே
எதிராகப்
போர்க் கொடி
எடுத்திடுவேன் என்று
பொல்லாதவர்களிடம்
கூறிவிட்டு வருக.....
பொய்யின்றி
வரவேற்கின்றோம்
உன்னை!

மொத்தத்தில்....
மனிதர்களை
மனிதர்களாகவே -
வாழச்
செய்வேன் என்று
மனதில் உறுதி
கொண்டு வருக....
மகிழ்வோடு
வரவேற்கின்றோம்
உன்னை!

-எஸ்.வினோ,
மாத்தளை.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்


[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

"சமூகப் பிரச்சினைகளைப் பற்றிய ஆர்வமும் அக்கறையும் உள்ள பலர் ஆதங்கத்தோடும் தார்மீகக் கோபத்தோடும் சமூகச் சீரழிவுகளைப் பற்றிப் பேசுவார்கள். ஆனால் அவர்களே பெண் விடுதலை, பெண்கள் முன்னேற்றம் என்பது பற்றிப் பேசும்போது சுய தணிக்கை ஒன்றை உருவாக்கிக் கட்டுப்பாடு, எல்லைகள் என்பவற்றிற்கு முன்னுரிமை தரத் தொடங்கிவிடுவார்கள்.

பெண்களுக்கு இடத்தைக் கொடுத்தால் அவர்கள் மடத்தைப் பிடித்துவிடுவார்கள் என்ற பயம் இவர்களை அரித்துக்கொண்டே இருக்கிறது. பெண்கள் முன்னேற்றம் பற்றிப் பேசிய சீர்திருத்தவாதிகள்கூட பெண்களின் விடுதலை என்பதும் அவர்களின் உரிமைகள் என்பதும் சில வரையறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்கிறார்கள். மனித உரிமை என்பது சில வரையறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றி இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால், மனித உரிமையில் ஆணின் உரிமை வேறு; அதன் சதவீதம் வேறு. பெண் சற்றுக் குறைந்த சதவீதத்திற்கே பாத்தியதை உள்ளவள் எனும்போதுதான் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

இது கவிஞர் கனிமொழியின் கருத்து. மகளிர் தினமான மார்ச் 8ஐ முன்னிட்டு பிரபல பெண்ணியவாதியும் கவிஞருமான தஸ்லீமா நஸ்ரீன் அவர்களின் இரு கவிதைகள்.



## எல்லைக்கோடு

எந்தன் பயணம் முன்னோக்கித்தான்
நான் முன்னோக்கிப் போகத்தான்
செய்வேன்.
வாசலில் என்னைத் தடுக்கின்ற
கணவன்
முந்தானை பிடித்திழுக்கும்
குழந்தைகள்
உறவினர்களின் பின்னுக் கிழுக்கும்
அழைப்புவேறு
என்றாலும் என் தப்படிகள்
முன்னோக்கித்தான்
முன்னில் ஒரு நதி மட்டும்
எனக்கு நீந்தத் தெரியும்
என்றாலும் இவர்கள் குறுக்கே
நிற்கிறார்கள்.
நீந்தவோ அக்கரை அடையவோ
எனக்கு அனுமதியில்லை.
நிஜத்தில் நதியின் அக்கரையில்
இருப்பதென்னவோ
வறட்சியில் மூழ்கிப்போன ஒரு
மைதானம் மட்டுமே.
ஒருமுறை அந்த நிசப்த வெளியை
நான் அணைத்துக் கொள்வேன்.
காற்றின் ஓங்காரத்துக்கு எதிராக
என் கால்கள் அதிவேகமாய்
முன்னோக்கிச் செல்லும்.
எனக்கு மனம்விட்டு நாட்டியமாட
ஆசை.
சின்னஞ் சிறுமியாய்
மனந்திறந்து கபடியாடி
எத்தனை நாளாயிற்று தெரியுமா?
நிசப்தத்தின் மடியில் முகம் புதைத்து
அழுதும் கூட
வெகு வருஷங்களாயிற்று.
நான் ஒருமுறை
எனை மறந்து நடனமாடி
வெறி தீரும்வரை இரைச்சலிட்டு
கபடி விளையாடி
முடிவில் அந்த ஆசைகளையெல்லாம்
கைவிட்டு
வாய் விட்டு அழுது தீர்த்து
நிச்சயமாய்த் திரும்பி வருவேன்.
என் முன்னில் வெறும் ஒரு நதி
மட்டும்.
எனக்கு நீந்தத் தெரியும்
நான் ஏன் போக் கூடாது?
நான் முன்னோக்கிப் போகத்தான்
செய்வேன்.
எந்தன் பயணம் முன்னோக்கித்தான்.

-தஸ்லீமா நஸ்ரீன்
தமிழில் : எம்.எஸ்.

## நெருப்பு

அவன் என் கணவன்
அகராதி கூறுகிறது அவன் என்னுடைய
தலைவன், பிரபு, குரு, இத்யாதி இத்யாதி
அவன் என்னுடைய கடவுள் என்பதை
சமுதாயம் ஒப்புக்கொண்டது.

என்னுடைய நடுங்குகிற கிழக் கணவன்
நன்றாகக் கற்றுக்கொண்டான்
மேலாதிக்கத்துடன் நடத்தை விதிமுறைகளை
செயல்படுத்தும் அதிகாரம் குறித்து.

ஒளிவீசுகிற சொர்க்கத்தின் எல்லையில்
இறவாத தன்மையுடைய பாலத்தின் மீது
உலா போவதில் தணியாத ஆசையுடையவன் அவன்.

அவன் எல்லாப் பழவகைகளையும்
பளிச்சென்று கிளர்ச்சியூட்டும் வண்ணங்களையும்
சுவையான உணவுகளையும் விரும்பினான்.
அவனின் அடங்கா காமத்திற்குப் பின்
அழகு தேவதையின் உடலை
மென்று சுவைத்து, சப்பி, உறிஞ்சி நக்குகிறான்.

இவையொன்றும் என் தலையில்
எழுதி வைத்திருக்கவில்லை. ஆனால் விதி,
இந்த மண்ணில் வாழும் நாட்கள்
முழுவதும் எரியும் சூட்டடுப்பில் தள்ளப்பட்ட
விறகு போலாக்குகிறது இச் சமூகம்.


இந்த வாழ்விற்குப் பின், நான் பார்க்கிறேன்
நடுங்குகிற கிழக் கணவன்
எழுபத்து ஏழு வயதிற்குப் பின்னும்
காமத்தில் திளைப்பதை.

நான் மட்டும் தனியாக இருக்கிறேன்
இன்பமான சொர்க்கத்தின் தோட்டத்தில்
நான் மட்டுமே தனிமையில்
மனிதனின் நாற்றம் வீசும்
குருட்டு ஆபாசத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.


நான் உள்ளுக்குள் காலங்காலமாக
தீரா நரகத்தில் எரிந்துகொண்டிருக்கிறேன்....
ஒரு கற்புள்ள
நற்குணமுள்ள பெண் என்பதால்.

-தஸ்லீமா நஸ்ரீன்
தமிழில் : சிபிச்செல்வன்

## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : ஏ.ஓ.எம். ஹம்தியாஸ்
வயது : 17
முகவரி : 144 A, மஸ்ஜித் வீதி, புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, உதைபந்தாட்டம்.



பெயர் : ஏ.எப். அஜ்மல்
வயது : 17
முகவரி : நுரைச்சோலை, புத்தளம்.
பொழுதுபோக்கு : பத்திரிகை, புத்தகம்.



பெயர் : ரி. நிமல்ராஜ்
வயது : 22
முகவரி : 17 A, முனை வீதி, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு : ரி.வி., வானொலி, பத்திரிகை.



பெயர் : P. Sadik.
வயது : 26
முகவரி : P. O. Box : 60100, Al khor, Doha - Qatar.
பொழுதுபோக்கு : ரி.வி.

# லேடிஸ் ஸ்பெஷல்


# இரட்டைப் பிறவிகளா?

இரட்டையர்களில் சிலர் ஒரே மாதிரியும் சிலர் வேறு வேறு மாதிரியும் இருப்பது ஏன்? ஒரே மாதிரி முகச் சாயலுடன் இருக்கிற இரட்டையர்களுக்கு 'ஐடேன்டிக்கல் ருவின்ஸ்' என்றும், வேறு மாதிரி இருப்பவர்களுக்கு '∴ப்ராட்டோர்னல் ருவின்ஸ்' என்றும் பெயர். இரட்டையர்கள் ஒரே மாதிரி இருக்கக் காரணம், அவர்களுக்கு ஒரே மாதிரியான டி.என்.ஏ. இருப்பதுதான். ஒரு உயிரணுவால் கருத்தரிக்கிற சினை முட்டை, பிறகு இரண்டு பாதியாகப் பிரிந்து இரண்டு உயிர்களாக வளர்வது இந்த ரகம். இந்த இரட்டையர்களின் கை ரேகை ஒரே மாதிரி இருந்தாலும், அவர்களது ஜீன்கள் வேறு வேறாகத்தான் இருக்கும். இவர்களில் ஒருவர் ஒல்லியாகவோ, குள்ளமாகவோ இருக்கலாம். கருவிலிருக்கும்போது இருவரில் ஒருவருக்குக் கிடைத்த குறைவான உணவு மற்றும் சத்துக்களின் காரணமாக இப்படி இருக்கலாம்.

'∴ப்ராட்டோர்னல் ருவின்ஸ்' எனப்படுகிற இரட்டையர்கள், இரண்டு வெவ்வேறு உயிரணுக்களால் கருத்தரிக்கப்பட்ட இரண்டு சினை முட்டைகளிலிருந்து ஒரே நேரத்தில் உருவாகிற உயிர்கள். இவர்கள் நிறம், உயரம், கண்களின் நிறம், முடியின் நிறம் என எல்லாமே வேறு வேறாக இருக்கும். இவர்களது டி.என்.ஏ. யும் வேறு வேறு.

ஒரே மாதிரியான இரட்டையர்களின் குணாதிசயங்களும் ஒரே மாதிரி இருக்குமா?

அது பெற்றோரின் வளர்ப்பைப் பொறுத்தது. பெற்றோர் இருவரையும் வேறு வேறு மாதிரி உடையணிய, வேறு வேறு பொழுதுபோக்குகளை வளர்த்துக்கொள்ள, தனித்தனி நண்பர் வட்டத்தை உருவாக்கிக்கொள்ள ஊக்கப்படுத்துகிற பட்சத்தில் அவர்கள் வேறு வேறு குணாதிசயங்களுடன்தான் வளர்வார்கள். இருப்பினும் சில அடிப்படைக் குணாதிசயங்கள் இருவருக்கும் பொதுவாகவே இருக்குமாம். அதிலும் ஒரே மாதிரியான இரட்டையர்கள் விஷயத்தில், இருவரில் ஒருவரைப் பிரித்து வேறு இடத்தில் வளர்த்தாலும் கூட இருவரின் விருப்பங்களும் சில விஷயங்களில் ஒன்று போல இருக்குமாம்.



உதாரணத்துக்கு வலது கையில் வாட்ச் கட்டுவது, ஹேர்ஸ்டைல், ரசனை மாதிரியான விஷயங்கள்.....

இரட்டையர்களில் ஒருவருக்கு வலித்தாலோ, உடல் நலம் பாதித்தாலோ இன்னொருவருக்கும் அப்படியே இருக்குமா?

இரட்டையர்களைப் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொண்டவர்கள் இதை உறுதி செய்யவில்லை. இருவருக்குமான பாசப் பிணைப்பும், ஜீன் ஒற்றுமைகளும் இதற்குக் காரணமாக இருக்கக் கூடும் என்கிறார்கள். ஆனாலும் இரட்டையர்களை நெருங்கிக் கவனிக்கிறபோது இந்தச் சந்தேகம் உண்மை என்றே தெரிகிறது. இருவரில் ஒருவர் எங்கோ தொலைவில் இருந்தபோதும், இன்னொருவர் உடலளவில் அனுபவிக்கிற வலி அல்லது வேதனையின் அறிகுறி, பல



மைல்களுக்கப்பால் உள்ள இன்னொருவருக்கும் இருப்பதாகவே தெரிகிறது.


பிரிவுத் துயரம் இவர்களைப் பாதிக்குமா?

இரட்டையர்கள் பெரும்பாலும் பள்ளி, கல்லூரி வரை ஒன்றாகவே படிக்கிறார்கள். அதன் பிறகான வாழ்க்கைப் பாதையில்தான் அவர்கள் பிரிய நேரிடுகிறது. அது அவர்களைப் பெரிதும் பாதிக்கிறது என்றே தெரிகிறது. தன் வாழ்க்கை பற்றிய முக்கிய முடிவுகளை எடுப்பதில் அவர்களுக்கு அதிக சிரமம் இருப்பதாகவே தெரிகிறது. தனது உடன்பிறப்பின் அபிப்பிராயமும் ஆலோசனையும் இல்லாமல் அவர்களால் முடிவெடுக்க இயலுவதில்லையாம்.

இந்தச் சிக்கலைத் தவிர்க்க, பள்ளியில் சேர்க்கிறபோதே இரட்டையர்களைத் தனித் தனிப் பிரிவில் சேர்ப்பது பிரிவை அவர்களுக்குப் பழக்கப்படுத்தும். இருவரும் தனக்கெனத் தனி நண்பர் வட்டத்துடன் வளர்வார்கள்.

திருமண வாழ்க்கையில் தடுமாறுவார்களா?

இரட்டைப் பிறவிகளாகப் பிறந்த இருவரும் பெரும்பாலும் நல்ல நண்பர்களாக, தோழிகளாகவே இருப்பார்கள். சுக, துக்கங்களைப் பகிர்ந்துகொள்வதில் ஒருவருக்கொருவர் தோள் கொடுப்பார்கள். மற்ற நண்பர்கள், உறவினர்கள் எல்லாருமே இவர்களுக்கு இரண்டாம் பட்சம்தான். திருமண நேரம் வரும்போது அது இவர்களை அதிகம் சிந்திக்க வைக்கிறது. தங்கள் இருவரையும் புரிந்துகொள்ளக் கூடிய மனைவிகள் அல்லது கணவர்கள் அமைய வேண்டுமே என்று அதிகம் கவலைப்படுகிறார்கள். தங்களைப் போலவே இரட்டையர்களாகப் பிறந்த இன்னொரு ஜோடியைத் திருமணம் செய்வதை முதல் சாய்ஸாக




வைக்கிறார்கள். அப்படி அமையாத பட்சத்தில்தான் அடுத்த யோசனையே! வெளிநாடுகளில் இன்னும் கொஞ்சம் முற்போக்காகச் சிந்தித்து, ஒரே பெண்ணை அல்லது ஒரே ஆணை இரட்டையர்கள் திருமணம் முடிக்கிற கூத்தும் அதிகம் உண்டாம்.

# சிகை அலங்காரங்கள்

## டபுள் பன்

1. முதலில் தலையை வாரி Poney tail ஆகக் கட்டுக.

2. பின்பு கட்டிய தலைமுடி முழுவதையும், Poney tail இன் மேலாக மடித்தெடுத்து, Poney tail இன் மேல்வைத்துக் குற்றிக்கொண்ட பின்பு, மிகுதியாக உள்ள தலைமுடியை Curl ஆக அமைத்து, Poney tail இன் மேலே வைத்துக் குற்றிக்கொள்க.



# அழகு உங்கள் சாய்ஸ்

**கூந்தல் நுனியில் அதிகம் வெடித்துப் பிளந்து காணப்படுகின்றன. அதைக் கட்டுப்படுத்த, மேற்கொண்டு வெடிக்காமலிருக்க என்ன செய்யலாம்?**

பிளவுபட்ட முடியை ஒன்று சேர்க்க முடியாது. அடிக்கடி முடியை டிரிம் செய்துவிட வேண்டும். சீயக்காய் 500 கிராம், பச்சைப் பயறு 200 கிராம், வெந்தயம், கார்போக அரிசி, ரோஜா



இதழ், செண்பக மொட்டு, வெட்டிவேர், அந்திகாய் என எல்லாம் சேர்த்து 300 கிராம் இருக்குமாறு அரைத்து வைத்துக்கொள்ளவும். சாதம் வடித்த கஞ்சியுடன் சேர்த்து இந்தப் பொடியை உபயோகித்துத் தலையில் குளித்தால் கூந்தல் உடையாமலிருக்கும். ஒரு முட்டையுடன் இரண்டு தேக்கரண்டி ஆலிவ் எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் கலந்து தலையில் தடவி, வெந்நீரில் நனைத்துப் பிழிந்த டவலால் தலையைச் சுற்றி, கால் மணி நேரம் கழித்து அலசினாலும் முடி உடையாது.

**முகத்தில் நிறைய பருக்கள் உள்ளன. பூண்டு விழுது போட்டால் பருக்கள் சரியாகும் என்பது உண்மையா?**

பூண்டு சிறந்த கிருமிநாசினி என்பது உண்மைதான். ஆனால் அதை அப்படியே அரைத்து நேரடியாகச் சருமத்தில் போட் டால் சருமம் கறுத்துவிடும். பூண்டை அரைத்து பால், வெண்ணெய் அல்லது நெய் என ஏதேனும் ஒன்றுடன் கலந்து போட்டால் பரு சரியாகும்.

**கைகள் எப்போதும் சொரசொரப்பாகவே இருக்கின்றன. கைகள் பளபளப்பாக இருக்கும் என்ன செய்யலாம்?**

சந்தனப் பொடி, அரிசி மா, சோயா மா, கஸ்தூரி மஞ்சள் தூள் என எல்லாவற்றிலும் தலா இரண்டு தேக்கரண்டி எடுத்து பன்னீரில் கலந்து கைகளுக்குப் போட்டால் சொரசொரப்பு நீங்கி, உங்கள் கைகள் பளபளக்கும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது —ஷோபா—*

## மஸ்கட்

***20–25 துண்டுகள்***

***தேவையான பொருட்கள் :-***

கோதுமை மா - 1/4 கி. கிறாம்
சீனி - 3/4 கி.கிறாம்
ஏலப் பொடி - 1 தே.க. (மட்டமாக)
சிறிதாக வெட்டிய கஜு - 2 மே.க. (நிரப்பி)
நெய் / தேங்காயெண்ணெய் - 1/4 போத்தல்
தண்ணீர் - 1/2 தம்ளர்
உப்பு - அளவிற்கு
கேசரிப் பவுடர் - 2 சிட்டிகை

***செய்முறை :-***

கோதுமை மாவை அரித்துப் பாத்திரத்திலிட்டு அளவிற்கு உப்பும் தண்ணீரும் சேர்த்துக் கையிலொட்டாத பதத்திற்கு அடித்துக் குழைத்துப் பந்து போன்ற உருண்டையாக்கி, ஓர் மெல்லிய துணியில் வைத்துத் த்ளர்வான பொட்டலமாகக் கட்டிக்கொண்ட பின்பு, பிறிதொரு பாத்திரத்தில் 10 தம்ளர் தண்ணீரை ஊற்றி இப் பொட்டலத்திலுள்ள மாவு பால் போல் கரைத்து நீருடன் சேரும் வரை நன்றாகப் பிசைந்து கொண்டபின் மிகுதியாக வரும் இறப்பர் போன்ற பகுதியை வீசிவிட்டுப் பாத்திரத்தில் உள்ள கலவையை 12 மணி நேரத்திற்குப் புளிக்க வைத்துக்கொள்க.

பின்பு புளிக்க வைத்த மாக் கலவையையெடுத்து மேலே தெளிந்திருக்கும் தண்ணீரை மெதுவாக வடித்து ஊற்றிவிட்டு, மாக் கரைசலை மட்டும் எடுத்துக் கேசரிப் பவுடர் கலந்து வைத்துக்கொள்க.

பின்பு தாச்சியில் சீனியைப் போட்டு 1/2 தம்ளர் தண்ணீர் விட்டுக் காய்ச்சவும். சீனி முழுவதும் கரைந்து பாகு பொங்கிக் கொதிக்கத் தொடங்கும்போது மாக் கரைசலை விட்டு இடைவிடாது கரண்டியால் துளாவிக் காய்ச்சுக. கலவை பிசின் போன்ற பதத்தையடையும்போது நெய்யைச் சிறிது சிறிதாக விட்டு முழுவதுமாகச் சேர்த்து இடைவிடாது கிளறுக.

மாக் கலவை தாச்சியில் ஒட்டாது திரளும் பதத்தையடைந்ததும் (கையிலொட்டாத பதம்) கஜு ஏலப் பொடி சேர்த்து நன்கு கிளறி எண்ணெய் பூசிய தட்டில் கொட்டி 1 1/2" தடிப்பாகப் பரவி 2"x2" அளவுடைய துண்டுகளாக வெட்டிக் ஆறிய பின்பு பரிமாறலாம்.

# ஒரு தாய் மகள் 22

**சென்ற வாரம்**

**ஆலிஸனுக்கு தலை மயிர் அனைத்தும் மழிக்கப்பட்டு ஆபரேஷனுக்கு ஆயத்தமாக்குகின்றார்கள். தாரென்ஸன் பேஜுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி அவளை வீடு சென்று வரும் படி சொல்கிறான். பேஜ் இன்னும் அந்த அதிர்ச்சியில் அருந்து விடுபடாதவனாகவே இருக்கிறாள்.**

ஆபரேஷனுக்குச் சம்மதிப்பதாகப் பேஜ் எழுதித் தர வேண்டிய பாரங்கள் வந்தன. அவற்றில் கையெழுத்திட்டுக் கொடுத்தனுப்பினாள்.

"வா, ரெஸ்டாரென்ட்டுக்குப் போய் ஒரு கப் காப்பி சாப்பிட்டுவிட்டு வரலாம்" என்றான் தாரென்ஸன்.

"ஊகூம், காப்பி வேண்டாம்" என்றாள் அவள்.

"சரி, கொஞ்சம் தண்ணீராவது குடித்துவிட்டு வரலாம் வா. இடம் மாறினால் நல்லது. இன்னும் ரொம்ப நேராமாகும். ஆபரேஷன் முடிய." என்றான் அவன். பன்னிரண்டு முதல் பதினாறு மணி நேரம் வரை பிடிக்கும் என்று தலைமை சர்ஜன் சொல்லியிருந்தார்.

"விடிகாலை நாலு மணியாகிறது. வீட்டுக்கு வேண்டுமானால் போய் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கொண்டுவிட்டு வாயேன்" என்றான். அவன் குரலில் கவலை நிரம்பியிருந்தது.

கடந்த எட்டு வருடத்தில் தங்களுக்குள் ஏற்பட்டிருந்த நெருக்கத்தை விட அதிகமான நெருக்கம் இந்தச் சில மணி நேரத்தில் ஏற்பட்டிருப்பதாகத் தோன்றியது பேஜுக்கு.

துணைக்கு அவன் இருப்பது குறித்து அவள் நெஞ்சு நன்றி பாராட்டியது. 'இவர் மட்டும் இப்போது இல்லையென்றால் நமக்குப் பைத்தியமே பிடித்திருக்கும்' என்று எண்ணிக்கொண்டாள்.

"இல்லை. எனக்கு வீட்டுக்குப் போக மனமில்லை" என்றாள். அவள் மனநிலை தாரென்ஸனுக்குப் புரிந்தது.



அவனுக்கும் க்ளோவை விட்டுவிட்டுப் போக இஷ்டமில்லை. ஆனால் அவனைப் பொறுத்தமட்டில் வீட்டில் மூத்த மகன் நிக் இருக்கிறான். உடம்பு சரியில்லாத பையன் பிஜானை அவன் கவனித்துக்கொள்வான். நிலைமையை ஓரளவு நிக்கிடம் எடுத்துச் சொல்லிவிட்டுத்தான் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தான்.

பேஜ் விஷயம் அப்படியல்ல. அவளுடைய பையன் ஆண்டியைப் பார்த்துக்கொள்ள அங்கே யாரும் கிடையாது. அம்மாவும் இல்லாமல் அக்காவும் இல்லாமல் அவன் பயந்து போவானே. பாவம்! ஆகவே பேஜ் தன் வீட்டுக்குப் போய்விட்டு வந்தால் நன்றாயிருக்கும் என்று தோன்றியது. ஆனால் பேஜ் சம்மதிக்கவில்லை.

ரொம்ப வற்புறுத்தியபின் அரை மனதாக மருத்துவ மனையில் இருந்த ரெஸ்டாரென்ட்டுக்குப் பேஜ் வந்தாள்.

அங்கே இருவரும் காப்பி சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் "ஆண்டியை யாரிடம் விட்டுவிட்டு வந்தாய்?" என்று தாரென்ஸன் கேட்டான்.

"பக்கத்து வீட்டில் ஜேன் என்று என் சினேகிதி இருக்கிறாள். அவளை என் வீட்டில் இருக்கச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். ஆண்டிக்கு அவளைப் பிடிக்கும். அதனால் காலையில் அவன் எழுந்துகொள்ளும்போது பிரச்சினை இருக்காது. வேறு வழியில்லை. இப்போது எப்படி வீட்டுக்குப் போவது?" என்று பெருமூச்சு விட்டவள், "பொழுது விடிந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் பிராட் எங்கே இருக்கிறார் என்று கண்டுபிடித்துத் தகவல் சொல்ல வேண்டும். அதுதான் என் ஒரே கவலை. போகிய இடத்தின் டெலிபோன் நம்பரை குறித்து வைக்க அவர் மறந்து போனது இந்தப் பதினாறு வருடத்தில் இதுதான் முதல் தடவை" என்றாள்.

"சில சமயம் அப்படித்தான் நேரிட்டு விடுகிறது" என்றான் தாரென்ஸன்.

"பிராடிடம் என்ன சொல்லப் போகிறேன், எப்படிச் சொல்லப் போகிறேன் என்றே புரியவில்லை. அவருக்கு ஆலியிடம் எக்கச்சக்கமான பாசம். ஆலிக்கும் அப்படித்தான். அப்பா என்றால் உயிர்.."

"நம் எல்லாருக்குமே இது மகா பயங்கரமான இரவு பேஜ். காரை ஓட்டி

**எழுதியது: டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

வந்து இறந்து போனானே அந்தப் பையன் பிலிப், அவனுடைய அப்பா அம்மாவுக்கு எப்படி இருக்கும் பாவம்" என்றான் தாரென்ஸன். அப்படிச் சொன்ன கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவர்களே வந்துவிட்டார்கள்.

சாப்மனுக்கும் அவர் மனைவிக்கும் நாற்பத்தைந்து, ஐம்பது வயதிருக்கும். வசதி படைத்தவர்கள் என்பது அவர்கள் தோற்றத்திலேயே தெரிந்தது. ஆனால் கதிகலங்கி ஆடிப் போயிருந்தார்கள் இருவரும் வெளியூருக்குச் சென்றிருந்தவர்கள். செய்தி கிடைத்ததும் உடனே புறப்பட்டுக் காரில் நெடுந்தூரம் பயணம் செய்து வந்து சேர்ந்திருந்தார்கள். விபத்தில் பிலிப் இறந்து போனான் என்பதை அவர்களால் நம்பவே முடியவில்லை. அவன் அவர்களுடைய ஒரே குழந்தை. கல்யாணமாகிப் பல வருடங்கள் கழித்துப் பிறந்த பிள்ளை.

விபத்தைப் பற்றி டாக்டர் அவர்களிடம் விவரித்துக்கொண்டிருந்தபோது மிஸஸ் சாப்மன் தலையைக் குனிந்தபடி அழுதுகொண்டிருந்தாள். சாப்மன் அவள் இடையை அணைத்துக்கொண்டு வாய் விட்டு அழுதார்.

கார்கள் மோதிய வினாடியிலேயே பிலிப் இறந்துவிட்டான். தலையில் அடிபட்டு, கழுத்தும் முதுகு எலும்பும் முறிந்துவிட்டதால் பிழைத்திருக்க சான்ஸே இல்லை" என்றார் டாக்டர்.

இரத்தப் பரிசோதனை செய்தபோது பிலிப்பின் இரத்தத்தில் ரொம்பக் குறைந்த அளவுக்கு ஆல்கஹால் இருந்தது தெரியவந்ததென்று டாக்டர் தெரிவித்தார்: "சட்டப்படி அது அப்படியொன்றும் அதிக அளவு இல்லை. ஆனால் சிறு வயதுப் பையனாக இருப்பதால் அதுவே அதிகமாக இருக்கலாம். அதை வைத்து விபத்துக்கு அவன்தான் காரணம் என்று சொல்ல முடியாது. யார் மீது யார் மோதினார்கள் என்பது இன்னும் தெரியவில்லை. அந்த மற்றக் காரை ஓட்டி வந்தவர் செனெட்டர் ஹட்சின்ஸின் மனைவி லாரா. உங்கள் பிள்ளை இறந்து போனதில் ரொம்பவும் அதிர்ச்சியடைந்திருக்கிறாள்...."

யார் அதிர்ச்சி அடைந்து என்ன? போன பிள்ளை போனவன்தான்.

அழுதவண்ணம் கேட்டுக்கொண்டிருந்த சாப்மனின் மனைவி மேரிக்கு, பிலப் ஒருவேளை குடிபோதையில இருந்திருக்கலாம் என்கிற மாதிரி டாக்டர் சொன்னதைக் கேட்டு கோபம் வந்தது.

"அந்த அம்மாளுக்கு இரத்தப் பரசோதனை செய்தார்களா?" என்று கேட்டாள்.

"இல்லை. அவர் நிதானத்தில் இருந்தார் என்று பொலிஸில் நிச்சயமாகச் சொல்கிறார்கள்..." என்று டாக்டர் சொன்னவுடன் மேரிக்கு மட்டுமல்ல, சாப்மனுக்கும் கடும் கோபம் ஏற்பட்டது. அவர் ஒரு சிறந்த வழக்கறிஞர். தன் மகனைப் பரிசோதனை செய்திருக்கிறார்கள்... குடி போதையில் இருந்திருக்கலாம் என்று சந்தேகப்பட்டிருக்கிறார்கள்.. ஆனால் செனெட்டரின் மனைவியிடம் மட்டும் எந்த விசாரணையும் செய்யாமல் விட்டிருக்கிறார்கள். எத்தனை பெரிய அநீதி!

(தாய் தொடர்வாள்.....)

**மாண்பு மிகு எமது மகளிரைக் கௌரவப்படுத்து முகமாக சாதனைகள் புரிந்த சில பெண்களை நாம் இங்கு தருவதோடு, சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.**





# சாதனைப் பெண்கள்

## சோனியா காந்தி

இந்தியாவின் மதிப்புமிக்க பெண்மணிகளுள் முதன்மையான திருமதி இந்திரா காந்தியின் மகன் ராஜீவ் காந்தியை திருமணம் செய்து கொண்டு பிரபலமானவர் சோனியா காந்தி. மாமியாரையும் கணவரையும் துரதிர்ஷ்டவசமாக



இழந்த பிறகும் பல இன்னல்களைக் கடந்து, நீண்ட மௌனங்கள், விவாதங்கள், சர்ச்சைகளுக்குப் பிறகு அரசியலில் தைரியமாகக் காலடி எடுத்து வைத்து இந்திரா காந்தியின் மருமகள் என்று நிரூபித்தவர்.

சமீப நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி ஜெயித்து ஆட்சியைப் பிடித்தபோது இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர் எப்படி இந்திய பிரதமர் தகுதி பெறலாம் என்ற கேள்வி எழுந்தபோது, இந்திய அரசியல் வரலாற்றிலேயே பிரதமர் பதவியை உதறும் முடிவை எடுத்த முதல் நபர் இவர் என்பது இவருக்கு மேலும் பெருமையையும் மதிப்பையும் சேர்த்தது என்பது குறிப்பிடத் தக்கது

1908 - மார்ச் 8, நியூயோர்க் நகரின் பஞ்சாலைகள் அனைத்தும் சினிமாவில் :.பிரீஸ் செய்தது மாதிரி அன்று நின்று போயின. அவற்றில் வேலை செய்துகொண்டிருந்த பெண்கள் எல்லாம் வீதியில் திரண்டு ஊர்வலமாகப் புறப்பட்டனர்.

"ஆண்களுக்குச் சமமாகப் பெண்களுக்கும் சம்பளம் கொடு!"

"எட்டு மணி நேரம் மட்டுமே வேலை செய்வோம்!" என்று கோரிக்கை வைத்து வெற்றியும் பெற்றனர்!

கிளாரா ஜெட்கின், ரோஜா லக்ஸம்பர்க் ஆகியோரின் பெருமுயற்சியால் 1910ஆம் ஆண்டு கோபன்ஹேகனில் சர்வதேச சோஷலிஸ்ட் பெண்கள் மாநாடு கூட்டப்பட்டபோது அந்த மார்ச் 8ஐ சர்வதேச உழைக்கும் பெண்கள் தினமாக ஆண்டுதோறும் கொண்டாடும் முடிவெடுக்கப்பட்டது.

வாட்? உழைக்கும் பெண்கள் தினமா? ம்ஹூம்! என்று மறுத்துவிட்டது அமெரிக்கா.

பிறகு 1954இல் ஐ.நா.சபை அமைக்கப்பட்டபோது அக் கோரிக்கையை அமெரிக்கா தடுத்துவிட்டது.

எனினும், 1975இல் 'உழைக்கும்' என்பதை எடுத்துவிட்டு வெறும் 'மகளிர் தினமாக' வைத்தால் ஓ.கே! என்று அமெரிக்கா ஒப்புக்கொள்ள, ஒரு வழியாக மார்ச் 8 மகளிர் தினமானது.

## மதா அமிர்தானந்தமயி



**1953ஆம்** ஆண்டு செப்டெம்பர் 27 ஆம் திகதி காலை கேரளா கொல்லம் மாவட்டத்தில் உள்ள பரயக்கதவு என்ற ஏழ்மையான மீனவக் கிராமத்தில் பிறந்த அதிசயப் பெண் குழந்தைக்கு சுதாமணி என்று பெற்றோர் பெயர் சூட்டினர். இப் பூவுலகில் வீழ்ந்தவுடன் அழுகையுடன் உலகை எதிர்கொள்ளும் பிற குழந்தைகள் போல் அல்லாமல் பெரும் புன்னகையுடன் தோன்றிய இக் குழந்தை அன்றே உலகத்திற்கு தான் மகிழ்ச்சியையும், நன்மையையும் அளிக்கப் போகிறேன் என்று கூறாமல் கூறியது போல் அவதரித்தது.

"அம்மா..." என்று பக்தர்களால் அழைக்கப்படும் இவரை ஒரு முறை "லாஸ் எஞ்சல்ஸ் டைம்ஸ்" பத்திரிகை துடுக்குத்தனமான கேள்வி ஒன்றைக் கேட்டது. "ஏன் பக்தர்களை அணைக்கிறீர்கள்?" இதுதான் கேள்வி. இதற்கு மாதா பதிலளிக்கையில், ஒரு நதியை பார்த்து நீ ஏன் ஓடுகிறாய் என்பது போல் இருக்கிறது இக் கேள்வி. எந்தக் குழந்தையாவது தனது தாயைப் பார்த்து என்னை ஏன் கட்டிக்கொள்கிறாய் என்று கேட்குமா?" என்றார்




**1995**ஆம் வருடம் அமெரிக்காவில் நடந்த மிஸ் அமெரிக்கா அழகிப் போட்டியில் வெற்றி பெற்றார் ஹீதர் வொய்ட் ஸ்ஆடான். இந்த அழகிக்குக் காது கேட்காது. பேச முடியாது. ஒன்றரை வயதிலிருந்து இந்தக் குறை.

இவர் மிஸ் அமெரிக்கா பட்டத்தை வென்றதுக்கு பலரும் ஆச்சரியம். இரண்டு பெரிய குறைகளை வைத்துக்கொண்டு எப்படி அந்தப் பெண்ணால் வெல்ல முடிந்தது என்று புருவத்தை உயர்த்தினார்கள். அவர்களுக்கு அவளது பெற்றோர் தந்த பதில் இதுதான்.

"அவளிடம் அந்தக் குறைகள் இருந்தாலும், அவற்றை நாங்கள் பெரிதாக நினைக்கவில்லை. அவளுக்கு நல்ல படிப்பைக் கொடுத்தோம். நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொடுத்தோம். அவளிடம் உள்ள நிறைகளைத் தான் அவளுக்கு நாங்கள் சொல்லி வளர்த்தோம். அவளும், தன்னிடமுள்ள குறைகளைப் பார்க்காமல் நல் விஷயங்களை மட்டுமே பார்த்தாள். அதுதான் அவள் வெற்றியின் இரகசியம்."

# புலம் பெயர்ந்தவர்களின் பேனா முனை



சமூகத்தை நேசிப்பவர்களுக்கு விதிக்கப்பட்ட சாபமோ என்னவோ, அவர்கள் தங்கள் சொந்த வாழ்வில் பெரிய விலை ஒன்றைச் செலுத்த வேண்டியிருக்கிறது. பெயரும் புகழும் வேண்டிப் பொதுவாழ்வில் தங்களை நுழைத்துக்கொள்பவர்களுக்கு இது பிரச்சினையாக இருப்பதில்லை.

# அமைதியில் இளைப்பாறுக...!

வசதிப்படும்போது அரசியல் பேசி, தேவைப்படும்போது நிறங்களை மாற்றும் பலரை நாம் கண்டிருக்கிறோம். பொதுநலம் என்ற பேச்சே சுயநலம் சார்ந்ததாக, பொருளும் புகழும் சம்பாதிப்பதற்கான வழியாக என்றும் எங்கும் நிலவுவதற்குப் பல உதாரணங்கள் உண்டு. ஆனால், சமூகத்தை உண்மையாக நேசித்து, அதன் நலன்களுக்காகத் தங்கள் சொந்த வாழ்வைத் தியாகம் செய்து, அர்ப்பணித்துக்கொண்டவர்கள் இறுதியில் சொந்த வாழ்வில் பல சோதனைகளைச் சந்திக்க வேண்டியதாகவே இருக்கிறது.

உள்ளமும் உடலும் உடைந்து நொருங்கிப் போன நிலையிலும் சமூகம் சார்ந்த, தன் அக்கறையைக் கைவிடாத ஒருவராக, தன் வசதிகளை மட்டும் நினைக்காமல் இறுதி வரைக்கும் 'நாங்கள் பேசாமல் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. எதையாவது செய்தே ஆக வேண்டும்' என்று அடிக்கடி எனக்குச் சொல்லிக்கொண்டிருந்த உமா அண்ணன், பேச விரும்பி என்னைத் தேடி அழைத்தும் பேச முடியாமல் போன அதே இரவில் இறந்த சேதியை தற்செயலாக இணைய வலைக்குள் காண நேர்ந்த துயரம் எந்த வார்த்தைகளுக்குள் அடங்கும்?

இலக்கிய உலகில் சம்பாதித்துக்கொண்ட ஆழமான நண்பர்களுக்குள் சகோதரனாக நான் 'அண்ணை' என்று என்றுமே வாஞ்சையுடன் அழைக்கும் ஒருவர் அவர். 'தாயகம்' பத்திரிகையில் எழுதுவது என்பது தீண்டத் தகாததாக இருந்த போதே தானாகவே முன்வந்து 'இவ்வாறான ஒரு களம் எங்களுக்கு அவசியமானது.' அது தொடர்ந்து வெளிவர வேண்டும்' என்ற அக்கறையுடன் அதில் சர்வதேச அரசியல் பற்றித் தொடராக எழுதியவர் அவர். நண்பர்கள் குறிப்பிட்டது போல, வேறு பத்திரிகைகள் வேறு பெயரில் எழுத அழைத்தும் மறுத்தவர் அவர்.

சர்வதேச அரசியல் பற்றி சாதாரணமாகப் பத்திரிகைகள் மூலம் அறிந்துகொள்வது போல் அல்லாமல், மிகவும் ஆழமாக அதன் பின்னணிகளை தெளிவாக்குகின்ற தன்மையும், உலகில் மறக்கப்பட்ட மூலை முடுக்குகளில் கனன்றுகொண்டிருக்கும் அரசியல் பிரச்சினைகளை "தாயகம்" வாசகர்களுக்கு வழங்குவதில் இருந்த ஆர்வமும் அவருடைய தொடரை வாசித்தவர்களுக்குத் தெரிந்திருக்கும். நேரடியாகச் சொல்லாவிட்டாலும், அந்த அரசியல் பிரச்சினைகளுக்கும் எங்கள் இனப் பிரச்சினைக்குமான ஒப்பீட்டுத் தொடர்புகளும் அதில் இருந்து நாங்கள் கற்க வேண்டிய பாடங்களும் தெளிவாகவே அவரது எழுத்துக்களில் புலப்படும்.

இவ்வளவு அன்னியோன்னியமாக இருந்தும் அவருடைய ஆரம்ப காலப் பணிகளையும் செயற்பாடுகளையும் இன்று அவருடைய நண்பர்கள் மூலம்தான் அறிய முடிந்ததே தவிர, அவர் அது பற்றி என்றுமே பெருமை கொண்டு வெளிக்காட்டியதில்லை. அவருடைய நீண்டகாலச் செயற்பாடுகளைப் பற்றி இன்று அறியும்போது பிரமிப்பும் பெருமையும்தான் மிஞ்சுகின்றன. சாதித்தவைகளை விட, செய்ய வேண்டியவைகள் பற்றித்தான் அவருடைய அக்கறை இருந்தது.

எங்கள் தமிழ் இனத்திற்கு இன்று தேவைப்படும் சமூக மாற்றமும் முன்னேற்றமும் பற்றி அவர் கொண்டிருந்த அக்கறை, அவருடன் பேசும்போது நன்றாகவே தெரியும். 'இந்தச் சமூகத்திற்கே இது பற்றி அக்கறையில்லை' என்ற சலிப்பான பேச்சுக் கூட இல்லை. 'அதற்கான தேவை கட்டாயமாக இருக்கிறது. இது பற்றிய உண்மைகள் வெளியில் கொண்டுவரப்பட வேண்டும்' என்று இறுதி வரை உற்சாகப்படுத்தியவர் அவர். தமிழ் இனத்தின் அவலங்களும் அநீதிகளும் நீக்கப்பட வேண்டும் என்று தனக்கான - தன்னால் முடிந்த ஒரு வேலைத்திட்டத்தைக் கொண்டிருந்து, அதற்கான தொடர்புகளைப் பேணிக்கொண்டு, அது பற்றிய முயற்சிகளிலும் அவர் ஈடுபட்டிருந்தார்.

வெறும் தத்துவங்களுக்குள் தன்னை முடக்கிக்கொள்ளாமல், நடைமுறைச் சாத்தியங்கள் பற்றிய தெளிவு அவருக்கு நிறைய இருந்தது. தன் கருத்துக்களில் கொண்டிருந்த நம்பிக்கையும் அவருக்கு இருந்த நேர்மையும்தான் அவருடன் முரண்பட்டவர்களைக் கூட அவர் மீது மதிப்புக் கொள்ள வைத்திருந்தன. தனக்கான பெயரும் புகழும் பற்றிய அக்கறை எதுவுமின்றி, தீர்வுக்கான அவரது செயற்பாடுகள் பற்றி அவருடன் நெருக்கமானவர்களுக்கு மட்டுமே தெரியும்.

மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருப்பதும் அதற்காக உழைப்பதும் எங்கள் சமூகத்தில் தலை போகும் பிரச்சினையாக உருவெடுத்த துயர நிலையில், துணிச்சலாகத் தனது கருத்துக்களைப் பகிரங்கமாகத் தெரிவிப்பதற்கு அவர் என்றுமே பின்னின்றதில்லை.

இந்தச் சமூக சிந்தனைகளுக்கும் அப்பால் தெரிந்த ஒரு சகோதரன்தான் இன்று நெஞ்சில் நிறைந்திருப்பவர். நீண்ட காலம் தொலைத் தொடர்பாகத் தெரிந்திருந்தாலும் முதல் முதலாக நேரில் சந்தித்தபோது கட்டியணைத்து வரவேற்ற ஒருவர் அவர். தான் மனம் சலிப்புற்றும் நொந்தும் வேதனையுற்றபோது கூட ஒரு சகோதரனைப் போல அழைத்து சமூகக் கடமையை வலியுறுத்தியவர் அவர். அவ்வப்போது அவர் தன்னைப் பற்றிய அக்கறை எதுவுமின்றி நோய் வாய்ப்பட்டிருந்தபோது தொடர்புகள் இன்றிப் போனாலும் மீண்டு வந்து இறுதி இரவு வரைக்கும் தேடி அழைத்தவர். இவ்வளவு நெருக்கமாக இருந்தும், சொந்த வாழ்வின் துயரங்கள் பற்றி அவர் என்றைக்குமே எதுவும் சொன்னதில்லை. மனம் திறந்திருந்தால் ஒருவேளை ஆறுதல் கிடைத்திருக்கக் கூடும்.

சிறிய விடயங்களுக்கு மனவேதனைப்படும்போது அவருடைய குழந்தைத்தனம் நன்றாகப் புரியும். மகன் பற்றிப் பேசும்போது, அவன் தன்னைக் கட்டுப்படுத்துவது பற்றிக் கூறும்போது தந்தைக்குரிய பெருமிதம் தெரியும். தன் தம்பி குகன் தன்னில் வைத்திருந்த அன்பும் மதிப்பும் பற்றிப் பேசும்போது சகோதரனுக்குரிய பாசம் புரியும்.

தன்னுடைய தாயையும் சகோதரிகளையும் பார்த்துவர வேண்டும் என்றும் தாயின் மடியில் கண்ணுறங்க வேண்டும் என்றும் ஆவலுடன் இருந்த அவருடைய விருப்பம் நிறைவேறவில்லை.

அவர்களை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு நிரந்தரமாய்க் கண்ணுறங்கிவிட்டார்.

பொதுவாழ்வில் மனிதன் எவ்வாறான பெருமைக்கு உரியவனாக இருந்தாலும், ஒரு தனி மனிதன் தன் வாழ்வில் எத்தகைய உயரிய பண்புகளைக் கொண்டிருக்கிறான் என்பதுதான் அவனை அளப்பதற்கு உரிய அளவு கோல். அந்த அளவில் உமா அண்ணன் உச்சத்தில் இருப்பதுதான் அவருடைய வாழ்வின் வெற்றி. அவர் சம்பாதித்துக்கொண்ட நண்பர்களும் நற்பெயர்களும்தான் அதற்கான சாட்சிகள்.

சமூகத்தின் நலனுக்காகத் தன்னை அர்ப்பணித்து அதற்காகத் தன்னால் முடிந்த எல்லாவற்றையும் இறுதி வரைக்கும் முயன்றுகொண்டிருந்த உமா அண்ணனுக்கு அமைதியும் சமாதானமும் இப்போதாவது கிடைக்கட்டும்.

(நன்றி:- www.Thayagam.info)


(அடுத்த வாரமும் தொடரும்)

# 47 ஒரு பெண்ணின் வாழும் வரலாறு



## ஹிலாரி கிளின்டன் எழுதுகிறார்

நட்புறவு கொண்ட மனிதர்களை பல்கலைக்கழகங்களிலும், அமைப்பு ரீதியிலான தொழிலாளர்களுக்குள்ளும், வழக்கறிஞர்களிடையேயும் கண்டேன். எனது வழிகாட்டிகளுள் ஒருவரான ப்ராங்க்ளின் கார்சியா ஒரு சங்கத்தின் அமைப்பாளராவார். நான் தனியே செல்லாத, பார்த்தில்லாத சில இடங்களுக்கும் அவர் என்னை அழைத்துச் சென்றார். நான் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திலிருந்தோ அல்லது வேறு ஏதேனும் அரசாங்க முகவர் நிலையத்திலிருந்தோ வந்திருப்பதாக எண்ணி மெக்சிகன் அமெரிக்கர்கள் கவலைப்பட்டனர். ப்ராங்க்ளின் எனக்காக அவர்களுக்கு பதில் கூறுவதற்குக் கடமைப்பட்டிருந்தார். பிரவுன்ஸ்வில் பகுதியில் பில் குடியரசுக் கட்சித் தலைவர்களுடன் சந்திப்புக்களை நிகழ்த்திக்கொண்டிருந்த வேளையில், நானும் ப்ராங்க்ளினும் அவரை அழைத்துக்கொண்டு ஒருநாள் இரவு மடமொறோஸ்ஸ"க்குப் போனோம். அங்கே ப்ராங்க்ளின் நாம் என்றும் மறக்க முடியாதவாறான இரவு சாப்பாட்டினைத் தந்தார். நான் அங்கே இதற்கு முன் எப்போதும் சாப்பிட்டிராத ஆட்டுத்தலைக் கறியைச் சாப்பிட்டேன். நான் விரைவாகச் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே பில் அங்குள்ள மேசை மீது தலை சாய்த்து உறங்கிவிட்டார்.



கடலில் நீந்துவதற்குப் புறம்பாக நாம் இருவரும் தேர்தலைப் பற்றியும், மெக்கவர்னனது தேர்தல் பிரசார தோல்வியினைப் பற்றியும் இரைமீட்டினோம். அரசியல் பிரசாரக் கலையினைப் பற்றியும், தொலைக்காட்சியின் தாக்கத்தினைப் பற்றியும் நாம் இன்னும் அதிகம் கற்க வேண்டுமென நானும் பில்லும் புரிந்து, உணர்ந்து கொண்டோம். அரசியல் பாட்டையில் 1972 பந்தயமானது எமது ஆரம்ப அனுபவமாக இருந்தது.

முன்பு டெக்ஸாஸ் மாநில குடியரசுக் கட்சியில் சுறுசுறுப்பாக இயங்கிய பெட்சி ரைட் தேர்தல் பணிகளில் ஈடுபடுவதற்காக வந்திருந்தார். மேற்கு டெக்ஸாஸில் பிறந்து வளர்ந்த அவர், ஒஸ்டின் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். அவர் மிகச் சிறந்த அரசியல் கட்சி அமைப்பாளரும் ஆவார்.

தேர்தலுக்கு இன்னும் 30 தினங்களே இருந்தன. வாக்காளர்களைப் பதிவு செய்யும் காலமும் நிறைவெய்தியது. அப்போது செனட் அன்டோனியோப் பகுதியில் தேர்தல் பிரசாரப் பணிகளைப் புரிவதற்கு உதவி புரியுமாறு பெட்சி என்னிடம் வேண்டிக் கொண்டார். நான் அப்போது கல்லூரி நண்பி ஒருவரின் வீட்டில் தங்கியிருந்தேன். அந்த அழகான நகரங்களின் காட்சிகளையும், ஓசைகளையும், மணங்களையும், உணவுகளையும் ரசித்து சுவைத்துக் கொண்டிருந்தேன். ஒரு நாளைக்கு மூன்று வேளையும் மெக்சிகன் உணவுப் பண்டங்களை ஆசை தீர உண்டு கழித்தேன். வழக்கமாக வீதியோரத்தில் உள்ள 'மாரியோ' விலும், சில வேளைகளில் டவுன் டவுனில் உள்ள 'மைடெரா' விலும் அத்தகைய உணவுகளை ருசி பார்த்தேன்.

ஜனாதிபதி தேர்தலொன்றின் பிரசார கூட்டங்களை ஓர் மாநிலத்திலோ, நகரத்திலோ நடத்த வேண்டுமானால் தேசியத் தலைமையகத்தின் இணக்கப்பாட்டினைப் பெறுவதற்கு வேட்பாளரையோ, ஓர் உயர் மட்ட துணைக் குழுவினரையோ அனுப்பிவைக்க வேண்டும். ஷர்லி மெக்லேன் என்பவர் நாமறிந்த மிகச் சிறந்த ஆதரவாளராவார்.

அவரை நாம் 'செனட் அன்டோனியோ'வுக்கு அனுப்பி வைத்தோம். அதே வேளை அருகிலுள்ள 'அலாமோ'வுக்குத் தேர்தல் பிரசார கூட்டமொன்றில் உரையாற்றுவதற்காக 'மெக்கவர்னனும்' சென்றிருந்தார். இதுவோர் சவாலாக அமைந் திருந்தது. ஒரு வாரத்துக்குள் எமது அனைத்து ஆற்றல்களையும் ஒரு முகப்படுத்தியதன் காரணமாக பெரும் தொகையானோரை ஈர்த்துக் கொள்வதற்கு எம்மால் முடிந்தது. இந்த அனுபவத்தின் மூலம் நான் ஒரு விடயத்தினைச் சிந்திப்பதற்கு தலைப்பட்டேன். அதாவது, தலைமையகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் எவ்வளவு முக்கியத்துவமிக்கவர்கள் என்பதனையும், உள்ளூர் மக்களை அது எவ்வளவு கௌரவப்படுத்துகிறது என்பதனையும் உணர்ந்தேன். வேட்பாளரின் வருகையையிட்டு விவாதங்களைத் திட்டமிடுவதற்காக மேலதிகக் ஊழியர்கள் அனுப்பிவைக்கப்படுகின்றனர். ஒரு மேலதிகக் குழுவினரின் செயற்பாட்டினை நான் கண்ணுற்ற முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

பாரதூரமான ஊக்கத்துடன் அவர்கள் செயல்பட்டனர். பந்தயத்தில் யார் வென்றாலும் அல்லது தோற்றாலும் பரவாயில்லை எனும் விதத்தில் தேவையான அனைத்தையும் அதாவது, தொலைபேசி, பிரதி பண்ணும் இயந்திரம், மேடை, நாற்காலிகள், ஒலி அமைப்பு ஆகியவற்றினை ஈட்டிக் கொண்டனர். யாரேனும் ஒருவர் அவற்றின் கட்டணத்தைச் செலுத்துவதற்கு முன் வந்தார். ஒவ்வொரு தடவையும் இந்த மேலதிக குழுவானது ஏதேனுமொன்றுக்கு உத்தரவிட்டபடியே இருந்தது. பணத்தைச் செலுத்துவதற்கு எப்படியேனும் அது சுருட்டி எடுக்கப்படும் என்று அவர்கள் என்னிடம் கூறினார்கள். ஆனால், ஒரு போதும் பணத்தைக் காணக்கிடைக்கவில்லை. ஒரு நாளிரவு மெக்கவர்னன் சிறந்த காரியமொன்றினைச் செய்தார் அதன் மூலம் உள்ளூரிலிருந்து வந்தவர்களுக்கு செலுத்தவதற்குப் போதுமான பணத்தினை நாம் ஈட்டிக் கொண்டோம். வெற்றிகரமான துணிகர முயற்சியினால் மட்டுமே எனது ஒரு மாதகால குறுகிய தகவல்களின் மூலம் அப்பணத்தை ஈட்டுவதற்கு முடிந்தது.

சாரா ஏர்மன்தான் இந்த நடவடிக்கையின் போது எனது பங்காளியாக இருந்தார். இவர் மெக்கவர்னினது ஊழியர்களுள் ஒருவராக இருந்தார். பிரசாரப் பணிகளுக்காக அவர் விடுமுறை எடுத்து வந்திருந்தார். பின்னர் அவர் டெக்ஸாஸ"க்குச் சென்று கள நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தார். ஒக்டோபர் மாதத்தில் ஒருநாள் அவர் செனட் அன்டோனியோவில் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது நான் அங்கு சென்றிருந்தேன். அவரது பணிகளில் நானும் உதவுவதாக அவரிடம் தெரிவித்தேன். இன்று வரை எம் இருவருக்கும் இடையிலான நட்பு தொடர்கிறது.

நிக்ஸன் நவம்பர் தேர்தலில் மெக்க வர்னனை தோல்வியுறச் செய்வார் என்பது நம் அனைவருக்கும் தெளிவாகத் தெரிந்தது. ஆனால் மிக விரைவில் நாம் ஒரு விடயத்தினை அறிந்து கொண்டோம். அதாவது பிரசாரத் திற்கான நிதியை முறைகேடாகப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினை வேவு பார்ப்பதனையிட்டு நிக்ஸனோ அவரது செயற்பாட்டாளர்களோ தடுக்கப்படவில்லை. நிதியின் மூலம் நடத்தப்பட்ட அழுக்கான தந்திரமான நடவடிக்கைகளினால் குடியரசுக்கட்சியின் வெற்றி உறுதிப்படுத்தப் பட்டது. ஆனால், வோட்டர்கேட் தொகுதி யிலுள்ள ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அரைகுறை வேலைகள் ரிச்சட் நிக்ஸனின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது.

யேல் பல்கலைக்கழகத்துக்கு திரும்பி வருவதற்கு முன் மெக்ஸிக்கோவிலுள்ள சிறியதோர் நகரமான சிகுஎட்டனெஜோவுக்கு நானும் பில்லும் சென்றோம். அது பசுபிக் கரையோரத்தில் அமைந்திருந்தது.

கடலில் நீந்துவதற்குப் புறம்பாக நாம் இருவரும் தேர்தலைப் பற்றியும், மெக்கவர்னனது தேர்தல் பிரசார தோல்வியினைப் புற்றியும் இரைமீட்டினோம். அரசியல் பிரசாரக் கலையினைப் பற்றியும், தொலைக்காட்சியின் தாக்கத்தினைப் பற்றியும் நாம் இன்னும் அதிகம் கற்க வேண்டுமென நானும் பில்லும் புரிந்து, உணர்ந்து கொண்டோம். அரசியல் பாட்டையில் 1972 பந்தயமானது எமது ஆரம்ப அனுபவமாக இருந்தது.

(அடுத்த வாரம் வரும்)

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## சர்வ கட்சி மாநாட்டுக்கு முன்னோடியான பேச்சுக்கள்

இந்தியா ஆக்கிரமிக்கலாமென்ற அச்ச உணர்வு இலங்கை அரசாங்க மட்டத்தில் இருந்ததென்பதற்கு அமைச்சர் காமினி திசாநாயக்காவின் இந்தக் கூற்று அசல் உதாரணமாகும். புதுடில்லியில் நவம்பர் மாதம் 24ஆம் திகதி நடைபெற்ற பொதுநலவாய அரசியல் கமிட்டியின் கலந்துரையாடலில் இதே விதமான




கருத்தையே ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் தெரிவித்திருந்தார். அவர் சொன்னார், "எனக்கு வலிமையும் வாழ்வும் இருக்குமென்றால், எவருக்கும் எனது மக்கள் அடங்கிப் போக விடமாட்டேன். இலங்கையில் அணுக்குண்டொன்று வெடிக்க வைக்கப்பட்டால் ஒன்றரைக் கோடி மக்கள் இறப்பார்கள். வேறு யாராவது அவாகளை ஆக்கிரமிக்க முனைந்தால் ஒன்றரைக் கோடி மக்கள் இறக்கலாம்.ஆனால் அவர்கள் விட்டுக்கொடுக்கமாட்டார்கள்" என்று கூறினார் ஜெயவர்த்தன. இந்தக் கூற்றும் இலங்கை அரசாங்கத் தலைவர்கள் இந்தியா பற்றிக் கொண்டிருந்த மனோபாவத்தைத் துல்லியமாக எடுத்துக் காட்டியது.

நியூயோர்க்கில் புலம்பெயர்ந்து வாழ்ந்துவந்த தமிழ்ப் புத்திஜீவிகளை டிசம்பர் மாதம் இந்திரா காந்தி சந்தித்துப் பேசியபோது இலங்கைத் தலைவர்களின் இந்த அவமதிப்பான பேச்சுக்களைக் குறிப்பிட்டுக் காட்டினார். "விரும்பியிருந்தால் இலங்கையை ஆக்கிரமிக்குமாறு உத்தரவிட்டிருக்க என்னால் முடியும். ஆனால் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் பாதுகாப்பற்ற நிலை குறித்து கவனத்திலெடுத்துத் தயக்கம் காட்ட வேண்டியிருந்தது" என்று வெளிப்படையாகவே இந்திரா காந்தி குறிப்பிட்டார்.

**ஜெயவர்த்தன கொழும்பு திரும்பியதும் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், இரா.சம்பந்தன் ஆகியோர் இந்திரா காந்தியைச் சந்தித்துப் பேசினர். சந்திப்பின்போது சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை இந்திரா காந்தி வற்புறுத்தினார். தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் இருக்கும் அதிதீவிர சக்திகளின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டியேற்படும் என்பதால் அமிர்தலிங்கம் சிறிது அஞ்சினார்.**

பொதுநலவாய மாநாடு சம்பிரதாய பூர்வமாகப் புதுடில்லியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட பின்னர் மாநாட்டில் கலந்துகொள்ள வருகை தந்திருந்த தலைவர்கள் கோவாவுக்கு ஓய்வெடுக்கச் சென்றார்கள். பார்த்தசாரதியும் கோவாவுக்குச் சென்று ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். சர்வகட்சி மாநாட்டுக்கு முன்னதாகவே இரு தரப்பும் இணங்கிக்கொண்ட சில விடயங்களைச் சிபார்சு செய்ய ஜெயுவர்த்தன இணங்கினார். திருமதி இந்திரா காந்தியோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்காகப் புதுடில்லியில் தங்கியிருப்பதற்கு ஜெயவர்த்தன இணக்கம் தெரிவித்தார்.

பொதுநலவாய உச்சி மாநாடு 1983 நவம்பர் மாதம் 29ஆம் திகதி முடிவடைந்தது. பார்த்தசாரதி ஜெயவர்த்தனவை 1983 நவம்பர் மாதம் முப்பதாம்

(அரசியல் தொடர்)

திகதி சந்தித்துப் பேசினார். சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்குமாறு ஜெயவர்த்தனவிடம் பார்த்தசாரதி வலியுறுத்தினார். எவ்வித முன் நிபந்தனைகளுமின்றி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டுமென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வலியுறுத்தியிருப்பதையும் பார்த்தசாரதி சுட்டிக் காட்டினார். இது குறித்து சர்வகட்சி மாநாட்டில் ஆராயலாமென்று ஜெயவர்த்தன தெரிவித்தார். பின்னர் திருமதி இந்திரா காந்தியை ஜெயவர்த்தன சந்தித்துப் பேசியபோது, தமிழர் கூட்டணித் தலைவர்களோடு எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்தக் கூடாதென அமைச்சரவை தீர்மானித்திருப்பதாக ஜெயவர்த்தன தெரிவித்தார். ஆனால் கூட்டணித் தலைவர்களைச் சர்வகட்சி மாநாட்டுக்கு அழைக்குமாறு இந்திரா காந்தி வற்புறுத்தினார்.

உத்தேச பேச்சுக்கள் தொடர்பான நகலறிக்கையை வெளிவிவகார அமைச்சர் ஹமீத் தயாரித்திருந்தார். ஜனாதிபதி ஜெயவர்த்தன புதுடில்லியிலிருந்து கொழும்பு திரும்பியதும் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. தமிழர்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்படும் பட்சத்தில் தனிநாட்டுக் கோரிக்கையைத் தமிழர் விடுதலைக் கூட்டணி கைவிட்டுவிடுமென்று அறிவித்த

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

உறுதிமொழியை அந்த அறிக்கையில் உள்ளடக்க வேண்டாமென்று பார்த்தசாரதி ஹமீதுக்கு அறிவுறுத்தியிருந்தார். அதற்கிணங்க இந்த உறுதிமொழி அந்த நகலறிக்கையில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் இந்த உறுதிமொழி நகலறிக்கையில் உள்ளடக்கப்பட்டால் தமிழீழக் குழுக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாதென்று அழுத்தங்களைப் பிரயோகிக்கலாமென்று பார்த்தசாரதி பயந்தார். ஜெயவர்த்தன கொழும்பு திரும்பியதும் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், இரா.சம்பந்தன் ஆகியோர் இந்திரா காந்தியைச் சந்தித்துப் பேசினர். சந்திப்பின்போது சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை இந்திரா காந்தி வற்புறுத்தினார். தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் இருக்கும் அதிதீவிர சக்திகளின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டியேற்படும் என்பதால் அமிர்தலிங்கம் சிறிது அஞ்சினார். மாவை சேனாதிராஜா, வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன் போன்ற இளைஞர்கள் இலங்கை அரசோடு பேச்சுவார்த்தை நடத்துவதைத் தீவிரமாக எதிர்த்து வந்தனர். தனிநாட்டுக் கோரிக்கை கைவிடப்படுவதை இந்தத் தீவிரவாத இளைஞர்கள் விரும்பவில்லை.

இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வில் இந்தியா மத்தியஸ்தம் வகிக்க முன்வந்திருப்பதால் நிலைமைகளில் பெரிதும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் இந்தியா தலையிடுவதால் ஒப்பந்தமொன்று ஏற்படும் பட்சத்தில் சிங்களத் தலைமைகளால் ஏமாற்ற முடியாதென்றும் தீவிரவாதத் தமிழ் இளைஞர்களுக்கு அமிர்தலிங்கம் எடுத்துக் கூறி நம்பிக்கையூட்டப் பகீரத முயற்சிகள் மேற்கொண்டனர். தனிநாட்டுக் கோரிக்கைக்கு மாற்றீடாக நியாயமான தீர்வொன்றினைத் தேட வேண்டுமென்றும் அவ்வாறான தீர்வைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இதுவே இந்தியாவில் நிலைப்பாடென்றும் தீவிரவாதத் தமிழ் இளைஞர்களிடம் எடுத்து விளக்கினார் அமிர்தலிங்கம்.

இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா மத்தியஸ்தம் வகிக்க முன்வந்திருப்பதால் ஏற்பட்டிருக்கக் கூடிய புதிய சூழ்நிலை குறித்து, தனக்கே உரிய முறையில் கூட்டணித் தலைவர்களில் ஒருவரான சிவசிதம்பரம் எடுத்து விளக்கினார். புதுடில்லியிலுள்ள தாஜ் ஹோட்டலில் 1983 டிசம்பர் மூன்றாம் திகதி "இலங்கைத் தமிழர்களுடனான ஒருமைப்பாடு" என்ற தலைப்பில் நடைபெற்ற மாநாட்டில் பேசும்போது சிவசிதம்பரம் கீழ்க்கண்டவாறு கூறினார். "இலங்கையிலுள்ள டாக்டர்களைப் பயன்படுத்தி முயற்சி செய்து பார்த்தோம். ஆனால் அவர்களால் சிகிச்சையளிக்க முடியவில்லை. இப்போது நோயாளி இந்தியாவுக்கு வந்துள்ளார்.

(தொடர்ந்து வரும்....)




வணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!!

மட்டக்களப்பில படுகொலைகளெண்டது தொடர் கதையாகப் போயுள்ளது. பழைய புளொட்காரர் சுடப்பட்டிருக்கினம். புலிகள் சுடப்பட்டிருக்கினம். ஈ.பி.டி.பி.யின்ர ஆதரவாளர் சுடப்பட்டிருக்கிறார் எண்டு மாறி மாறிக் கொலைகளாகவே இருக்குது. அரசாங்கத்தின்ர கட்டுப்பாட்டு பகுதிக்குள்ள புலியைச் சுட்டால் அதுக்கு ஆமி பொறுப்பெடுக்க வேணுமெண்டினம். அப்பிடியெண்டால் அரசின்ர கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளயே ஏனையவை மீதும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடக்குதே. இதுக்கு யார் பொறுப்பு? அதுகள் மட்டும் இனந் தெரியாதவையள்; புலியள் சுடுபட்டா மட்டும் இராணுவம் எண்ட கணக்கில நடக்குது. இது நல்லதுக்கில்லை எண்டதை மட்டுந்தான் சொல்லிக்கொள்ளலாம்.

***சின் :-*** *மட்டக்களப்பு மாங்கேணி கிரிமிச்சை எனுமிடத்தில அதுவும் புலிகளின்ர கட்டுப்பாட்டுப் பகுதியில புலிகள் மீது துப்பாக்கிச் சூடு நடந்திருக்கே. உதை ஆர் செய்திருப்பினம்?*

**மன் :-** நல்ல கேள்வி. சபாஸ். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில நடந்தால் இராணுவம் பொறுப்பெண்டால் இதுக்குப் புலிகளெல்லோ பொறுப்பெடுக்க வேணும்! அதையும் இராணுவத்தின்ர தலையில போடவெல்லோ பார்க்கினம். ஒண்டை மட்டுந்தான் சொல்லுவன். மட்டக்களப்பில புலிகளை ஒவ்வொண்டாக் களையெடுக்கிற வேலை இராணுவத்தின்ர பெயரில ஜாம் ஜாமெண்டு நடக்குது, அவ்வளவு தான். இப்ப பானுவும், சேமணை, - 'சொறி' செம் மணனும் வாய் திறக்கினமில்லை. இது உப்பி டியே தொடர்ந்து கிழக்கு முழுதும் வடக்கின்ர பிடிக்குள்ள போனாப் பிறகுதான் இந்த மாதிரியான கொலைகள் தணியும். பொறுத்திருந்து பாரும்.

***சின் :-*** *அப்பிடியெண்டால் கருணாவோடை உந்தப் பிரச்சினை தீரயில்லையெண்டிறியளோ. அப்ப இனி மட்டக்களப்பை கொலை விழும் பூமியெண்டு பிரகடனப்படுத்த வேண்டியதுதான். ......போன நாலாந் திகதி நோர்வேத் தூதுவரைச் சந்திச்சுப் போட்டு சு.பா. செய்தியாளர்களிட்டை ஒண்டும் பேசாம மௌனமா இருந்திருக்கிறாரே ஏன்?*

**மன் :-** மௌனம் சம்மதத்துக்கு அறிகுறியெண்டுவினம். அது சுப காரியங்களுக்கு. சு.பா. மௌனம் எதுக்கெண்டது தெரியேல்லை. ஆனால் ஒண்டு மட்டும் தெளிவாகத் தெரியுது. இதுக்கு முந்தின தடவை உப்பிடித்தான் ஒரு சந்திப்புக்குப் பிறகு மீடியாக்காரரிட்டை முழங்கினவர், தாங்கள் பொறுமையின்ர எல்லையில இருக்கினமெண்டும் அரசாங்கம் யுத்தமொண்டை வலிந்து இழுக்குது எண்டும்.

அப்ப அப்பிடிச் சொல்லிப்போட்டு இப்பவும் அதையே சொல்ல முடியாதெண்டு நினைச்சிருப்பார். அல்லது மௌனமாக இருந்தால் உந்த மீடியாக்காரர் அதை எப்பிடி எடுத்துக்கொள்ளுவினம் எண்டு டெஸ்ட் பண்ணவும் அப்பிடி இருந்திருப்பார். அவர் கடைசியில பி.பி.சி.க்குப் பேட்டி குடுக்கேக்க "உங்களுக்கும் அரசாங்கத்துக்கும் பொதுக் கட்டமைப்பு தொடர்பில் குறிப்பிடும்படியாக எந்த விசயத்தில் முரண்பாடு உள்ளது" எண்டு செய்தியாளர் கேட்டதுக்கு,

"குறிப்பிடும்படியா ஒண்டுமில்லை எண்டும் அரசு சரியான திட்டத்தை முன்வைக்கவில்லை எண்டும் மழுப்பினாரே, ஒரு மழுப்பு! சூப்பரோ சூப்பர். அது ஒண்டு போதும் புலிகள் சமரசத்துக்கான தீர்மானங்களோடை எந்தப் பேச்சுவார்த்தைகளையும் நடத்திறயில்லை எண்டதுக்கு. பிறகு இவர் பேசி என்ன? பேசாம விட்டு என்ன?

***சின் :-*** *ஆக, பேச ஒண்டுமில்லையெண்ட மௌனந்தான் அது எண்டிறியள். சே விஷயத்தை உப்பிடி உப்புச் சப்பில்லாம உடைச்சுப் போட்டியள்..... படையினர் பொது மக்களுக்கு எதிரான தாக்குதல்களில ஈடுபட்டு வருவது கண்டிக்கத் தக்கது எண்டு நோர்வேத் தரப்பு சொல்லி இருக்குதாமே.......*

**மன் :-** படையினர் அப்பிடி நடந்து கொண்டால் அது கண்டிக்க வேண்டியதுதான். அப்ப மூண்டாந் தரப்பு, இனந்தெரியாதவை எண்ட பேரில புலிகள் செய்யிறத ஏன் இவை கண்டிக்கினமில்லை. இவையும் சோறுதானே திங்கினம்! வேறு எதையுமில்லையே. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவையும் புலிகள் தாக்கிச்சினம். ஏன் அதைக் கண்டிக்கயில்லை. ஆக இவையின்ர ஏலாத்தன்மையை மூடி மறைக்க இப்பிடி எதையெண்டாலும் சொல்லிக்கொண்டுதான் இருப்பினம்.

***சின் :-*** *அப்ப இவை ஏ ரூ சட் வரை எல்லாத்தையும் இழந்துதான் இங்க நிண்டு விலாசங் காட்டினமாக்கும்.... திருமலையில ஜே.வி.பி. குடியேற்றத்திட்டம் செய்ய எடுத்த முயற்சி முழுமூச்சில தடுக்கப்பட்டிருக்கே.*

**மன் :-** அது தடுக்கப்பட வேண்டியதுதான். இதற்கு வேறு எந்தக் காரணத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது மட்டுமில்லை. அம்பாறையிலையும் சில குடியேற்றத் திட்டங்களைச் செய்திருக்கிறதாகவும் அறிகிறன். அவற்றிலும் நீண்டகாலத் திட்டம் இருக்குது. மொத்தத்தில இவ்வாறான குடியேற்றங்கள் தடுக்கப்பட வேண்டியதுதான். இந்த விவகாரத்தில் திருமலை மக்களின்ர அதிருப்தியும் எதிர்ப்பும் வரவேற்க வேண்டியது. இதில ஒற்றுமை பெரும் பலம் எண்டது திரும்பவும் நிரூபிக்கப்பட்டிருக்கு.

***சின் :-*** *எண்டாலும் அண்ண கத்தியால வெட்டின மாதிரி இப்பிடிப் பேசியிருக்கக் கூடாது. யாழ்ப்பாணத்தில ஆமியின்ர வாகனத்தில சிறுமி ஒருத்தி இறந்தாரே! அதப் பற்றி என்ன நினைக்கிறீங்கள்?*

**மன் :-** வாகன விபத்தில அந்த மாணவி இறந்தது கவலைதான். அந்தப் பிள்ளையின்ர பெற்றோர் பாவம்! தங்கட பிள்ளையின்ர சாவை அரசியலாக்காதீயுங்கோ எண்டு எவ்வளவோ கெஞ்சியும் யாழ்ப்பாண எம்.பி. ஒருவர் விடாப்பிடியா நிண்டவராம். "இதுதான் சந்தர்ப்பம், ஆமிக்கு எதிராக வன்முறை செய்யிறதுக்கு" எண்டு சனத்தைத் தூண்டி விட்டாராம்.

அந்தச் சிறுமி செத்த அதே வாரத்தில வாகன விபத்துகளில மட்டும் 21 பேர் இறந்திருக்கினம். மற்ற 20 பேருடைய இறப்புக்காகவும் யாரும் போய் இராணுவ காவலரணை உடைக்கயில்லை. தீ வைக்கயில்லை. போராட்டம் நடத்தயில்லை. சாகயில்லை. இங்க யாழ்ப்பாணத்திலதான் வன்முறை தலைவிரித் தாடுது. பிள்ளையின்ர பெற்றோருக்கு பேரிழப்புதான். அதை ஈடுசெய்ய ஏலாதுதான். ஆனால் அதை அரசியலாக்கி, வன்முறை யாக்கி, பதட்டமாக்கினதுதான் விரும்பத் தக்கதாக இல்லை. இந்த நிலை மாற வேணும். ஒரு விபத்தை அரசியலாக்கக் கூடாது. வேற என்ன நான் சொல்றது.

***சின் :-*** *சரியண்ண, நூறு வீதம் சரி. இது எத்தனை பேருக்குப் புரியப்போகுது.*

**மன்னவரும் சின்னவரும்**

# நம்மை ஆட்டி வைக்கும் சக்தி!

"**கோ**பம் என்றால் என்ன? அது உங்களுக்கு எப்போதெல்லாம் வரும்?"

இரண்டு நிமிடம் செலவிட்டு ஒரு சின்னப் பேப்பரில் இந்தக் கேள்விக்கான பதிலை எழுதிவிட்டு, பிறகு கட்டுரையைத் தொடர்ந்து படியுங்கள்.

இதே கேள்வியை நான் Life Programme அளிக்கப் போகும் இடங்களில் கேட்பேன். அப்போது வந்த பதில்கள் சிலவற்றை இப்போது கொடுக்கிறேன்.

"குழந்தைகள் என் சொல் பேச்சைக் கேட்காவிட்டால் எனக்குக் கோபம் வந்துவிடும்."

"நாலு பேர் எதிரில் யாராவது என்னைத் திட்டிவிட்டால் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிடும்."

"என்னுடைய குடும்பத்தினரை யாராவது குறைத்துப் பேசிவிட்டால் கோபம் வரும்"

"கூட வேலை செய்பவர்கள், சொல்கிற வேலையைப் புரிந்துகொள்ளாமல் சொதப்பும்போது கோபம் வரும்"

இந்தப் பட்டியலுக்கு எல்லையே கிடையாது என்பதால் இதோடு இதை நிறுத்திக்கொண்டு, கோபம் என்றால் என்ன என்பதை இப்போது பார்ப்போம்.

நம்மை நாமே தாழ்த்திக்கொண்டு சிந்திக்கும்போது நம்மிடமிருந்து வெளிப்படும் எதிர்வினை - அதாவது Reaction தான் கோபம்!


ஒருவன் நம்மைப் பார்த்து 'கழுதை' என்று திட்டும்போது நாம் 'குரங்கு' என்று பதிலுக்குத் திட்டினால் அந்தச் செயல்தான் Reaction.

நாம் ரியாக்ட் செய்யும்போது நம்மை ஆட்டிவைப்பது நமக்கு வெளியே இருக்கும் சக்தி. அதனாலேயே ரியாக்ஷன் என்ற வார்த்தையை இப்போது பெரிய கம்பெனிகளில் பயன்படுத்துவதில்லை. இப்போது இவர்கள் அதிகமாக உபயோகப்படுத்தும் வார்த்தை - Pro Action.

இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் இடையே அப்படி என்ன வித்தியாசம்?

இதை விளக்க வேண்டுமென்றால் ஒரு சின்னக் கதை சொல்ல வேண்டும். ஜென் புத்திசத்தில் உள்ள கதை.....

சீனப் பேரரசின் சமுராய் (தளபதி) அவன். போர் ஒன்றிலே பெரும் வெற்றி பெற்றுவிட்டு, அவன் தன் படை பரிவாரங்களோடு நாடு திரும்பிக்கொண்டிருக்கிறான். வழியிலே ஒரு காடு. காட்டிலே ஒரு துறவி தவம் செய்துகொண்டிருக்கிறார். இதைப் பார்த்த சமுராய், தன் பரிவாரங்களோடு அந்தத் துறவியின் முன் சென்று, மிகவும் பணிவாக "சுவாமி!



சொர்க்கத்துக்குச் செல்லும் வழி எது? நரகத்துக்குச் செல்லும் வழி எது?" என்று கேட்கிறான்.

கண்ணை மூடித் தவம் செய்துகொண்டிருந்த துறவி கண்ணைத் திறக்கவில்லை. இந்த முறை சமுராய் தனது கேள்வியைக் கொஞ்சம் சத்தமாகக் கேட்கிறான். துறவி இப்போதும் கண்ணைத் திறக்கவில்லை. சமுராய் காடே அதிரும்படி அந்தக் கேள்வியைச் சத்தமாக மூன்றாவது முறையாகக் கேட்கிறான்.

கண்விழித்த துறவி, "முட்டாளே, உனக்கு அறிவில்லையா? ஏன் என் தவத்தைக் கலைத்தாய்?" என்று கரகரப்பான குரலில் கேட்க, சமுராய்க்குக் கோபம் வெடித்து விடுகிறது.

துறவியை வெட்டுவதற்கு உறையிலிருந்து அவன் தன் உடைவாளை உருவுகிறான். அப்போது துறவி சிரித்த முகத்துடன், "நீ கேட்ட நரகத்துக்கான வழி இதுதான்" என்கிறார். சமுராய்க்கு அறிவு வேலை செய்ய ஆரம்பிக்கிறது. உண்மை கண் விழிக்கிறது. உடனே கோபம் தணிகிறது.

"துறவி நம்மை 'முட்டாள்' என்று சொன்னது திட்டுவதற்காக இல்லை. ஒரு உண்மையை உணர்த்துவதற்காக" என்று புரிகிறது. சமுராய் உடைவாளை உறைக்குள் போடுகிறான். அப்போது துறவி சொன்னார்: "இதுதான் சொர்க்கத்துக்கான வழி!"

சமுராயை துறவி, "முட்டாளே! ஏன் தவத்தைக் கலைத்தாய்?" என்று திட்டியபோது, 'என் படைவீரர்களுக்கு எதிரில் துறவி திட்டிவிட்டாரே....துறவியின் தவத்தைக் கலைக்கும் அளவுக்கு நாம் அறிவில்லாமல் இருந்துவிட்டோமே. நாம் சிறுமைப் பட்டுவிட்டோமே. நம் மரியாதை போய்விட்டதே. இனி இவர்கள் நம்மை எப்படி மதிப்பார்கள்?' என்று தன்னைத் தானே நொந்துகொண்டும் தாழ்த்திக்கொண்டும் சமுராய் சோகமாக இருந்த தருணத்தில், சிந்திக்காமல் உடைவாளை உருவியதற்குப் பெயர்தான் ரியாக்ஷன்.

'துறவி நம்மை முட்டாள் என்று சொன்னது, அறிவில்லாதவன் என்று திட்டுவதற்காக இல்லை. நாம் கேட்ட கேள்விக்கான விடையைக் 'குறிப்பால்' உணர்த்துவதற்காக துறவி குறிப்பால் சொன்ன பதிலை நான் புரிந்துகொண்டேன். அதைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு மதிநுட்பம் எனக்கு இருக்கிறது' என்று சிந்தித்துத் தெரிந்து, தெளிந்து உடைவாளை அவன் உறைக்குள் போட்டதற்குப் பெயர் Pro Action.

மற்றவர் மீது நாம் கோபப்படும்போது, நாம் நிதானம் இழக்கிறோம். இரத்தக் கொதிப்பு அதிகமாகிறது. கை, கால் உதறுகிறது. ஆக எதிரி செய்த முதல் கட்டத் தவறை ஜீரணித்துக்கொள்ள முடியாமல் நமக்கு நாமே கொடுத்துக்கொள்ளும் தண்டனைதான் கோபம்!

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி 112

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | |
| 5 | 6 | | | 7 |
| 8 | | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | |
| | 16 | 17 | 18 | |
| 19 | | 20 | 21 | 22 |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 110க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம்.ஏ.எம். ரிபாஸ், ஹிஜ்ரா மாவத்தை, கதுருவெல, பொலநறுவை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. மீரா முகைதீன் ஹாலீத், 21, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர் - 03.
2. திருமதி. பாலகிருஷ்ணன், அளுத்மாவத்தை வீதி, கொழும்பு 15.
3. பி.ஆர்.ஜே. பெர்னாண்டோ, மருதானை வீதி, ஹெந்தலை, வத்தளை.
4. றெ.பி. மரியடினேசன், 'வசந்தம்' ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
5. ரி. தவேஸ்வரன், புகையிரத நிலைய வீதி, மல்லாகம், யாழ்ப்பாணம்.
6. சலுஜா முருகையா, கலையகம், பெரிய கல்லாறு 2, கல்லாறு.
7. கே.எம்.எஸ். ஆப்தீன், நகர சபை விடுதி, புத்தளம்.
8. த. சங்கீதா, 364, மத்திய வீதி, திருகோணமலை.
9. எஸ். இராகுலன், பாரதி ஒழுங்கை, சங்கானை.
10. க. சுதாகர், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## இடமிருந்து வலம்

1. ஊர்காவற்றுறை பிரதேசத்தை இப்படியும் அழைப்பர்.
5. வித்து.
9. சாவியுடன் தொடர்புபட்டது (திரும்பியுள்ளது).
12. பிக்காசோ 'இந்த' துறையில் புகழ் பெற்றவர் (குழம்பியுள்ளது).
16. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு. (திரும்பியுள்ளது).
19. தமிழ் மாதமொன்று.
20. ஆண்களின் பருவமொன்று (திரும்பியுள்ளது).

## குறுக்கெழுத்துப் போட்டி 110 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| மா (1) | கை (2) | ஆ (3) | | |
| ட் (4) | தி (5) | ம் (6) | ட (7) | |
| டா (8) | | வி (9) | தி (10) | ர (11) |
| னி (12) | உ (13) | | ம் (14) | த (15) |
| | ல (16) | டை (17) | | ம் (18) |
| லா (19) | கை (20) | ஞ (21) | | |

## மேலிருந்து கீழ்

1. காப்பியம் (குழம்பியுள்ளது).
2. உபத்திரவம்.
7. குவலயம் என்றும் சொல்லலாம் (தலைகீழ்).
9. சுதந்திரம் (குழம்பியுள்ளது).
10. இது விடுவது சிறுவர்களுக்குப் பிடித்தமான விளையாட்டு (குழம்பியுள்ளது).
13. பிரணவம் என்னும் புனித மந்திரம்.

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 15.03.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-112
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.


ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

RATHAA TEXTILE
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

86

பெயர்:......................
முகவரி:......................
......................
தொழில்: ......................
கையொப்பம்: ..............

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 15-03-2005

அனுப்ப வேண்டிய முகவரி-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சேலை?
கைதடி வாசகிக்கு அதிர்ஷ்டம்!

84

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

துரையப்பா சிவபாக்கியம்
பாடசாலை ஒழுங்கை, நாவற்குழி, கைதடி.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.

# பொய் பெண்டேஜ்....

பலாமரத்தடிச் சந்தியில் வந்து நிற்கின்ற ஏதாவதொரு பஸ்ஸில் எந்நாளும் அவன் ஏறுவான்.

"அநே.... ரத்தரங் மஹத்தயோ..."எனச் சிங்களத்தில் தொடங்குவான். அவனுக்குப் பதினான்கு அல்லது பதினைந்து வயதுதான் இருக்கும். ஒழுங்காக வாரிவிடப்படாத தலை. கிழிந்த மேற்சட்டை. அழுக்கன்! அவனுடைய வலது காலில் ஒரு பெண்டேஜ்.

'அநே...ரத்தரங் மஹத்தயோ....'வுக்குப் பிறகு வருகிற அவனது சாராம்சம் இதுதான்:

'என்ட ஊர் குருணாகல...ஒரு பெக்டரி யில வேலை செஞ்சேன்...இரும்புக் கம்பி ஒண்ணு கால்ல விழுந்து...எலும்பு முறிஞ் சிட்டுது....நடக்க முடியல்ல...அதனால என்னால வேலை செய்ய முடியல்ல...இந்த ஏழைக்கு ஏதாவது உதவி பண்ணுங்க...'

"பாவமப்பா...எவ்வளவு சரி குடுங்க..." என்றாள் என் மனைவி.

"சும்மா இருக்கிறீங்களா கொஞ்சம்...." என்றேன் நான் சற்றே சினந்து.

"பாவம்டா....கால்ல பெரிய பெண்டேஜ் போட்டிருக்கான்" - என்றாள்.

"அது பொய் பெண்டேஜ்" என்றேன், நான்.

"பாவம்டா....."

"அது நல்ல பாவந்தான்....அவன் இப்ப இறங்குற நேரம் பாருங்க...அப்ப தெரியும்...சுசந்திகாட தம்பி மாதிரி ஓடுவான்...."

"அநே...ரத்தரங் மஹத்தயோ...."

"குடுங்கப்பா...!!"

"ஆளை விடுங்கப்பா..."மனைவியை முறைத்தேன்.

"அநே...ரத்தரங் மஹத்தயோ....."

இடது கையால் இடித்தாள்.

நான் இரும்பாகிக் கிடந்தேன்.

"வாப்பாவ இவன் ரத்தரங் சொல்றான் நானா..." என்றாள் மகள் நஸ்லியா - ஐந்து வயது.

"ரத்தரங்னா என்ன உம்மா..."என்று கேட்டான் மகன் ரியாட் - ஏழு வயது.

"ரத்தரங்னா தங்கம் மகன்...ஓங்க



-கிண்ணியா அமீர்அலி.

வாப்பா பித்தளை..." என்றாள் மனைவி.

என் விழிகளில் ஈயம் உருகி வழியத் தொடங்கியது.

"அநே....ரத்தரங் மஹத்தயோ...."

முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டேன்.

"அடே...கஞ்சப் பயலே...பயணமா போறே...போ....போ..." என்பதைப் போல இருந்தது அவனது பார்வை. நிச்சயமாக மனசுக்குள் என்னைத் திட்டி இருப்பான். ஒரு காலை விந்தி, விந்தி....அடுத்த 'சீட்' பக்கம் போய் 'அநே....ரத்தரங் மஹத்தயோ...' என்றான்.

"ஆறேழு வருஷமா பஸ்ல ஏறுகிறான். அடுத்த பஸ் வந்து நின்றவுடன் ஓடிப்போய் ஏறுகிறான். இதுபொய் பெண்டேஜ்" என்றேன், அந்தப் பிச்சைக்காரப் பையன் மீது கடுகளவேனும் அனுதாபம் கொள்ளாமல்.

"பொய்யோ, மெய்யோ. ஒரு 'ஒரு ரூபாய்' சரி குடுக்க வேண்டியதுதானே..." என்றாள் மனைவி.

"எனக்குப் பொய் பிடிக்காது..."

"ஆமா...இவர் பெரிய அரிச்சந்திரன் பரம்பரை."

"ஓங்களுக்குத் தெரியாதுடா..... இதுகள் எல்லாம் பொய் சொல்லிப் பிச்சை எடுக்கிற கூட்டம். கொழும்பு ரயில்வே ஸ்டேஷனுக்கு முன்னால...ஒரு உம்மா வருவா...பாமசியில மருந்து வாங்கிட்டுப் போக வந்தேன் வாப்பா. ஒரு அம்பது ரூவாக் குறையுது. மட்டக் குளியில ஊடு...தூரம். அவசரமாப் போவணும். ஒரு அம்பது ரூவா...எனக்குத், தாங்க வாப்பா. இப்படியே பத்து வருஷமா அலையுது மனுஷி....இன்னும் மட்டக் குளிக்குப் போய்ச் சேர்ந்தபாடில்லை. ஒரு நாளைக்கு அந்த மனுஷியக் காட்டுறன்... டவுண் ஹோல்ப் பக்கம் ஒரு பிள்ளை பஸ்ல ஏறும். தம்பிக்குக் கொப்பி வாங்கணும்னு ஏழெட்டு வருஷமா வந்து...இன்னும் கொப்பி வாங்கி முடியல்ல..."என்றேன்.

"பாவம்...அதுகளும் வேற என்னதான் பண்ணுவாங்கள்....?" என்றாள் மனைவி.

"அதுக்குன்னு இப்படி ஏமாத்தணுமா?"

"மனசிருந்தாக் குடுங்க...இல்லேன்னா விடுங்க.."

"சரி, இப்ப ஆளை விடுங்க...அந்தா பாருங்க அந்தப் பொய் பெண்டேஜ் ஓடுற ஓட்டத்த" எனக் காட்டினேன். அருகில் வந்து நின்ற பஸ்ஸில் ஓடிப்போய் ஏறினான் அவன்.

"அநே ரத்தரங் மஹத்தயோ...."

"அஞ்சு சதமீயாத கஞ்சப் பயல்..."என்று செல்லமாய் என் கைகளைக் கிள்ளி நடந்தாள், என் மனைவி.

"யாரு? நான்? கஞ்சன்? அப்ப இதுகள்?"..... குழந்தைகளைக் காட்டினேன்.

"சும்மா வாடா...படுவா..."என்றாள்.

நடந்தோம்.

மாமியைப் பார்க்க மருமகளும், உம்மாவைப் பார்க்க நானும் வந்த பயணம் இது.

வாப்பும்மாவைப் பார்க்கப் போகிற சந்தோஷத்தில் கைகோர்த்து வந்தனர் - ரியாட்டும், நஸ்லியாவும்.

இது பொரளைச்சந்தி.

இனி நுகேகொட போய் இறங்கி.... மிரிஹான பஸ் எடுக்க வேண்டும்.

என் தாய்!
மடியிலெனை வைத்து
மகிழ்வூட்டி வாழ்வில்
விடிவைக் கொணர்ந்த
விளக்கு! - அவள் பட்ட துயரங்கள் அளவில்லையே! ஆனாலும் அவள் வீணாய் அழவில்லையே. என்னை ஆளாக்க நாளாந்தம் மெழுகாகினாள்!

எனை வாழ்வில் கரைசேர்க்கும் படகாகினாள்!

அந்த ஞாயிற்றுக்கிழமையை உம்மா வீட்டில் கழித்தோம்!

தாய், தந்தையைத் தேடிச்சென்று அவர்களின் சுகம் விசாரிப்பதில் இருக்கிற சுகம் வேறு எதிலே இருக்கிறது?

அன்றைய இரவு நாங்கள் வீடு வந்து சேர மாபோல பஸ் ஏறியபோது ஒன்பது மணி.

இறங்கியபோது...மனைவி கீழே விழுந்தாள்!

ஓடிப்போய் அவளைத் தூக்கி விடுவதற்குள் பஸ் போய்விட்டது.

"என்ட அல்லாஹ்...வலிக்குது...நடக்க ஏலா....." என்றழுதாள்.

மெதுவாக முனங்கி...முனங்கி எழுந்தாள்....

"ரொம்ப வலிக்குதா...சரி, வாங்க....! கோஜா நானா வீட்டுக்குப் போய் உளுக்குப் பார்ப்போம்..."

அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது. வலது காலில்தான் பலமாக அடிபட்டிருந்தது.

கீழ்பாதம் வீங்கிப் போய்க் கிடந்தது. கைகளால் நன்றாகத் தேய்த்து விட்டேன். தோளணைத்து நடந்தேன் விழி கலங்கி. ஆட்டோ ஒன்றிலேறி வீடு போய்ச் சேர்ந்தோம். கோஜா நானாவின் மனைவி உளுக்கு எடுத்து விட்டாள். ஒரு வாரமாக என் மனைவி பெண்டேஜ் காலோடு விந்தி, விந்தி நடந்தாள்.

அன்று பலாமரத்தடிச் சந்தியில் வைத்து - பஸ்ஸில் ஏறிய அந்த ஏழைச் சிறுவனின் வாடிய முகம் ஞாபகம் வந்தது.

"அநே...ரத்தரங் மஹத்தயோ..."

"சே...நானும் ஒரு மனுஷனா...?"

"அவனுக்கு ஒரு இரண்டு ரூபாய் போட்டிருக்கலாம்...அவனுடைய காலில் கட்டியிருந்தது பொய் பெண்டேஜாகவே இருக்கலாம்....ஆனால் - என் மனைவியின் காலில் கட்டப்பட்டிருக்கும் பெண்டேஜின் உண்மையான விலை என்ன தெரியுமா...?

இருநூறு ரூபாய்...!

தர்மம் கால் காக்கும்.

# சந்தேகம் பறந்துவிட்டது

வழமைக்கு மாறாக காக்கன் வெளி கிராமம் கடும் குளிராகவும் மப்பு மந்தாரமாகவும் மாறியது. சிறுகச் சிறுக ஆரம்பித்த காற்றும் மழையும் வெகு வேகமாக மாறி, பேரிடியும் பெரு மழையுமாக பெய்யத் தொடங்கியது. இரக்கம் இல்லா இடும்பன் காலத்தைக் களங்கப்படுத்தி என்ன பயன்? இறைவனின் நியதிப்படி நடக்க வேண்டியவை எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. ஆடு, மாடுகள் செத்து மடிந்தன. கோழி, கொக்குகள் எல்லாம் வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தன. மரந்தடிகள் முறிந்து விழுந்து வீதிகள் எல்லாம் போக்குவரத்துக்குத் தடையாக இருந்தன. கிராம டிக்கள் சிரமதானப் பணியில்



-சஜானா ஷெரீப், சவுதி

ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இயற்கையின் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட காக்கன் வெளியில், காலங்காலமாக வாழ்ந்து வந்த 'கபுட்டா' என்னும் காகக் குடும்பமும் இந்தச் சூறாவளியினால் பெரிதும் பாதிக்கப்பட்டது. கபுட்டாவும் அதன் மனைவியான கபுட்டியும் இரு குஞ்சுகளுமாக தமது கூட்டில் கூடி மகிழ்ந்து கொஞ்சி விளையாடிக் கொண்டிருக்கும்போதுதான் இந்தக் கொடிவினை நடந்தது. கபுட்டாவின் கூடு இருந்த தென்னை மரமும் தலைதெறிக்க விழுந்து நொருங்கியதனால், அவர்களின் அந்த அழகிய அரண்மனையும் அப்படியே சுக்கு நூறாகிவிட்டது. இன்று யாருமற்ற அனாதைகளாக பட்டமரமாய், பாயிழந்த படகாய், பரிதவித்து, நாதியற்று நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

"உண்ண உணவின்றி, உறங்க உறைவிடமுமின்றி எத்தனை நாட்களுக்குத்தான் இப்படி நடுத் தெருவில் நடமாடிக்கொண்டிருப்பது" - பெண் காகமான கபுட்டி சொன்னது. "நீங்கள் நமது குஞ்சுகளைப் பார்த்துக்கொண்டு சிறுகூடு ஒன்றையும் கட்டுங்கள். நான் அயலில் உள்ள காட்டுப் பகுதிக்குப் போய் ஏதாவது இரை தேடிக்கொண்டு வருகிறேன்" என்றது.

"ஆம்....சென்று வா" என வழி அனுப்பி வைத்தது கபுட்டா. அது தன் மனைவியான கபுட்டி வரும் வரைக்கும் தன் குஞ்சுகளைப் பத்திரமாகப் பார்த்துக்கொண்டு சிறு கூடு ஒன்றையும் கட்டி முடித்தது.

காட்டுக்கு இரை தேடிப் போன கபுட்டி, பல கண்காணாக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தது. பலவகையான பறவை இனங்களையும், மிருகங்களையும், பழ வர்க்கங்கள், தானியங்களையும் கண்டது. ஆசை அளவுக்கு மீறி, அதிகமான உணவுகளைத் தேடி மடி நிறையச் சுமந்தது. இதனால் அன்றிரவு வீடு செல்லவும் முடியாமல் போய்விட்டது. ஆனாலும் காட்டுப் பறவைகள் இன்னிசை பாடி, கபுட்டியை வரவேற்று, உபசரித்து, குசலமும் விசாரித்து, உறங்க உறைவிடமும் கொடுத்தன.

கபுட்டியைப் பிரிந்து வாழ முடியாத கபுட்டாவும் அதன் குஞ்சுகளும் கண் கலங்கி கரைந்து கொண்டிருந்தவேளை சுமக்க முடியாத சுமைகளுடன் மறுநாள் காலை கபுட்டி தன் இல்லறம் நோக்கி பறந்து வந்து தன் குடும்பத்தாருடன் குதூகலித்துக் கொண்டிருந்தது.

காட்டுப் பயணத்தின் பின் கபுட்டியின் நடத்தையில் பல மாற்றங்கள் தென்பட்டன. அடிக்கடி இறை வணக்கங்களில் ஈடுபடுவதுடன், காட்டுப் பறவைகளின் உபசரிப்புக்கள் மற்றும் அவைகளின் சுதந்திரப் போக்குகள் பற்றிப் புகழ்ந்து பேசவும் தொடங்கியது. அதுமட்டுமல்லாமல், தான் அடிக்கடி காட்டுக்குப் போய் இரைதேடி வர அனுமதிக்குமாறும் கபுட்டாவிடம் வேண்டி நின்றது.

கபுட்டியின் புதிய போக்கும் வேண்டுகோளும் ஏதோ ஒரு வகையில் கபுட்டாவைச் சந்தேகம் கொள்ளச் செய்தன. இருந்தும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு "சரி...சரி...நான் ஒரு முறை தனியாகக் காட்டுக்குச் சென்று இரை தேடிக்கொண்டு வருகிறேன். அதன் பின்னர் நீ போய் உணவு தேடிக்கொண்டு வா" என கபுட்டா கட்டளை பிறப்பித்தது கபுட்டியிடம்.

இருவரும் கருத்தொருமித்து கலந்தாலோசித்ததற்கேற்ப மறுநாள் காலை கபுட்டா காட்டுக்குச் சென்றது. கபுட்டி எதை எதையோவெல்லாம் எப்படிச் சொன்னதோ! அதற்கு எதிர்மாறாகவே எல்லாம் நடந்தது. காட்டுப் பறவைகள் கபுட்டாவை விரட்டி விரட்டிக் கொத்தின. கபுட்டா நினைத்தாற் போல உணவு தேட முடியவில்லை. அன்று நாள் முழுவதும் உணவின்றி பசியால் வாடியது. மறுநாளும் இதே கதிதான். ஊன் உறக்கமின்றி கவலையால் வாடிக்கொண்டிருந்த கபுட்டா, தன் வரவை எண்ணி எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் குஞ்சுகளிடம் வெறுங்கையோடு போக முடியாது. எப்படியாவது கொஞ்சம் உணவைத் தேடி எடுத்துச் செல்வோம் என எண்ணி, மூன்றாவது நாள் கடும் கஷ்டங்களுக்கு மத்தியில், மற்றப் பறவைகளின் கண்களுக்கு அகப்படாமல் ஒருவாறு கொஞ்ச உணவுகளைத் தேடி எடுத்துக் கொண்டு தன் இருப்பிடத்தைச் சென்றடைந்தது.

கபுட்டாவின் வரவுக்காக வழிமேல் விழி வைத்துப் பார்த்துக்கொண்டிருந்த கபுட்டியும் அதன் குஞ்சுகளும் கபுட்டாவை இன்முகத்துடன் வரவேற்றன. வந்ததும் வராததுமாக கபுட்டி மீது சீறிப் பாய்ந்தது கபுட்டா. "ஏன் என்னிடம் பொய் சொன்னாய்? சூறாவளியின் போது காலுடைந்து போன நான், உன்னைக் காப்பாற்ற மாட்டேன் என்றெண்ணி எனக்குத் துரோகம் செய்ய நினைத்து விட்டாயா? காலங்காலமா உன்னைக் காப்பாற்றியவன் நான்தானே! நல்லவர்கள் போல் நடிக்கும் நயவஞ்சகர்களை நீ நம்பிவிட்டாய்!" என வாய்க்கு வந்தவாறு திட்டித் தீர்த்தது.

தந்திரம், மந்திரங்கள் அறியாத கபுட்டியினால் என்னதான் சொல்ல முடியும்? மடைமையிலும் அறியாமையிலும் மூழ்கிக் கிடந்த கபுட்டிக்கு, கபுட்டாவிடம் உண்மை நிலையை எடுத்துக் கூறி சமாளிக்கும் தன்மை இல்லை. வழமைபோல் கபுட்டாவின் சொற்களைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் அழுகையினால் தனது மன வேதனையை குறைத்துக் கொண்டது.

அறியாமையின் அந்தகாரத்துள் மூழ்கி இருந்த கபுட்டிக்கு உண்மையாகவே தான் ஒரு நிரபராதி என்பது மட்டும்தான் தெரியும். தன் கபுட்டாவின் சந்தேகத்தை எப்படி தீர்த்து வைப்பது என்பது தெரியாது. எது எப்படி இருந்தாலும் கபுட்டியைக் கொலை செய்யும் அளவுக்கு கபுட்டாவுக்குக் கோபம் வந்தது. ஆனால் தன் குஞ்சுகள் தாயில்லாமல் அனாதைகளாகி விடுமே என்ற எண்ணத்தால் புத்தியுள்ள கபுட்டா பொறுமையைக் கையாண்டது.

நாட்கள் நகர நரக, கபுட்டி மீதுள்ள சந்தேகமும் கபுட்டாவின் நெஞ்சிலே வளரத் தொடங்கியது. கபுட்டி எங்கு சென்றாலும் அதன் மீது சந்தேகம். யாரோடு பேசினாலும் சந்தேகம்! ஏன் உண்ணுவதில், உறங்குவதில் எதற்கெடுத்தாலும் சந்தேகம்! தேனும் பாலுமாக இருந்த வாழ்வு நாயும் கழிச் சட்டியும் போல் மாறியது.

நாட்கள் நகர்ந்தன. குஞ்சுகளின் சிறகுகளும், சொண்டுகளும் வளரத் தொடங்கின. காகத்தின் குஞ்சுகள் கா....கா..... என்றன. ஒரு குஞ்சு மட்டும் கூ.....கூ...என்று கூவியது. குஞ்சுகளை அள்ளி அணைக்க கபுட்டாவும் கபுட்டியும் முயன்றன. ஆனால் கூ....கூ...என்று கூவிய குயிலின் குஞ்சு கூவியபடி பறந்தது. ஆம். கபுட்டாவின் சந்தேகமும் அதோடு சேர்ந்து பறந்துவிட்டது.

(யாவும் கற்பனை)

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

### பிற சமய நம்பிக்கைகளுக்கு மதிப்பு கொடுங்கள்

சகிப்புத்தன்மை என்ற மூலைக்கல்லின் மேல்தான் மனித உறவுகள் கட்டப்படுகின்றன. மத சகிப்புத்தன்மை இல்லாததினால் ஏற்படுகின்ற துன்பங்களையும், சச்சரவுகளையும் - மனிதன் தோன்றிய காலம் முதல் இன்றைய நவீன காலம் வரையில் - ஒருவர் கண்ணுறும்போது சகிப்புத் தன்மையற்ற நிலைதான் இதற்குக் காரணம் என்று தெரிய வருகின்றது. இது நிலையில்லாத ஒரு நடவடிக்கையும் கூட.

மத சகிப்புத்தன்மை என்பது ஒருவர் சொந்த எண்ணங்களை வெளிப்படுத்தக் கூடாது என்பதல்ல. அதனால் மற்றவர்கள் கடைப்பிடிக்கும் நம்பிக்கையையும், விசுவாசத்தையும் தாக்குவதோ அல்லது அவர்களது நம்பிக்கைகளைக் குறைத்து எடை போடுவதோ கூடாது இவை எல்லாம் இனக் கலவரம் போன்ற பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்லும் குறுகலான வழியாகவே கருதப்படுகிறது.

"ஓஷோவின் பொன் மொழிகள்" என்ற நூலிலிருந்து....

## குலத்தைக் கெடுத்தது கோடரிக் காம்பு! இனத்தை அழிக்கிறது நம்மவர் வீம்பு

"சிலரது சாவை ஆர்ப்பாட்டமாய்க் கொண்டாடவும், வேறு சிலரது சாவுக்கு அந்தரங்கமாய் மகிழ்ந்து ஆர்ப்பரிக்கவுமாக எங்கள் சனம் காட்டுமிராண்டிக் காலத்து உணர்வுகளை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது" என்று எரிச்சலோடு சொல்லியபடி வந்தாள் தேன்மொழி.

"வா.....வா...இரு" என்று வரவேற்ற தயாளன், "சாவுக்கு யாராவது சந்தோசப்படுவார்களா? என்ன விஷயம்" என்றும் கேட்டான்.



காய்கறிக் கூடையை உள்ளே கொண்டுபோய் வைத்துவிட்டு, திரும்பி வந்தாள் தேன்மொழி. கொடியிலிருந்து துவாயை உருவி முகத்திலும் கழுத்திலும் பூத்திருந்த வியர்வைத் துளிகளை ஒற்றியவாறே, "சந்தோஷப் படுறது மட்டுமில்லை, சில சாவுகளை எதிர்பார்த்து நாக்கைத் தொங்கப் போட்டபடி காவலிருக்கும் மிருகங்களாகவும் மாறிப் போனோம்....."என்று சொல்லிக் கதிரையில் அமர்ந்தாள்.

தயாளனுக்கு அவள் என்ன சொல்ல வருகிறாள் என்பது புரிந்தது. "விடுதலைக்குக் குறுக்கே உள்ள தடைகளை அகற்றாமல், எப்படி மீதமாயுள்ள பெரும்பாலான மக்களுக்கு

தருவது முழுடியல்யன்

சுதந்திரமான வாழ்வைப் பெற்றுக் கொடுப்பது?"

தேன்மொழி அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

"பெரும்பான்மை மக்களின் சுயநலத்துக்காக சிறுபான்மையாக உள்ளவர்களைக் கொலை செய்துவிடலாமா? நாங்கள் சுதந்திரம் என்று உணர்வதற்குச் சிலர் தடையாக இருக்கிறார்கள் என்று தோன்றினால் அவர்களைக் கொன்றுவிட வேண்டியதுதானா?"

"நாங்கள் என்றால் யாரோ ஒருசிலர் அல்ல. பெரும்பான்மைத் தமிழ் மக்கள், தங்கள் விடுதலையைக் குழப்பித் துரோகம் செய்பவர்களாகச் சிலரைப் பார்க்கிறார்கள். அவர்களைக் கொன்றுவிட்டால் தங்களுக்கு விடுதலை கிடைத்துவிடும் என்று நம்புகிறார்கள் அதிலென்ன தவறு?"

தேன்மொழி உணர்ச்சிவசப்பட்டாள். "இந்தத் தடை நீக்கம் என்கிறது, குறுக்கே கிடக்கும் கல்லைத் தூக்கி அப்பால் போடும் விஷயம் அல்ல; உயிர்க் கொலைகள்! நாகரீகமடைந்த மனித சமூகத்தில் ஒரு கொலைத் தண்டனையை எப்படித் தீர்மானிக்கிறார்கள்? எத்தனையோ சாட்சிகளை விசாரித்து, அப்போதும் உண்மையைத் தெளிவாக அறிய முடியாத பட்சத்தில் அதன் பலனை அத்தண்டனைக்குரியவருக்கு அளித்து அவரை விடுவித்து, அல்லாமல் தண்டனை அளித்த பிறகும் உச்ச நீதிமன்றம், ஜனாதிபதி மன்னிப்பு.... என்று எவ்வளவு கவனமாக இருக்கிறது, ஒரு கொலையைச் செய்வதற்கு, நாகரீக சமூகம்! இங்கே யாரைக் கேட்டுத் துரோகிகள் தீர்மானிக்கப்படுகிறார்கள்? யார் யார் தீர்மானிக்கிறார்கள்? பலம் வாய்ந்த குழுவினருக்குப் பிடிக்கவில்லையென்றால் பலம் குறைந்த குழுவினரைக் கொன்றுவிடலாமா?"

"என்ன சொல்கிறாய் நீ? தமிழ் மக்கள் எவ்வளவு பெருந்திரளாகப் பொங்குதமிழ் எழுச்சியைக் காட்டி, 'கொல்ல வேண்டியவர்களை எல்லாம் கொன்று தனி'நாட்டை எடுத்துத் தரும்படி அங்கீகாரமளித்திருக்கிறார்கள்...ஒரு எம்.பி.தவிர மற்ற எல்லோரையும் கொலைகளுக்கு ஆதரவானவர்களாகவே தெரிவு செய்திருக்கிறார்களே.... இது போதாதா அந்தக் கொலைகள் தமிழ் மக்களுக்காகச் செய்யப்படுபவைதான் என்று நிரூபிக்கதயாளன் தீவிர முகபாவத்துடனேயே கேட்டான்.

தேன்மொழி கோபத்தின் வசப்பட்டாள். 77இல் ஜே.ஆர். ஆறில் ஐந்து பங்கு எம்.பி.க்களை எடுத்திருந்தாரே....அப்போது ஏனைய கட்சிக்காரர்களையெல்லாம் கொன்று குவித்துவிட அவருக்கு நியாயம் வழங்கப்பட்டது என்கிறாயா?

"அதில்லை. மக்களின் பொதுக் கருத்தைப் பார். பத்திரிகைகளைப் பார். படித்த தமிழர்கள் எழுதுவதைப் பார்....ஏனைய தமிழர்கள் நிம்மதியாக வாழ வேண்டுமென்றால், மாற்றுச் செயற்பாடுகளில் உள்ள தமிழர்களையெல்லாம் பாம்பை அடிப்பது போல் அடித்துக் கொன்றுவிட வேண்டும் என்று தானே எழுகிறார்கள். அப்படிக் கொன்று தள்ளக்கூடிய வீரர்கள் சாகிறபோது தாங்க முடியாமல் துடித்துத் தானே போகிறார்கள்! இந்த உணர்வு ரீதியான எழுச்சியில் இணைந்துகொள்ளாமல் எதிர்ப்பவர்கள் நம் இனத்தின் துரோகிகள்தானே - அவர்களைக் கொல்வதில் என்ன தவறு?"

தேன்மொழி அவனைப் புழுவைப் பார்ப்பதுபோலப் பார்த்தபடி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு, அமைதியடைந்த குரலில், "காட்டுமிராண்டிகள் காலத்தில்தான் நான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்....ம்..." என்றாள். தொடர்ந்து, "திட்டமிட்டு அரங்கேற்றப்படுகிற வன்முறைகளின் கொந்தளிப்பான சூழலில் பொதுவான மனித அறம் அழிக்கப்பட்டுவிடுகிறது. கொலையையும் அழிவையும் நியாயப்படுத்தும் கற்பிதங்கள்தான் வெற்றி பெறுகின்றன...."என்று சொல்லிவிட்டுப் பெருமூச்செறிந்தாள்.

"தங்களுக்குத் தேவையான வீரர்கள் கொல்லப்படும்போதுதான் மக்கள் கொந்தளித்து எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். துரோகிகள் கொல்லப்படும்போது மௌனம்தான் நிலவுகிறது. யாரும் அலட்டிக்கொள்வதில்லை அவ்வளவுதான்" என்றான் தயாளன்.

தேன்மொழியின் குரல் மீண்டும் உயர்ந்தது. "விஷயம் புரிந்தவர்கள், வெளியாய்ப் பேச முடியாதவர்கள் ஆக்கப்பட்டு, அச்சம், அரைகுறை உணர்ச்சியாவேசத் திரட்டுகையினால் இப்படியொரு வெறிகொண்டதான சூழலின் தோற்றம் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. இழப்புகளைத் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டி அந்த அவலங்களின் இறுமாப்பில் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் இந்தக் கொலை ஆதரவுத் தோற்றம், உலகில் இதுவரை இல்லாத பிறபோக்கு எழுச்சிதான். சிங்களவனைப் பழிதீர்த்துக்கொள்ள எங்களவரில் எத்தனை, பேரையும் கொலைக்குக் கொடுக்கலாம் என்கிற மாதிரியான கடைகெட்ட சுயநலக் கும்பலாகி விட்டோம்...."

"மக்கள் எல்லோரையுமா பிழை சொல்கிறாய்?"

"எதுவும் செய்ய வகையற்றவர்களாகப் பலர் இருக்கலாம். ஆனால், நம் தேசியத்தின் பேரால் இன்று காட்டப்படுவது என்ன? எங்கள் தலைமை எப்படிப்பட்டது? எங்கள் தரத்துக்கேற்றதாகத்தானே தலைமையும் இருக்கும்....இதையெல்லாம் பார்க்கும்போது, நாங்கள் சரியில்லை என்பதுதான் வெளிக்கிறது. நாடோ காடோ, மேடோ பள்ளமோ அங்கு வாழும் மக்கள் எவ்வாறிருக்கிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் அந்த நாடும். நாடு நரகம் போல் உழல்கிறதென்றால், அங்குள்ள மக்கள் சரியில்லை என்றுதானே பொருள்?"

தேன்மொழி கோபத்துடன் எழுந்து உள்ளே போனாள்.

நாடாகொன்றோ காடாகொன்றோ
அவலாகொன்றோ மிசையாகொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!
(புறம் : 187)

---

திருடிக்கு - திருடன் என்பது போல, வாயாடிக்கு என்ன ஆண் பால்?

-விருகி, மண்டூர்.

பார்த்தீர்களா. இந்த மொழியே ஆண்கள் உருவாக்கி வைத்திருப்பதுதான். பெண் மொழியை உருவாக்க வேண்டும் என்று சொல்வதிலுள்ள நியாயம் புரிகிறதா! இது போல உயர்ந்தோன் - தாழ்ந்தோன் பாகுபாட்டோடும், படித்தவன் - படியாதவன், வசதி படைத்தவன் - வசதி இல்லாதவன் பாகுபாடுகளோடும் மொழியிலேயே மனிதர்களை அடிமைப்படுத்தும் கூறுகள் இருக்கின்றன. "வைத்தியர் வந்தார்" - "விவசாயி வந்தான்", "பிரதமர் வந்தார்" - "கூலித் தொழிலாளி வந்தான் என்றெல்லாம்தானே நம் மொழியில் சொல்ல முடிகிறது!

முழுமையான மனிதன் எப்படி இருப்பான்?

-மணிவேல் ருத்ரா, சின்ன செல்வகந்த.

ஒரு தொட்டி நிறைய மையை நிரப்பி. அதற்குள் மூழ்கி எழுந்தவனாக இருப்பான்!

'காவ்யாஞ்சலி' போன்ற அபத்தங்களை எப்படிச் சகித்துக்கொள்கிறீர்கள்?

-சந்தியா, நல்லூர்.

கையிலுள்ள 'றிமோட்' கருவி மூலம்.

உங்கள் கணிப்பில் சிறந்த கிரிக்கெட்




வீரராக யாரைச் சொல்வீர்கள்?

-எஸ்.சத்தியப்பிரியா, வவுனியா.

இன்றைய தேதிக்கு ரிக்கி பொன்டிங்தான்!

மூன்று விடுதலைப் புலி பெண் உறுப்பினர்கள் சுடப்பட்டதற்கு (அவர்கள் இறந்திருக்கவில்லை) தாங்கள் தாங்க முடியாத ஆத்திரம் அடைந்திருப்பதாக நோர்வே தரப்பினரிடம் முறையிட்டதோடு, தங்கள் சீற்றத்தையும் காண்பித்துப் பொங்கியெழுந்திருக்கும் புலிகள் அமைப்பினர், அதே காலத்தில் கிழக்கில் கொல்லப்பட்டிருக்கும் தயாநிதி என்ற குடும்பஸ்தர் பற்றி ஏன் எதுவும் பேசவில்லை? மக்களுக்காகச் செத்துப்போகவும் தயார் என்று இயக்கத்தில் சேர்ந்தவர்களின் உயிர்கள் பொன் போலக் கொண்டாடப்படவும், சாதாரண மக்களின் உயிர்கள் எந்தப் பெறுமதியுமற்றுப் போனதும் எதனால்?

-என்.றம்ஸான், புத்தளம்.

மன்னியுங்கள். நான் பத்திரிகையாளன். உங்கள் அளவுக்குத் துணிச்சல் எல்லாம் எனக்குக் கிடையாது.

'சுக்ரனி'ல் புதுமுகம் நதீஷா எப்படி?

-எஸ்.சிவபாலன், உடப்பு.

துணிச்சல் கட்டைதான். ஆனால் இதற்கு முன் தெலுங்கிலிருந்து டப்பிங் ஆன தமிழ்ப் படம் ஒன்றில் பார்த்த நினைவு.

ஒவ்வொரு ஒலிம்பிக்கிலும், முந்திய சாதனைகள் முறியடிக்கப்பட்டு வருகிறதே! மனித ஆற்றல் அதிகரித்து வருகிறதா? இது எதுவரைக்கும் செல்லும்?

-நா.மகேந்திரலிங்கம், சங்கானை.

தடைசெய்யப்பட்ட மருந்துகளால் மட்டுமல்ல, இதுவரை தடை செய்யப்படாமலிருக்கும் ஊக்க மருந்துகளாலும், விஞ்ஞான யுக்திகளாலும்தான் மனித சக்தி மேம்படுத்திக் காட்டப்பட்டு வந்திருக்கிறது. விளையாட்டில் இதையெல்லாம் மிகக் கறாராகத் தடைசெய்யத் தீர்மானித்து வருகிறார்கள். எதிர்காலத்தில் நிலைமை தலைகீழாகலாம்.

பள்ளி மாணவி மீது வாகனத்தை ஏற்றிக் கொன்ற அலட்சியம் மிகவும் கண்டிக்கப்பட வேண்டியது; அந்தச் சம்பவம் மிக வேதனைக்குரியது. ஆனால், அதற்காக யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்கள் துக்க ஆத்திரத்தினால் மட்டும் நிகழ்ந்தவையாகத் தோன்றவில்லையே! வெறியும் ஆவேசமும் எதற்கோ மக்கள் மீது வலிந்து ஏற்றப்படுவதாய்த் தெரியவில்லையா?

-இ.முருகநேசன், வவுனியா.

முதலில், எந்த விமர்சனத்தின் மூலமும் அந்தச் சிறுமியின் கொலை நியாயப்படுத்தப்பட்டுவிடக் கூடாது என்பதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். அதன் பிறகு, நீங்கள் கூறுகிற நெருடலுக்கு வரலாம். ஹிட்லர் தனது சுயசரிதையான 'மெய்ன் காம்ப்' நூலில், தங்கள் தேசியக் கட்சியின் அரசியற் திட்டங்களாக 14 அம்சங்களைப் பட்டியலிடுகிறார். அதில் 3ஆவது அம்சம் வருமாறு :

"பாமர ஜனங்களைத் தேசியமயமாக்க அரைகுறையான முறைகளுடன் திருப்தியடைந்துவிடக் கூடாது. அதிதீவிரமான முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். விஷத்தை விஷத்தினால்தான் முறிக்க முடியும். அது போல் தேசியத்திற்கு விரோதமான காளான்களைக் கடுமையான முறைகளால்தான் களைந்தெறிவது சாத்தியம். பாமர ஜனங்களுக்கு, பகுத்தறிவைக் கொண்டு உயர்ந்த கொள்கைகளை ஆராய்ச்சி செய்யும் ஆற்றல் இல்லை. ஒரு விஷயத்தில் அவர்களுக்கு நம்பிக்கையேற்பட்டுவிட்டால், பின்னர் அந்த நம்பிக்கையை அசைக்க முடியாது. எனவே அவர்களின் மனதில் உணர்ச்சியும் நம்பிக்கையுமேற்பட்டு, அவர்கள் வெறி கொண்டு செயலிலீடுபடும் படிச் செய்ய வேண்டும். அத்தகைய வெறியும் நம்பிக்கையுமே மகத்தான புரட்சிகளை உண்டுபண்ணியிருக்கின்றன. போராட்டமானது விரும்பத் தக்க ஓர் அம்சமெனக் கருதும்படி மக்களின் மனதைப் பக்குவப்படுத்த வேண்டும். நம்மீது எதிராளிகளுக்குள்ள துவேஷத்தை வரவேற்க வேண்டும். அதற்கு, பலாக்காரத்தையும் உபயோகிக்கத் தயங்கக் கூடாது. தங்கள் குறிக்கோளையடைய பாமர ஜனங்களின் மனதைக்

**சிந்தியா பதில்கள்**

கொள்ளை கொள்ள விரும்புவோர் இந்த மர்மத்தை அறிந்துகொள்ள வேண்டும்."

அடோல்ப் ஹிட்லர்தான் நம் மதிப்புக்குரிய ஆசான்! கிடைத்தால், அவரது நூலை முழுமையாகப் படியுங்கள். இது மட்டுமில்லை, இன் றைய நம் ஒவ்வொரு செயலுக்கும் விளக்கம் தெரிந்துவிடும்.

எந்த விஷயத்தையும் கதை வடிவில் சொன்னால், விளங்கிக்கொள்ள இலகுவாகவும், சுவாரஸ்யமாகவும் இருக்குமல்லவா?

-எஸ்.பி.பாலமுருகன், பதுளை.

என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. எஸ்.ராமகிருஷ்ணனின் கட்டுரைகள் எவ்வளவு தெளிவாகவும் சுவாரஸ்யமாகவும் இருக்கின்றன! ஆனால், அவர் கதைகள் வறட்சி மிகுந்து, வாசிக்க ஆயாசம் உண்டாக்குகின்றன. சமீபத்தில் நான் வாசிக்க முயன்று தோல்வியுற்ற ஒரு புத்தகம், அவரது "நெடுங்குருதி."

தனுஷ் 'தேவதையைக் கண்டேனி'ல் பிழைத்துக்கொண்டுவிட்டாரே?

-எம்.ஐ.எம்.ஜவாஹிர், திருகோணமலை.

கானா பொழிந்த தேவாவினதும், கிண்டல் மிளிர்ந்த வசனகர்த்தாவினதும் புண்ணியம்!

'தினமுரசு' இதழ்கள் ஒவ்வொன்றும் சூடு, சுவை, சுவாரஸ்யமுடன் இருப்பதற்கு என்ன காரணம்?

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

நீங்கள்தான்! நமக்குப் பிடித்த இதழ்கள் சூடும், சுவையும், சுவாரஸ்யமாயும் இருப்பது இயல்புதானே!

ஜி?

-என்.ஜனனி, உக்குவளை.

ஹி..... ஹி! (இன்னும் பார்க்கவில்லை).

பத்திரிகைகள், கட்டுரையாளர்கள் எல்லாம் மறுகருத்து எதுவுமில்லாமல் புலிகள் அமைப்பு சொல்லித் தருவதையே ஒரே குரலில் சொல்லி வருகின்றனரே ஏன்?

-ஏ.எம்.ஏ.அஸீஸ், காத்தான்குடி - 05.

முன்னொரு காலத்தில் ஒரு பூனை வாழ்ந்து வந்தது. அது நினைத்தது, 'சிங்கம்தான் காட்டிலுள்ள விலங்குகளிலெல்லாம் பலசாலி. நாம் என்றும் பலசாலிகளைப் பகைத்துக்கொள்ளாமலிருப்பதே நல்லது. ஆகவே நான் சிங்கத்தின் மனதையறிந்து நடந்துகொள்வதே புத்திசாலித்தனம்.' அவ்வாறே சிங்கத்திடம் நட்புக்கொண்டு பூனை வாழ்ந்து வந்தது. ஒருநாள் இருவரும் காட்டிற்குள் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, ஒரு யானை வந்தது. சிங்கத்திற்கும் யானைக்கும் சண்டை நடந்தது. யானை சிங்கத்தை தூக்கி எறிந்து கொன்றது. பூனை யோசித்தது. சிங்கத்தை விட யானையே பலம் பொருந்தியதாக உள்ளது. நாம் யானையிடம் சென்று நட்புக்கொள்வதே சாலச் சிறந்தது என்று யானையிடம் போய் நட்புக்கொண்டு வெகுகாலம் வாழ்ந்தது. ஒருநாள் அவர்களிருவரும் நடந்து செல்கையில், ஒரு வேட்டைக்காரன் எதிர்ப்பட்டான். அவன் தன் துப்பாக்கியால் யானையைச் சுட்டுக் கொன்றான். "அடடா, மனிதனல்லவா யானையை விடப் பலசாலியாக இருக்கிறான்" என்று அந்த மனிதனிடம் போய் நட்புக்கொண்டு, அவனோடு அவன் வீடு சென்றது. அவனது மனைவி வந்து அவனுடைய துப்பாக்கியை வாங்கிக்கொண்டு சென்றாள். அதைக் கண்டு பூனை யோசித்தது. "ஆ! இந்தப் பெண் அல்லவா எல்லோரையும் விடப் பலசாலியாக இருக்கிறாள். வேட்டைக்காரனிடமிருந்து துப்பாக்கியைப் பிடுங்கிவிட்டாள். அவன் எதிர்ப்புக் காட்டாமலே உள்ளே போய்விட்டானே!"

அந்த மனிதன் அறைக்குள் சென்று மேசையருகே அமர்ந்தான். அவள் அடுப்பங் கரைக்குச் சென்றாள். பூனையும் அடுப்பங் கரைக்குச் சென்றது. இனி எப்போதுமே தான் அங்கேயே இருக்கப் போவதாகப் பூனை முடிவு செய்தது.

அதனால்தான் நீங்கள் எப்போதும் பூனை அடுப்பங்கரையில் ஒரு பெண்ணின் காலடியின் கீழ் இருப்பதைப் பார்க்கிறீர்கள்.

# மக்களுக்கோர் உரிமை மடல்

மலை தடை கடந்து
புயலிடை எழுந்து!
இதோ உங்களுக்காக ஓர்
உரிமை மடல்!

உண்மை எதுவென உரத்த சிந்தனையில்
உங்கள் உன்னத வழிகாட்டி எழுதும்
உரிமை மடல்!

***இது***

***செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள்***

***இடர்படும் எம் தேசத்து மக்களுக்காக எழுதும்***

தொடர் மடல்!

அன்பான என் தேசத்து மக்களே!...

வணக்கம்!... உங்களோடு மனந் திறந்து பேசுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எம் தாயக தேசத்தைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் துயரங்கள் அகலவும், மகிழ்ச்சி மலர்கள் இங்கே மலர்ந்து செழிக்கவும், நாம் நடத்தும் தேடலில் மக்களாகிய உங்கள் கருத்தே பிரதானம்!


மக்களின் கருத்துக்களைச் சரிவர அறிந்துகொள்ளாத எந்தப் போராட்டமும் வெற்றி அடைந்ததாக வரலாறு இல்லை.

உங்கள் கருத்து எதுவென நாம் தேடுதல் நடத்தும் அதே நேரம், நாம் கொண்டிருக்கும் கருத்துக்கள் எவையென நீங்களும் தெரிந்திருக்க வேண்டும்! இந்த உயரிய எண்ணங்களின் வெளிப்பாடுதான் இந்த உரிமை மடலின் பிரதான நோக்கம்!

இவைகள் போதனைகள் அல்ல! போதிப்பதற்கு நான் ஒன்றும் போதனையாளனும் அல்ல. மாறாக. மக்களாகிய நீங்கள்தான் எமக்குப் போதனை யாளர்கள்! மக்களாகிய உங்களிடமிருந்து பெற்ற கருத்துக்களையும் மக்கள் என்ற சமுத்திரத்தில் நான் மூழ்கி எடுத்த அனுபவத் துளிகளையும் ‘செமுமையாக்கி மீண்டும் உங்களிடமே தருகின்றேன்!

உங்களது உரிமைகளுக்காகவே எழுந்து ‘எது வரினும் எதிர்கொள்வோம்!... எடுத்த பயணத்தை இடையில் நிறுத்தோம்!..’ என்ற உரத்த சிந்தனைகளோடு உங்கள் மத்தியில் என்றும் இருப்பது ஈ.பி.டி.பி.!

ஈ.பி.டி.பி.யின் குரலாக மட்டுமல்ல நெரிக்கப்பட்ட



எம்மவர்களின் மாற்றுக் குரல்வளைகளுக்கு மத்தியிலும், மக்களை மறந்து திசை வழி மாறிப் போனவர்களுக்கு மத்தியிலும், பிடுங்கி எறியப்பட்ட நம்பிக்கைகளின் தளத்தில் இன்னமும் எஞ்சியிருக்கும் ஆணி வேரிலிருந்து, மக்களாகிய உங்களது உரிமைக் குரலாக, நிமிர்ந்தெழுந்து நியாயங்களைக் கேட்கும் நீதியின் குரலாக, எமது குரல் என்றும் ஒலித்துக்கோண்டே இருக்கும்!

இவைகள் எனது சுய விளம்பரத்திற்கான கருத்துக்கள் அல்ல!.. சுயலாப அரசியலுக்கான கருத்துக்களும் அல்ல!.. நானும் இருக்கின்றேன் என்பதை அடையாளப்படுத்துவதற்கான கருத்துக்களும் அல்ல!.. நான் கருத்துக் கூற வேண்டும் என்ற வெறும் சம்பிரதாயங்களுக்கான ஏற்பாடுகளும் அல்ல.

எமது கட்சியின் பிரதான ஆயுதம் என்பது நாம் கொண்டிருக்கும் கருத்துக்கள் மட்டும்தான்! அது மக்களாகிய உங்களை உரிய முறையில் வந்தடைய வேண்டும்! அப்போதுதான் எமது இலக்கை நோக்கிய பயணத்தின் திட்டங்களையும் கருத்துக்களையும் பற்றிக்கொண்டு நீங்கள் சரியான திசை வழியில் பயணிக்க முடியும்! மாற்றமொன்றை நிகழ்த்து வதற்கான மார்க்கத்தினை நீங்கள் தேரந்தெடுக்க முடியும்! ஆனாலும் எமது கருத்துக்கள் மக்களாகிய உங்களை வந்தடைவதில் பல தடைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

மக்களாகிய உங்களது நாளாந்தப் பிரச்சினைகள் குறித்து நாம் கொண்டிருக்கும் நிலைப்பாடும், அது குறித்த எமது செயற்பாடும் ஊர் பார்த்த உண்மைகளாக இன்னமும் உங்கள் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. அதற்கு எம்மால் முடிந்த சேவைகளே சாட்சியங்களாகவும் உள்ளன!

ஆனாலும் மக்களாகிய உங்களது உரிமைகளுக்காக எந்த வேலைத்திட்டத்தினை நாம் கொண்டிருக்கிறோம்?... அதற்காக எந்த முன்னெடுப்புகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம்? கடந்த காலங்களில் நாம் எந்தெந்த முன்னெடுப்புகளை எடுத்திருந்தோம்?.. இவை குறித்த எமது கட்சியின் கருத்துக்கள் உங்களை எட்டிவிட முடியாதபடி உங்களுக்கும் எங்களுக்கும் இடையே தடை போட்டு நின்று சிலர் தர்பார் நடத்துவதை நீங்கள் அறிவீர்கள்!

நாம் இன்று ஜனநாயக அரசியல் களத்தில் நின்று எம்மால் முடிந்த முன்னெடுப்புக்களை முன்னோக்கிய பாதையில் மெல்லென நகர்த்தி வருகின்றோம்! ஏன் செய்கின்றோம்?... எதைச் செய்கின்றோம்?... இந்த வினாக்களுக்கு நாம் கூறும் விடைகள் முழுமையாக உங்களை வந்தடைவதில்லை.

எமது கருத்துகள் வெளிச்சத்திற்கு வர முடியாதபடி அவைகளை இருட்டில் தள்ளிவிடும் முயற்சிகள் நடந்துகொண்டிருப்பதால் தாம் சொல்வதும் தாம் நினைப்பதும் மட்டும்தான் சரியென அடம்பிடிக்கும் அராஜகம் தலையெடுத்திருப்பதால் - இதுதான் சரி!.. இதை மட்டும் கேள்!.. இதைத் தவிர வேறொரு கருத்தும் இங்கில்லை!..’ என்ற கருத்து திணிப்புகள் நடந்துகொண்டிருப்பதால்... இங்கே உண்மைகள் ஊமையாக்கப்படுகின்றன.

எமது சிந்தனைகள் சரியானவையா?... தவறானவையா?... எமது கருத்துக்கள் சரியானவையா?... தவறானவையா?... நாம் எடுக்கும் தீர்மானங்கள் மக்களது நலன் சார்ந்தவையா?... நலன் சாராதவைகயா?... இவற்றைத் தீர்மானிப்பது மக்களாகிய நீங்கள் மட்டும்தான்!

இந்த அதிகாரங்களை யாரும் கையிலெடுத்து, ‘தாங்கள்தான் தீர்மானிப்பவர்கள்’ என்று தான்தோன்றித்தனமாகச் செயற்படுவார்களேயானால், அது அவர்களது சுயலாப அரசியல் நோக்கமே அன்றி மக்கள் நலன் சார்ந்த விடயம் அல்ல.

கொண்டிருக்கும் கருத்தும் கொள்கையும் எவையென மக்களிடம் கூற......

இங்கே ஒவ்வொரு கட்சிக்கும் சுதந்திரம் வேண்டும்!

அங்கொன்றும் இங்கொன்றுமாய் பரந்த தளத்திலிருந்து விரிந்த கருத்துக்கள் வரும்போதுதான் நீங்கள் தெரிவு செய்யவும் தீர்மானம் எடுக்கவும் ஒரு ஆரோக்கியமான சூழல் உங்கள் முன் பரந்து விரிந்திருக்கும்.

மரக்கறிக் கடைக்குப் போனால் நீங்கள் தெரிவு செய்கின்றீர்கள்!..

மீன் சந்தைக்குப் போனால் நீங்கள் தெரிவு செய்கின்றீர்கள்!..

புடைவைக் கடைக்குப் போனால் நீங்கள் தெரிவு செய்கின்றீர்கள்!..


ஆகவே, அங்கு பலதும் பத்தும் இருப்பதையே நீங்கள் விரும்புகிறீர்கள்!

அது போலவே அரசியல் களத்திலும் உங்கள் சிந்தனைகளுக்கும் தீர்மானங்களுக்கும் என்று பல தரப்பு நியாயங்களும் கருத்துக்களும் இருக்க வேண்டிய கட்டாயத் தேவை இருக்கின்றது. ஏனெனில், இந்த அரசியல் களம் உங்களுக்கானது? உங்களது விடியலுக்கானது?

ஒவ்வொரு தனி மனிதனும் சுயமாகச் சிந்திப்பதற்கும், சிந்தித்தவற்றைப் பிறருக்குச் சொல்வதற்கும் சுதந்திரம் உண்டு! அதே போல் ஒவ்வொரு கட்சிக்கும் அந்தச் சுதந்திரம் உண்டு!

அந்த வகையில் ஈ.பி.டி.பி.யினராகிய நாமும் எமது மக்களின் நிரந்தர சமாதானத்திற்காகவே நடைமுறைச் சாத்தியமான வழி முறையில் அதற்கேற்ற கருத்துக்களை மட்டும் உங்களிடம் தெரிவிக்க விரும்புகிறோம்!

கருத்துக் கூறும் உரிமைகள் இங்கே மறுக்கப்படுவதால் எமது இலட்சியக் கனவுகள் சிதைக்கப்படுகின்றன. சமாதானம் பின்தள்ளப்படு கின்றது. எமது உரிமைகளை அடைவதற்கான பாதைகள் அடைபட்டுப்போகின்றன. பிறக்க வேண்டிய



விடியல் பின்தள்ளப்படுகின்றது.

ஆகவே, சகதியில் புதைந்து நகர முடியாமல் இருக்கும் அர்த்தமுள்ள அரசியல் தீர்வுக்கான முன்னெடுப்புகளை முன்னோக்கி நகர்த்திட.......

காலத்தை விரயம் செய்யாமல் விரைவான விடியலைத் தேடும் திட்டங்களோடு.......

அமைதியும் சமாதானமும் எம் தாயக மண்ணில் விரைந்து பிறக்க......

ஜனநாயகம்... பன்மைத்துவம்... இவை மட்டற்ற அளவில் மலர்ந்து செழிக்க......

மீண்டும் ஒரு உரிமை மடலோடு
உங்களைச் சந்திப்பேன்.

***திட்டங்கள் எமது!... தீர்மானிப்பது மக்களாகிய நீங்கள்!...***

***தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!...***

***என்றும் நாம் மக்களுக்காக!...***


***செயலாளர் நாயகம்***
***கே.என். டக்ளஸ் தேவானந்தா.***

***நன்றி :– இதய வீணை***




டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் தனிப்பட்ட வீரர்கள் படைத்துள்ள சாதனைகள் சிலவற்றைக் கடந்த வாரம் பார்த்தோம். இன்னும் சில சாதனை வீரர்களைப் பற்றி இந்த வாரம் பார்ப்போம்.

இங்கிலாந்தில் தோன்றிய சிறந்த துடுப்பாட்ட வீரர்களுள் ஒருவரான வோல்ட்டர் (வொலி) ஹெமன்ட் 1927 - 28ஆம் வருடங்களில் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக ஜொஹெனெஸ்பரக் மைதானத்தில் தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் கலந்துகொண்டு 51 ஓட்டங்களைப் பெற்றதுடன், 5 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்.



ஜாவெட் மியண்டாட்

1946 - 47ஆம் வருடங்கள் வரையில் இங்கிலாந்து அணி சார்பில் 85 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்ட இவர், 7,249 ஓட்டங்களைப் பெற்று பந்துவீச்சில் 82 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார்.

வொலி ஹெமன்ட் டெஸ்ட் போட்டிகளின்போது 22 சதங்களையும், 24 அரைச் சதங்களையும் பெற்றுள்ளார். 110 ‘கெட்ச்’களைப் பிடித்துள்ள இவர் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்ட 336 ஓட்டங்களே அதி கூடிய ஓட்டங்களாகக் கருதப்படுகின்றன.

இங்கிலாந்து அணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய எம்.ஜே.சீ. எலெம் எனும் பந்துவீச்சாளர், 1930ஆம் வருடம் நியூசிலாந்து அணிக்கெதிராக தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் கலந்துகொண்டு ஐந்து பந்துகளை மாத்திரம் வீசி, மூன்று விக்கெட்டுகளை (ஹெட்ரிக்) தொடராகப் பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் மேலும் ஒரு விக்கெட்டைப் பெற்றுக்கொண்டார்.

எனினும் இவர் இங்கிலாந்து அணி சார்பில் 5 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரமே கலந்து கொண்டுள்ளார். இதன்போது 14 விக்கெட்டுகளை அவர் கைப்பற்றிக்கொண்டுள்ளார்.

நியூசிலாந்து அணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய எச்.டீ. ஸ்மித் எனும் பந்துவீச்சாளர் தனது முதலாது டெஸ்ட் போட்டியில் கலந்துகொண்டு இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஈ.பேன்டலின் விக்கெட்டை தனது முதலாவது பந்தில் பெற்றுக் கொண்டார். இது இவர் கலந்துகொண்ட ஒரே ஒரு டெஸ்ட் போட்டியும் பெற்றுக்கொண்ட ஒரேயொரு விக்கெட்டுமாகும்.

இங்கிலாந்து அணியைச் சேர்ந்த சீ. எஸ். மெரியட் எனும் பந்துவீச்சாளர் 1933ஆம் வருடம் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் கலந்துகொண்டு 11 விக்கெட்டுகளைப் கைப்பற்றிக்கொண்டார்.

இது இவர் பங்குபற்றிய ஒரேயொரு போட்டியுமாகும். 96 ஓட்டங்களைக் கொடுத்தே இவர் 11 விக்கெட்டுகளைப் கைப்பற்றிக்கொண்டார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். முதலாவது இன்னிங்ஸில் 59 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளை இவர் கைப்பற்றிக்கொண்டார்.

இதன் பின்னர் இவர் இங்கிலாந்து அணி சார்பில் விளையாடுவதற்கு அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

மேற்கிந்திய கிரிக்கெட் அணி டெஸ்ட் தகுதியைப் பெற்றுக்கொண்டபோது எச்.எச்.எச் ஜோன்சன் எனும் வீரருக்கு வயது 37 ஆகும்.

1947 - 48களில் இங்கிலாந்து அணிக்கு எதிராக கிங்ஸ்டன் மைதானத்தில் தனது முதலாவது டெஸ்ட் போட்டியின்போது, முதலாவது இன்னிங்ஸில் 41 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும், இரண்டாவது இன்னிங்ஸின்போது 55 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் கைப்பற்றிக்கொண்டார்.

இவர் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் 3 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம் கலந்துகொண்டு 13 விக்கெட்டுகளைக் கைப்பற்றிக்கொண்டுள்ளார்.

பி.ஜே. பெதரிக் என்னும் நியூசிலாந்து அணியின் பந்துவீச்சாளர் பாகிஸ்தான் அணிக்கு எதிராக தனது டெஸ்ட் போட்டியில் கலந்துகொண்டு தொடராக மூன்று விக்கெட்டுகளை (ஹெட்ரிக்) கைப்பற்றிக் கொண்டார்.

பாகிஸ்தானில் தோன்றிய அதி சிறந்த வீரர்களுள் ஒருவரான ஜாவெட் மியண்டாட் கலந்துகொண்ட முதலாவது டெஸ்ட் போட்டியும் இதுவாகும் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இப் போட்டியின்போது மியண்டாட் முதலாது இன்னிங்ஸில் 163 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களையும் பெற்றார். இப் போட்டி 1976ஆம் வருடம் ஒக்டோபர் மாதம் பாகிஸ்தான் லாஹோர் மைதானத்தில் இடம்பெற்றது.

தனது முதலாவது டெஸ்ட் போட்டியின்போது மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றிக்கொண்ட பெதரிக் நியூசிலாந்து அணி சார்பில் 6 போட்டிகளிலேயே பங்கு பற்றியுள்ளார். இதன்போது 10 விக்கெட்டுகளை அவர் கைப்பற்றிக்கொண்டுள்ளார். இதே நேரம் இவர் மேற்படி அணி சார்பில் ஒருநாள் போட்டிகளில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஜாவெட் மியண்டாட்டின் கிரிக்கெட் வரலாறு விசித்திரமானது. 124 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள இவர், 23 சதங்களையும் 43 அரைச் சதங் களையும், பெற்றுள்ளார். இதன்போது அவர் 8,832 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். அதிகூடுதலான ஓட்டம் 280 ஆகும்.

**- மைந்தன்**

***‘எந்தக் கிழமையில் பிறந்தீர்கள்’ ஆக்கம் அடுத்த வாரம் வரும்!***

# உலகை வியக்க வைத்தவர்கள்

# மைக்கல் ஃபாரடே (1791 - 1867)

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

இரு காரணங்களுக்காக இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டுபிடிப்பாகப் போற்றப்படுகிறது. முதலாவதாக, மின்காந்தவியல் பற்றிய கோட்பாடு அறிவுத் திறனில் ஃபாரடேயின் விதி அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. இரண்டாவதாக, தொடர்ச்சியான மின்னோட்டத்தை உற்பத்தி செய்வதற்கு மின்காந்தத் தூண்டலைப் பயன்படுத்த முடியும். இதனை நிரூபிக்க ஃபாரடே தாமே முதலாவது மின்னாக்கப் பொறியினைத் தயாரித்துச் செயல் விளக்கம் செய்து காட்டினார். இன்று நமது நகரங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் மின்விசையை வழங்குகிற நவீன மின்னாக்கப் பொறிகள், ஃபாரடேயின் சாதனைத்தை விட மிகவும் மேம்பட்டவையாயினும், அவை அனைத்தும் மின்காந்தத் தூண்டல் என்னும் ஒரே தத்துவத்தின் அடிப்படையில் அமைந்தவையாகும்.

வேதியியல் துறையிலும் ஃபாரடே முக்கிய சாதனைகளைப் புரிந்துள்ளார். வாயுக்களைத் திரவமாக்குவதற்கான முறைகளை அவர் வகுத்தார். பென்சீன் போன்ற பல்வேறு வேதியியற் பொருள்களையும் அவர் கண்டுபிடித்தார். மின்னோட்டங்களின் வேதியியல் விளைவுகளை ஆராயும் மின்வேதியியல் துறையில் அவர் ஆற்றிய பணியும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.



மைக்கேல் ஃபாரடே

ஃபாரடே மிகக் கவனமாகப் பரிசோதனைகள் நடத்தி மின்பகுப்பாய்வு பற்றி இரு விதிகளை வகுத்தமைத்தார். இந்த விதிகள் ஃபாரடேயின் பெயரிலேயே அழைக்கப்படுகின்றன. இவ் விதிகள், மின் வேதியியலுக்கு அடித்தளமாக அமைந்துள்ளன. மின் வேதியியல் துறையில் பயன்படுத்தப்படும் நேர்முனை, எதிர்முனை, மின்முனை, இயனி என்பன போன்ற முக்கிய கலைச் சொற்களை உருவாக்கிப் பிரபலப்படுத்திய பெருமையும் ஃபாரடேயைச் சேரும்.

விசையின் காந்தக் கோடுகள். விசையின் மின்கோடுகள் என்னும் முக்கியமான கொள்கையை இயற்பியலில் புகுத்தியவர் ஃபாரடேயேயாகும். காந்தங்களுக்கு முக்கியத்துவமளிக்காமல், காந்தங்களுக்கிடையிலான காந்தப் புலத்திற்கு முக்கியத்துவமளிப்பதன் மூலம் பல முக்கியமான முன்னேற்றங்கள் ஏற்படுவதற்கு ஃபாரடே வழி வகுத்தார். ஒரு காந்தப் புலத்தின் வழியாக மின்முனைப்பாக மூட்டிய ஒளியைச் செலுத்தினால் அந்தக் காந்தப் புலத்தின் மின் முனைப்பாக்கம் மாறுதலடைகிறது என்பதையும் ஃபாரடே கண்டறிந்தார். ஒலிக்கும் காந்தத்திற்குமிடையே ஒரு தொடர்பு உண்டு என்பதை இந்தக் கண்டுபிடிப்பு முதன்முதலில் உணர்த்தியது. அந்த வகையில் இக் கண்டுபிடிப்பு முக்கியமான ஒன்றாகும்.

ஃபாரடே அறிவுத் திறன் வாய்ந்தவராக மட்டும் இருக்கவில்லை. அவர் அழகிய தோற்றமுடையவராகவும் இருந்தார். அறிவியல் குறித்து கேட்போரைப் பிணிக்கும் வகையில் சொற்பொழிவாற்றும் திறனும் பெற்றிருந்தார். எனினும், அவர் மிக மிக எளிமையாக வாழ்ந்தார். புகழ், பணம், விருதுகள் ஆகியவற்றை அவர் பொருட்படுத்தவே இல்லை.

வீரத்திருத்தகைப் பட்டம் வழங்கப்பட்டபோது அதை ஏற்க மறுத்துவிட்டார். இயற்கையறிவை வளர்ப்பதற்காக நிறுவப் பெற்றிருந்த பிரிட்டிஷ் ராயல் கழகத்தின் தலைவர் பதவியை ஏற்கவும் மறுத்துவிட்டார். அவர் நீண்ட காலம் மகிழ்ச்சியான இல்லற வாழ்க்கை நடத்தினார். ஆனால், அவருக்குக் குழந்தைகள் இல்லை. அவர் 1867இல் லண்டன் அருகே காலமானார்.

அடுத்த வாரம் போப்பாண்டவர் இரண்டாம் அர்பன் வியக்க வைப்பார்.

# காதிலை பூ கந்தசாமி

நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
-காதில பூ கந்தசாமி-

வவுனியாவில நடந்த சம்பவத்தைக் கேள்விப்பட்டுப் பதறிப்போயிட்டேனுங்கோ! கண்காணிப்புக் குழுவிலயே பெடியள் கை வைக்கிற அளவுக்கு நிலைமை மோசமா யிட்டுது. இவைதான் ஏதோ இசகுபிசகா நடந்துகொண்டிருப்பினமோ.... இல்லாட்டில் பெடியள் தங்கட முன் கோவத்தைப் பொறுத்துக்கொள்ள ஏலாம ஏதும் அவசரப்பட் டிட்டாங்களோ எண்டு குழம்பிப்போட்டு.... ரெலிபோனை மேசையால எடுத்து மடியிலை வச்சுக்கொண்டு சுழற்றிறன்... சுழற்றிறன் கண்காணிப்புக் குழுக்காரர் வாய் திறக்கினமில்லை. எங்கட பத்திரிகைகளும் ....என்ன ஏதெண்டு ஒண்டையும் வெளியால சொல்லாம விட்டிட்டினம். அட எங்கட மாணிக்கத்தார் சரி பி.பி.சி.யில சொல்லுவார் எண்டு எதிர்பார்த்தன். அவரும் மௌன விரதமிருக்குமாப் போல காலடிச் சத்தம் கூடக் கேட்காதளவுக்குப் பவ்வியமா நடந்து கொண்டிருக்கிறார். எல்லாரும் உப்பிடி வரி வரியா விசுவாசத்தோடை வாழ்ந்திட்டுப் போறதெண்ட முடிவோடை இருந்திச்சின மெண்டால் சூப்பரோ சூப்பர். இதை விட எங்கட எதிர்காலச் சந்ததிக்குச் செய்யிற பேருதவி வேறெதுவுமாக இருக்க முடியா துங்கோ....

சரி, எங்கட மௌனச் சாமிமார் வாய்ப் பூட்டோடை இருக்கினமெண்டதுக்காக நானும் இருந்திட முடியாதுங்கோ. அப்பிடி இருந்தனெண்டால் அடுத்த நிமிஷம் என்ர தலை வெடிச்சுச் சுக்கு நூறாகிப் போகும். சொன்னால் அவங்கட தலை, சொல்லாட்டி என்ர தலை. பாத்தியளோ நாட்டின்ர நிலைமை எப்பிடி இருக்குதெண்டு.

என்ர தலைக் கறுப்பைக் கண்டால் முன்னம் பழகின நண்பர்கள் தங்கட சமகால அரசியலெண்ட மொட்டை வாளோடை வந்து ஆரம்பிச்சாங்களெண்டால் இருக்கை சூடு கிளம்பினாலும் விடமாட்டாங்கள் எண்டிட்டு ஆருக்கும் சொல்லாம நேரா வவுனியாவுக்குப் போனன். கண்காணிப்புக் குழு ஒப்பீஸ்"க்கே போனன். அங்க என்னடாவெண்டால் பொலிஸ் நிண்டுகொண்டு உள்ள விடுகுதில்லை. நானும் அது இதெண்டு சொல்லிப் பாத்தன். ம்...ஹும்.... விடமாட்டினமாம். என்னடாப்பர வம்பாப் போயிட்டுது. பொலிஸ் ஸ்டேஸ னுக்குள்ள போறதெண்டாலே இத்தனை கெடுபிடியா இருக்காதே.

இங்க கண்காணிப்புக் குழுவின்ர ஒப்பீஸ்"க்குள்ள போக விடுகினமில்லை. எனக்கு ஒரு சந்தேகம்..... ஒருவேளை மாற்று இயக்கக்காரரின்ர ஒப்பீஸோவெண்டு போட் டைப் பாத்தன். அதுவுமில்லை. ஏனெண்டால் உந்த ஒப்பந்தத்துக்குப் பிறகு அவையளிட்டை இருந்த கருவிகளை வாங்கிப்போட்டு பொலிஸ்தான் பாதுகாப்புக் குடுக்குது எண்டும் ஒரு நினைப்புத்தான்.

தாங்கள் கண்காணிப்புக் குழு எண்டு கொடியும் கையுமாக இங்கிலிஸ் சப்பிக் கொண்டு திரிஞ்சிச்சினம். பெடியள் ஒரு மார்க்கமானவையள் எண்டு எவ்வளவோ சொல்லியும் இடங் கொடுத்திச்சினம். பெடியள் விடுவினமே! நல்லா ஆப்பை இறுக்கி விட்டிட்டினம். இப்பதான் தாம் தூமெண்டு துள்ளினம். இப்ப துள்ளி என்ன பிரயோசனம்? அவை ஆக்களைப் பிடிப்பினம். இல்லை யெண்டால் கடத்துவினம். அதுகளை ஒரு பதிவா எழுதிப்போட்டு வேலையைப் பாத்துக் கொண்டிருக்காம, செக் பண்ணுறதுக்காக அவையின்ர அரசியல் ஒப்பீஸ்"க்குப் போயிருக்கினம். பெடியங்கள் விடயில்லை. உதத்தானே எங்கட ஆக்கள் சொல்லுவினம் "பெடியள் விடாங்கள்" எண்டு. பிறகென்ன வார்த்தைகளால கிள்ளுப்பட்டிருக்கினம். எங்கட பெடியளுக்குத் துவக்குத் தூக்கிக் கொஞ்சம் நீண்ட கையெல்லோ! லேசா வெள்ளைக்காரர் மேல கையை வச்சுப் போட்டினம். அதை ஒரு குற்றமெண்டு வெள்ளைக்காரர் நினைச்சுப்போட்டார். கையை வச்ச பெடியள் இனிச் சும்மா இருக்கமாட்டாங்கள் எண்ட பயத்திலை உடன பொலிஸின்ர காவல் வேணுமெண்டு கேட்டிருக்கினமாம். அதாலதான் இப்ப பொலிஸ் பாதுகாப்புத் தீவிரப்படுத்தப் பட்டிருக்குதெண்டு பொலிஸார் சொல்லினம். அடப் பாவமே! கண்காணிப்புக் குழுவுக்கே காவல் தேவையெண்டால் சாதாரண சனத்தின்ர நிலைமை எப்பிடி இருக்குமெண்டு லேசா யோசிச்சுப் பாருங்கோ. இந்த இலட்சணத்திலதான் நாட்டில போர் நிறுத்தம் பொழுது போக்காக இருந்துகொண்டிருக் குதுங்கோ.

கண்காணிப்புக் குழுவை யாரெண்டாலும் தாக்கினால் அதுக்கு எப்பிடி அக்ஷன் எடுக்கிறதெண்டதில பாரிய குழப்பமாக் கிடக்கு. ஏன் தெரியுமோ? ஒப்பந்தத்தில இதைப் பற்றி ஒண்டையும் குறிப்பிடயில லையாம். அதால இதை ஒரு ஒப்பந்த மீறலாக அறிவிக்க ஏலாது. மரண விசாரணை அதிகாரி சொல்லுமாப் போல, பெடியள் கோவப்பட்டுத் தாக்கிப் போட்டினம் எண்டு நினைச்சுக்கொள்ளுங்கோ. கோவிந்தா! கோவிந்தா! நாளைக்கு இனந்தெரியாத நபரால ஒரு வெள்ளைக்காரர் சுடப்படாமல் இருந்தாச் சரிதான். ஏன் சொல்லுங்கோ! அப்பிடி ஒண்டு நடந்தாலும் ஆச்சரிய மில்லையுங்கோ.....!

யாவும் கலப்படமற்ற கற்பனை


# இந்த வாரம் உங்கள் பலன்

(10.03.2005 தொடங்கி 16.03.2005 வரை)


சோதிட மாமணி
தில்லை

## இந்த வாரக் கிரக நிலை

கும்பம் - சூரியன், வெள்ளி, மீனம் - புதன். மேடம் - இராகு, மிதுனம் - சனி
கன்னி - வியாழன், துலாம் - கேது, தனு - செவ்வாய்
சந்திரன் மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.



**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் உயர்ச்சி, பலவித நன்மை, காரியானுகூலம், உயர்ந்த நட்பு, குடும்ப சகாயம், உறவினர் உதவி, உத்தியோக நன்மை, மாணவர் கல்வி உயர்ச்சி, புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.




**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)
தொழில் அலைச்சல், செலவு மிகுதி, பெரியோர் நட்பு, கௌரவம், உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.




**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் மந்தம், வீண் யோசனை, பணக் கஷ்டம், அன்னியர் தொல்லை, குடும்ப கலகம், மனத் துயர், உத்தியோகம் சிரமம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.




**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)
தொழில் மாற்றம், வீண் துயர், வெளியிட வாழ்க்கை, மனக் குறை நீங்கும், குடும்ப மேன்மை, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.




**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)
தொழில் சிறப்பு, துயர் நீங்கும், உயர்ந்த நிலை, உறவினரால் கெடுதி, உத்தியோகம் சிரமம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.




**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் கஷ்டம், வீண் விரயம், பிரயாண மிகுதி, தேக சுகம் பாதிப்பு, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகம் சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.




**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் நன்மை, பிரயாசை மிகுதி, உறவினர் கலகம், வீண் குறை கேட்டல், உத்தியோக கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.




**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் மாற்றம், பணச் செலவு, கடன்படல், இனசன மேன்மை, உத்தியோகம் சிரமம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.




**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் நன்மை, மனக் குறை நீங்கும், அன்னியர் சகாயம், பெரியோர் பகை, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.



**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)
தொழில் நன்மை, மனக் குறை நீங்கும், பண வரவு, குடும் சுகம், பிள்ளைகளால் மகிழ்ச்சி, உத்தியோகக் கஷ்டம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம் :- 03.



**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)
தொழில் நன்மை, மனக் குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.



**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)
தொழில் அலைச்சல், மனக் கவலை, பணியாளர் பகை, அற்ப சுகம், குடும்பச் சிறப்பு, பிள்ளைகளால் தொல்லை, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் சீற்றம், மாணவர் கல்வி குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)




# இது எப்படி?


இளமைப் பருவத்தில் அழகாய் இருக்கும் நாம், வயது முதிர்ந்ததும் எப்படி இருப்போம் என்று யாருக்கும் தெரிவதில்லை. அந்த வகையில் வயது முதிர்ந்ததும் பிரபல கிரிக்கெட் வீரர்கள் எவ்வாறு இருப்பார்கள் என்று ஒரு சிறிய கிரா:பிக் தோற்றமே இது.

# செவ்வாயில் சுட்டது


பூமியில் வாழ்ந்து அலுத்துவிட்ட மனிதன் பல வேற்றுக் கிரகங்களில் தனது வாழ்க்கை முறைகளை மேற்கொள்வதற்கு எத்தனித்ததன் விளைவே இது. அருகில் உள்ள படங்கள் யாவும் செவ்வாய்க் கிரகத்திற்குரிய செய்மதிப் படங்களாகும்.

01. மிகப் பெரிய மணல் படிவுகள் இவை. பூமியில் உள்ள பாலைவனப் பள்ளத்தாக்குகளுக்கு இவை ஒப்பானவை.
02. செவ்வாயின் வட துருவத்தில் உறை நிலையிலுள்ள காபனிரொட்சைட் ஆகும். இது ஒருபோதும் அழிவதில்லை என்பது குறிப்பிடத் தக்கது.
03. ஒலிம்பஸ் மலை முகடுகள் போல் தோற்றமளிக்கும் இது செவ்வாயில் எரிமலை இருந்திருக்கலாம் என்பதற்கு ஆதாரமாகும்.
04. செவ்வாயின் மேற்பரப்பை ஆராயும் முகமாக கருவிகள் கொண்டு துளைக்கப்பட்ட துளையாகும்.
05. துணுக்குக்காட்டிக்குரிய நீர்க் குமிழ்கள் இவை. இன்னும் உறை நிலையிலேயே காணப்படுகின்றன.
06. செவ்வாயின் வளிமண்டலத்துடன் கூடிய முகில் கூட்டங்களே இவை.
07. இந்தக் காட்சி அண்மையில் அரிசோனாவைத் தாக்கிய வெள்ளப்பெருக்குப் போன்று உள்ளது. இச் சான்றுகளை வைத்து செவ்வாய்க் கிரகத்திலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கலாம் என்கின்றனர்.
08. கூடைப் பந்து அளவிலான விண் கல் இது. இதைச் சுற்றி இரும்பும் நிக்கலும் காணப்படுகின்றன. வேற்றுக் கிரகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது உலோகம் இதுவாகும். இவற்றையெல்லாம் வாசித்துக்கொண்டிருக்கும்போதே செவ்வாயில் ஒரு காணியை வாங்கி விடுங்கள். செவ்வாயில் மனிதன் வாழும் காலம் வெகு தூரத்தில் இல்லை.


1



2


3


4



5

6



7

8


## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து

மட்டக்களப்பைச் சேர்ந்த சுதா திருகோணமலையைச் சேர்ந்த ஜெயகலா தம்பதிகளின் **செல்வப் புதல்வன் ரக்ஷிகன்** தனது முதலாவது பிறந்த நாளைக் கொழும்பில் 11.03.2005இல் கொண்டாடுகிறார். இவரை அம்மா - அப்பா, அம்மம்மா - அம்மப்பா, அப்பப்பா - அப்பம்மா மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- (சுதா) அப்பா.



செல்வன் ரக்ஷிகன்

11.03.2005

# விருது ஆஸ்கார் விருது

**மி**க உயரிய விருதாகக் கருதப்படும் ஹாலிவூட்டின் 'ஆஸ்கார் விருது' வழங்கும் வைபவம் சென்ற வாரம் இடம்பெற்றது. அதியிக்கத் தக்க விதமாக, எதிர்பாராத நபர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. மிக அதிகளவான விருதுகளை அள்ளிச் சென்ற திரைப்படமாக 'த மில்லியன் டொலர் பேபி' திரைப்படம் கருதப்படுகிறது. அந்த வகையில் சிறந்த நடிகருக்கான விருதை அமெரிக்க கறுப்பு இனத்தவரான ஜெமி:பொக்ஸ் என்பவரும், நடிகைக்கான விருதினை ஹிலாரி சுவான்க் என்பவரும் பெற்றுக்கொண்டனர். இருவரும் விருது வாங்கிய களிப்பில் காணப்படும் காட்சி.



